
சுவடி : 41
ஏடு : 5
நவம்பர் 2017
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# இந்தியாவை உண்மையான கூட்டாட்சியாக மாற்றி அமைப்போம், வாரீர்!



இந்தியா முழுவதையும் செயல்படுகள மாகக் கொண்டால்தான் பெரியார் கொள்கை வெற்றி பெறும். இந்தியாவை ஒரு கூட்டாட்சி யாக அமைக்க முடியும். அப்போதுதான், சாதியைப் பாதுகாக்கிற-பழைய பழக்கவழக் கத்தைப் பாதுகாக்கிற அரசமைப்பை மாற்ற முடியும்; மதச்சார்பற்ற அரசை நிறுவி, மதச் சார்பற்ற கல்வியைத் தரமுடியும்; சமதர்ம ஆட்சியை அமைக்க முடியும். அப்போது தான், பின்கண்ட ஈனநிலையை மாற்ற முடியும்.

1. பிறவி வருண சாதிகள் வடஇந்தியாவில் நான்கு. பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன்; தென்னாட்டில் கலியுகத்தில் இரண்டு மட்டுமே - பிராமணன், சூத்திரன்.

இவர்கள் கூடி உண்ணுவது இல்லை; வருணம் மாறித் திருமணம் செய்துகொள்வது நடைபெறுவதில்லை.

2. புராணங்களின்படி, வருணம் மாறித் திருட்டுத்தனமாகக் கலந்து பிறந்ததால் உண்டான உள்சாதிகள் 6,700. இவர்கள் ஒருவர் வீட்டில் ஒருவர் உண்ணுவது இல்லை. உள்சாதி மாறித் திருமணம் செய்து கொள்ளுவது இல்லை.

**அதன் விளைவாகவே, இந்து மதத்தில் மனித சமத்துவம் வர-வர வில்லை; தமிழன் (அ) திராவிடன் என்ற இன உணர்வு வளரவில்லை.**

தமிழ்த் தேசிய இன விடுதலைக்கு இவை பெருந்தடைகளாக உள்ளன.

திராவிடர் இயக்க - தமிழ்த் தேசிய இயக்கத்தவர்கள் இவற்றை நன்கு உணர வேண்டும்.

1. தந்தை பெரியார் 21.12.1922இல் திருப்பூரில், காங்கிரசு மாநாட்டை ஒட்டிய பொதுக் கூட்டத்தில், முதன்முதலாக பிறவியில் தீண்டாமை-பிறவியால் சாதி இருப்பதற்கு மனுநீதி, இராமாயணம் காரணம் என முழங்கினார். தமிழகப் பரப்பு முழுவதிலும் இந்த ஒரு செய்தி யை முதன்மைப்படுத்தி 19.12.1973 முடிய 51 ஆண்டுகள் அவரே நேரில் மக்களிடம் பேசினார்; இவற்றை விளக்கி இடைவிடாமல் எழுதினார்.

2. 17.12.1920இல் சென்னை மாகாணத்தில் இரட்டை ஆட்சியை ஏற்ற நீதிக்கட்சி ஆட்சி 1923 தேர்தலிலும் வென்றது. நல்ல சாதனை களாகத் தீண்டப்படாதோர் பொதுப் பள்ளிகளில் படிக்க வாய்ப்பை உண்டாக்கியது; பார்ப்பனர் ஆதிக்கத்தை அரசு அதிகாரத் துறை களில் ஒழிக்கும் தன்மையில் மொத்தம் உள்ள 100 இடங்களையும்

பங்கீடு செய்து, 5 வகுப்புகளுக்கும் அளித்து ஆணைகள் பிறப்பித்தது. ஆனாலும் 1926 தேர்தலில் தோல்வி அடைந்தது.

3. நீதிக்கட்சித் தலைவர்கள் நிலைகுலைந்து நின்றனர். நீதிக்கட்சித் தோற்றதற்கு மூல காரணம், பார்ப்பனியத்தைக் கைவிடாத நீதிக்கட்சித் தலைவர்களே ஆவர் எனப் பெரியார் கண்டார்.

அவர்களுள், வெற்றி பெற்ற பனகல் அரசரையும், ஆர்க்காடு இராமசாமி முதலியாரையும் அழைத்துக் கொண்டு, "பார்ப்பனர் அல்லாதாருக்குத் தன்மான உணர்ச்சியை உண்டாக்க வேண்டும். அதற்கெனப் 'பார்ப்பனர் அல்லாதார் சுயமரியாதை இயக்கம்' ஒன்றைத் தொடங்க வேண்டும்" என, 1926 நவம்பர், திசம்பர் மாதங்களில் தென் மாவட்டங்களில் சூராவளிப் பயணம் மேற்கொண்டார்.

மதுரையில், 26.12.1926இல், ஏ. பரசுராம் பாத்ரோ (A.P. Patro) தலைமையில், "பார்ப்பனர் அல்லாதார் சுயமரியாதை இயக்கம்" தோற்றுவிக்கப்பட்டது.

1926 முதல் 47 ஆண்டுகள் தந்தை பெரியாரே தமிழகம் முழுவதிலும் பரப்புரை செய்தார்.

**பெரியார் மறைந்து 43 ஆண்டுகள் ஆன பிறகும் பல அமைப்புகளின் பெயரால் பெரியார் தொண்டர்கள் தமிழகம் முழுவதும் இக்கொள்கைகளைப் பரப்புரை செய்கிறோம். நிற்க.**

4. திராவிடக் கட்சிகள் 6.3.1967 முதல் கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழகத்தை ஆளுகின்றன.

சுயமரியாதைத் திருமணச் செல்லுபடிச் சட்டம் (1968), அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டம் (1971) இவற்றை தி.மு.க. ஆட்சி நிறைவேற்றியது.

**இவை தமிழ்நாட்டில் மட்டுமே செல்லுபடியாகும். இந்தியா முழுவதிலும் இவை செல்லுபடியாக மாட்டா.**

19.8.1979இல் அ.தி.மு.க. அரசிடம் மா.பெ.பொ.க. வைத்த இடஒதுக்கீடு கோரிக்கையை ஏற்று, 1.2.1980இல் அ.தி.மு.க. அரசு, தமிழ்நாட்டுப் பிற்படுத்தப்பட்டோருக்கு 31 விழுக்காடு ஒதுக்கீடு இருந்ததை 50 விழுக்காடாக உயர்த்தியது.

இச்சட்டமும் தமிழகத்தில் மட்டுமே செல்லும். இந்தியா ஒன்று என்றாலும் - மற்ற மாநிலங்களில் இது செல்லாது.

ஏன் இப்படி?

**இந்தியா ஒற்றை ஆட்சியாக இருக்கிறது; இந்தியா உண்மையான கூட்டாட்சியாக இல்லை. மாநில அரசுகளின் பல அதிகாரங்கள் 3.1.1977 முதல் பறிக்கப்பட்டுவிட்டன.**

எனவே மாநிலங்களுக்குத் தன்னாட்சி அதிகாரங்கள் (Autonomous Powers) - அதாவது, பாதுகாப்பு, பணத்தாள் அச்சடிப்பு, செய்திப் போக்குவரத்து ஆகிய மூன்று துறைகளில் இந்திய அரசியல் அமைப்புக்குக் கட்டுப்பட்ட-மற்ற எல்லா அதிகாரங்களும் உள்ள தனி அரசமைப்புச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்துக்கும் இருக்க வேண்டும்.

இந்தியாவுக்குத் தேசியக் கொடி இருப்பது போல, ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித்தனி தேசியக்கொடி இருக்க வேண்டும்.

**மதச்சார்பற்ற - தீண்டாமை ஒழிந்த - பிறவி சாதி ஒழிந்த - பழைய பழக்கவழக்கம் ஒழிந்த - சமதர்ம இந்தியக் கூட்டாட்சியை அமைக்க அப்போதுதான் முடியும்.**

**இந்தியாவை உண்மையான கூட்டாட்சியாக மாற்றி அமைப்போம், வாரீர்!**

**01-11-2017** **- வே. ஆனைமுத்து**

# கும்பகோணம் ரோஸ் பிலோமினால் மேரி மறைந்தார்

கும்பகோணம் பெரியார் பெருந் தொண்டரும், சீர்காழி மா.முத்துச்சாமி, திருச்சி வே.ஆனைமுத்து ஆகியோரின் உற்ற நண்பருமான புஷ்பதுரை அவர்களின் துணைவியார் ரோஸ் பிலோமினால் மேரி அவர்கள் 28.10.2017 சனி அன்று காலை மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரை இழந்து துன்பத்துக்கு ஆளாகியிருக்கும் கணவர், மற்றும் 3 மகன்கள், ஒரு மகள் ஆகியோருக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

சீர்காழி முத்து.அன்பழகன், 29.10.2017 அன்று, புஷ்பதுரையை நேரில் கண்டு துக்கம் உசாவினார்.

**- வே.ஆனைமுத்து**

# வணிகப் பெருமக்களே! செல்வந்தர்களே! தமிழ்ப்பெருமக்களே! அறிஞர்களே!

## "சிந்தனையாளன்" சாதனைகளைச் சீர்தூக்குங்கள்! 2018 பொங்கல் மலருக்கு விளம்பரம் தாருங்கள்! கூட்டாட்சி மாநாட்டுக்கு நன்கொடை தாருங்கள்!

"சிந்தனையாளன்" கிழமை இதழ் 17.8.1974இல் திருச்சியில் என் சொந்தப் பொறுப்பில் தொடங்கப் பட்டது.

"சிந்தனையாளன்" இதழ்தான், முதன்முதலாக 1975இல், "பிற்படுத்தப்பட்டோருக்கு இந்திய மத்திய அரசில் கல்வியிலும் வேலையிலும் தனி இடஒதுக்கீடு வேண்டும்" எனக் கோரியது. அக்கோரிக்கை பற்றி அன்றையப் பிரதமர் இந்திராகாந்திக்கும், அவரால் சுவரண்சிங் தலைமையில் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவுக்கும் நான் எழுதியதைத் தமிழர்களுக்கு அறி வித்தது. அதன் இன்றியமையாமையை உணர்த்தியது.

1977 தேர்தலில் காங்கிரசுக் கட்சி படுதோல்வி அடைந்தது. லோகியா சோசலிஸ்டுகளின் சனதாக் கட்சி கூட்டணி ஆட்சி அமைந்தது.

நம் கட்சி 8.8.1976இலேயே தொடங்கப்பட்டது. 1977 தேர்தலை நாம் புறக்கணித்தோம்.

**ஆனால் தந்தை பெரியாரின் உயிர் மூச்சுக் கொள் கையான வகுப்வாரிப் பிரதிநிதித்துவம் ஒன்றையாவது இந்திய அளவில் வென்றெடுக்க, 1978 மார்ச்சில் நாம் முடிவெடுத்தோம்.**

அதற்கான கோரிக்கை விண்ணப்பத்தை "சிந்தனை யாளன்" இதழில் வெளியிட்டோம்.

அவ்விண்ணப்பத்தினை ஆங்கிலத்திலும், இந்தி யிலும் மொழிபெயர்த்து அச்சிட்டு எடுத்துக்கொண்டு, இந்திய அரசுக்கு நேரில் அழுத்தம் தர வேண்டி, வே. ஆனைமுத்து, சீர்காழி மா. முத்துச்சாமி, சேலம் எம். இராஜு ஆகிய மூவரும் 29.4.1978இல் புதுதில்லியை அடைந்தோம்.

அங்கு, சனதாக்கட்சியின்-ஆளுங்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு நம் கோரிக்கை விண்ணப்பங் களைத் தந்து, நம் கோரிக்கையை விளக்கிச் சொன்னோம்.

7.5.1978இல் உத்தரப்பிரதேசப் பிற்படுத்தப்பட் டோர் மாநாட்டில், தந்தை பெரியாரின் நண்பர், எஸ்.டி. சிங், சௌராசியா தலைமையில் வே. ஆனைமுத்து ஆகிய நான் தொடக்க உரை ஆற்றினேன். உ.பி. மாநாட்டுப் பிரதிநிதிகள் ஆயிரம் பேருக்கும் இந்தியில் அச்சிடப்பட்ட விண்ணப்பத்தைக் கொடுத்தார், மா. முத்துச்சாமி.

**1944இல் திசம்பரில், சௌராசியா தலைமையில், கான்பூரில் இந்து பிற்பட்டோர் லீக் தலைமையில் தந்தை பெரியார் ஏற்றி வைத்த வகுப்புரிமை அறிவுச் சுடரை, மீண்டும், 7.5.1978இல் என் முசாபர் நகர் உரை உ.பி. மக்களைத் தூண்டிவிட்டது. அதுபற்றிய செய்தி, சிந்தனையாளன் இதழில் விரிவாக வெளியிடப்பட்டது.**

உ.பி. முசாபர் நகர் மாநாட்டுக்கு நம் குழுவினரை அழைத்துச் சென்ற பீகார் மாநிலம் ஆரா நாடாளுமன்ற உறுப்பினர் ராம் அவதேஷ் சிங் என்கிற லோகியா வாதியையும், பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் (B.P. Mandal) என்கிற நாடாளுமன்ற உறுப்பினரையும், 6.5.1978 மாலை நம் குழுவினர் சந்தித்தோம். இரு வரிடமும் "வடஇந்திய மாநிலம் எதிலும், பிற்படுத்தப் பட்டோருக்கு 1978 வரையில் ஒரு விழுக்காடுகூட இடஒதுக்கீடு இல்லாத அவல நிலையை" நன்கு புரிய வைத்தோம். ராம் அவதேஷ் சிங் இன்றளவும் இதற் காகச் செயல்படுகிறார்.

8.5.1978இல், வாழப்பாடி கூ.இராமமூர்த்தி அவர் களின் உதவியுடன் அன்றைய குடிஅரசுத் தலைவர் என். சஞ்சீவி ரெட்டி அவர்களிடம் நம் வகுப்புரிமைக் கோரிக்கை விண்ணப்பத்தை முதன்முதல் அளித்தோம். இவ்வளவு செய்திகளையும் பரப்பிய ஏடு "சிந்தனையாளன்".

பீகாரில், ராம் அவதேஷ் சிங் ஏற்பாட்டில், 17.9.1978 முதல் 18.10.1978 முடிய 31 நாள்கள் 31 மாவட்டங்களிலும் வே. ஆனைமுத்து, மா. முத்துச்சாமி, திருச்சி து.மா. பெரியசாமி, வேலூர் நா.பா. செந்தமிழ்க்கோ அடங்கிய குழுவினர் இடஒதுக்கீடு பற்றிப் பரப்புரை செய்தோம்.

19.10.1978 முதல் பாட்னாவில் காந்தி மைதானத்தில் "சிறை நிரப்பும் போராட்டம்" நடத்தினோம். 31.10.1978 க்குள் 10,000 பேர் சிறை புகுந்தனர். பீகார் அரசு வகுப்புரிமைக் கோரிக்கையில் தத்தளித்தது.

இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய், நம் குழுவி னரின் பரப்புரைக்கு எதிராகப் பரப்புரை செய்ய வேண்டி, பீகாருக்கு அப்போதே பயணம் வந்தார். நம் 31 நாள் பரப்புரையால் விழிப்புணர்வு பெற்ற பீகார் ஒடுக்கப் பட்ட வகுப்பு மக்கள், பிரதமரைப் பேசவிடாமல் தடுத்தனர்.

இதனால், உடனடியாக, 2 பயன்கள் விளைந்தன.

அவை யாவை?

1. பீகார் வரலாற்றில், முதன்முதலாக, அன்றைய முதலமைச்சர் கர்ப்பூரி தாக்கூர் பீகார் பிற்படுத்தப்பட் டோருக்கு 20 விழுக்காடு தனி இடஒதுக்கீடு அளித்தார்.

**இது நம் முதலாவது சாதனை ஆகும். இது வரலாறு.**

2. பீகாருக்குப் பயணம் வந்து, ஒடுக்கப்பட்டோர் நிலைமையைப் புரிந்து கொண்ட பிரதமர் மொரார்ஜி தேசாய், 20.12.1978இல் நாடாளுமன்றத்தில், ''இந்தியப் பிற்படுத்தப்பட்டோர் நலனை ஆராய, இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழுவை அரசு அமைக்கும்'' என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் தலைமையில், 1.1.1980இல் பிற்படுத்தப்பட்டோர் குழுவை அமைத்து இந்திய அரசு ஆணை வெளியிட்டது.

**இது நம் கட்சியின்-''சிந்தனையாளன்'' இதழின் இரண்டாவது சாதனை.**

அடுத்த நம் சாதனை தமிழகத்துப் பிற்படுத்தப்பட் டோருக்கு உரியது.

1979 கல்வி ஆண்டில், தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன்-பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக் கீடு பெற வருமான வரம்பு விதித்து ஆணை வெளி யிட்டார். தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளும் அந்த ஆணையை எரித்தன.

ஆனால், நம் கட்சியும், நம் தலைமையிலுள்ள ஒடுக்கப்பட்டோர் பேரவையும்-தமிழக அரசின் புரியாத் தனத்தை விளக்கிக் கட்டுரைகளைச் ''சிந்தனையாளன்'' இதழில் வெளியிட்டன.

அத்துடன், தமிழகத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோரின் நிலைமையை விளக்கி, ''பொது நிலை விளக்க ஆவணம்'' ஒன்றை அச்சிட்டு, ஒரு குழுவினர் தலைமையில் அந்த ஆவணத்தை 19.8.1979இல் தமிழக முதலமைச்சரிடமும், சில தமிழக அமைச்சர்களிடமும் அளித்தது.

தந்தை பெரியாரின் கோரிக்கையை ஏற்று, தி.மு.க. அரசு, 1971இல் தமிழகப் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்பட்ட 25 விழுக்காடு தனி இடஒதுக்கீட்டை 31 விழுக்காடாக உயர்த்தி அளித்தது. ஆனால் புதிதாக 30 உள்சாதிகளை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது.

**அதன் விளைவாகத் தமிழகப் பிற்படுத்தப்பட் டோரின் விழுக்காடு 67.50 ஆக 1972 முதல் உயர்ந்துவிட்டது.**

நம் ''சிந்தனையாளன்'' ஏடு மட்டுமே இதையும், உச்சநீதிமன்ற நீதிபதி மூர்த்துழா அவர்கள், 1976இல் கூறிய - ''ஒரு மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோர் 80 விழுக்காடு இருப்பார்களானால், அவர்களுக்கு 80 விழுக்காடு தனி இடஒதுக்கீடு தருவது விதி 16(4)க்கு எதிராகாது'' என்கிற புதிய கருத்தையும் இணைத்து விளக்கி, தமிழக அரசிடம் ஆவணம் அளித்தது. தொடர்ந்து பண்ருட்டி ச. இராமச்சந்திரன் மூலம் 6.10.1979 முதல் எம்.ஜி.ஆருக்கு அழுத்தம் தந்தது. அதனை ஏற்று, தமிழகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 31 விழுக்காடு என்பதை 50 விழுக்காடாக உயர்த்தி 20.1.1980இல் எம்.ஜி.ஆர். அறிவித்தார். 1.2.1980 அதற்கான ஆணையை அவர் பிறப்பித்தார்.

**தமிழகத்துப் பிற்படுத்தப்பட்டோருக்கு 50 விழுக் காடு தனி இடஒதுக்கீடு பெற்றுத் தந்திடப் பாடுபட்டது ''சிந்தனையாளன்'', மா.பெ.பொ.க. மற்றும் ஒடுக்கப் பட்டோர் பேரவை மூன்று அமைப்புகளும் ஆகும்.**

**இது நம் மூன்றாவது சாதனை.**

இவை மட்டுமா?

1988 மார்ச்சு முதல் ''மார்க்சியப் பெரியாரியம்'' என்பது பற்றியும், ''உண்மையான இந்தியக் கூட் டாட்சி'' பற்றியும் விளக்கக் கட்டுரைகளை எழுதித் தமிழர்க்கு அரசியல் அறிவு கொளுத்தியது ''சிந்தனை யாளன்''.

1991 ஏப்ரல்-மே இல் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் - பாவேந்தர் நூற்றாண்டு விழாவை 47 நாள்கள் தமிழகத்தில் பரப்புரை செய்திடவும், 1991 அக்டோபரில் 17 முதல் தில்லியில் 3 நாள்கள் பெரியார் விழா, கூட்டாட்சி மாநாடு, வடமாநிலப் பயணம் இவற்றை வெற்றியாக நடத்திடவும், 1992 திசம்பரில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் முழு வரலாற்றையும், பாரதி தாசனின் சில கவிதைகளை - இலெனின் தங்கப்பா அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தனிநூலாக வெளியிடவும்; 1993 முதல் இன்றுவரை பெரியார் - நாகம்மை அறக்கட்டளையின் குறிக்கோளைத் தமிழக மக்களிடையே பரப்பிட ஒரு கருவியாகவும் விளங்குவது ''சிந்தனையாளன்''.

தந்தை பெரியார் 138ஆம் பிறந்த நாள் இதழ் முதல், 2016 செப்டம்பர் முதல் தொடங்கி, 2017 செப்டம்பர் முடிய, இன்றைய பாரதிய சனதாக் கட்சி ஆட்சியின்,

1. இந்தித் திணிப்பு;
2. சமற்கிருதத் திணிப்பு;
3. அனைத்திந்திய நுழைவுத் தேர்வுத் திணிப்பு;
4. பணத்தாள் ஒழிப்பு மோசடி;
5. தமிழகத் தொல்லியல் களஆய்வுகள் புறக்கணிப்பு;

ஆகிய பொருள்கள் பற்றிய தெளிவான விளக்கக் கட்டுரைகளைத் தாங்கி வருகிறது சிந்தனையாளன்.

**கடந்த இருபது ஆண்டுகளாக, ''சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர்'' சிறப்பாக வெளிவரத் துணை புரிந்த வணிகப் பெருமக்கள், தொழிலதிபர்கள், மருத்துவர்கள், ஆசிரியப் பெருமக்கள், தமிழ்ப் பெரு மக்கள் ஆகியோர் விளம்பரங்களும், நன்கொடை களும் இப்போதும் அளித்து உதவுங்கள் என அன்புடன் வேண்டுகிறேன்.**

**அறிஞர் பெருமக்கள், குறித்த காலத்திற்குள் கட்டுரைகளை அளித்து உதவுங்கள்.**

**மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர்களும், கட்சி உறுப்பினர்களும் மனங்கொண்டு, எப்போதும் போல் ஊக்கமாகப் பணிபுரிந்து, வெற்றி குவிக்க வேண்டுகிறேன்.**

**- வே. ஆனைமுத்து**

# "கருவறைத் தீண்டாமையினை" வேரறுப்போம் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்குவோம்

க. முகிலன்



*தமிழகக் கோவில்களில் பணி நியமனம் வழங்கக் கோரி அர்ச்சகர் பயிற்சி முடித்த மாணவர்கள் மதுரை மீனாட்சியம்மன் கோவில் கருவறை முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டம்*

கேரள அரசின் அறநிலையத் துறையின் தேவசம் பணிநியமன வாரியம் இந்துக் கோயில்களில் அர்ச்சகர் களாகப் பணிசெய்வதற்காகப் பார்ப்பனரல்லாதாரில் 36 பேரையும், பார்ப்பனர்களில் 26 பேரையும் தேர்வு செய்தது. பார்ப்பனரல்லாதாரில் ஆறு தாழ்த்தப்பட்டவர்களும் இடம்பெற்றுள்ளனர். கேரளாவில் கடந்த இருபது ஆண்டுகளாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கோயில்களில் அர்ச்சகர்களாக அமர்த்தப்பட்டு வந்தனர். ஆனால் இப்போதுதான் முதன்முதலாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆறு பேர் அர்ச்சகர்களாக அமர்த்தப் பட்டிருக்கின்றனர். உண்மையில் இது வரவேற்கத்தக்க புரட்சிகரமான நடவடிக்கையே ஆகும்.

கேரள தேவசம் பணிநியமன வாரியம் தாழ்த்தப் பட்டோர் 6 பேர், பிற்படுத்தப்பட்டோர் 30 பேர், பார்ப்பனர் 26 பேர் என மொத்தம் 62 பேர் கொண்ட பட்டியலை 6.10.2017 அன்று திருவாங்கூர் தேவசம் வாரியத்துக்கு அனுப்பியது. பணிநியமன ஆணையை வழங்கும் உரிமை திருவாங்கூர் தேவசம் வாரியத்துக்குத்தான் உண்டு. அதன்படி 62 பேருக்கும் அர்ச்சகர் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன. 62 பேரின் சாதி வாரி விவரம் :

| | |
|---|---|
| பார்ப்பனர் | 26 |
| ஈழவர் | 21 |
| நாடார் | 1 |
| விசுவகர்மா | 1 |
| தீவாரா | 2 |
| தாண்டர் | 1 |
| வேட்டுவா | 1 |
| பட்டியல் இனத்தவர் | 1 |
| புலையர் | 4 |
| பிற பிற்படுத்தப்பட்டோர் | 4 |
| | 62 |

உச்சநீதிமன்றத் தீர்ப்பில், அர்ச்சகர் பணியை அரசமைப்புச் சட்டத்தின் விதி 16(4)இல் வேலையில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள வகைமையில் சேர்க்க முடியாது என்று கூறியுள்ளதைப் பொருட்படுத்தாமல், கேரள அரசு, அரசுப் பணியில் வழங்கிவரும் இடஒதுக்கீட்டின்படி சாதிவாரியாக அர்ச்சகர்களையும் தேர்வு செய்திருப்பது மிகவும் போற்றத்தக்க ஒரு செயலாகும்.

கேரள அறநிலையத்துறையின் நிருவாக வசதிக்காக, திருவாங்கூர் தேவசம் வாரியம், கொச்சின் தேவசம் வாரியம், மலபார் தேவசம் வாரியம் என்று பிரிக்கப் பட்டுள்ளது. இப்போது திருவாங்கூர் தேவசம் வாரியத்தின்கீழ் உள்ள கோயில்களில் காலியாக உள்ள அர்ச்சகர் இடங்களுக்கு அனைத்துச் சாதியினரையும் நியமித்தது போலவே, மற்ற வாரியங்களின்கீழ் உள்ள கோயில்களில் காலியாகும் இடங்களுக்கும் அர்ச்சகர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கேரள அறநிலையத் துறை அறிவித்துள்ளது.

திருவாங்கூர் தேவசம் வாரியத்தின்கீழ் 1,252 கோயில்கள் உள்ளன. இவற்றுள் 70 பெரிய கோயில்கள் இருக்கின்றன. சற்றொப்ப 2500 அர்ச்சகர்கள் இக்கோயில்களில் பணிசெய்கின்றனர். ஆயினும் சபரிமலை அய்யப்பன் கோயில், திருவனந்தபுரம் ஸ்ரீகண்டேசுவரர் கோயில் போன்ற முதன்மையான கோயில்களில் பார்ப்பனர் அல்லாதார் எவரும் அர்ச்சகர்களாக அமர்த்தப்பட வில்லை. தாழ்த்தப்பட்டவர்களை அர்ச்சகர்களாகப்

பணியில் அமர்த்தும் திருவாங்கூர் தேவசம் வாரியம், சபரிமலை அய்யப்பன் கோயிலில் 10-50 அகவையில் உள்ள பெண்கள் வழிபடுவதற்குத் தடைவிதிக்கிறது. 1991இல் கேரள உயர்நீதிமன்றமும் சபரிமலையில் பெண்கள் வழிபடுவதற்கான உரிமையை மறுத்தது. பெண்கள் சபரிமலை கோயிலுக்கு வந்தால், அய்யப்பனின் பிரம்மச்சரியம் ஆட்டங்கண்டுவிடுமாம்.

சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குப் பெண்களை அனுமதிப்பதில்லை என்கிற பழக்கவழக்க நடைமுறை நீண்டகாலமாக இருந்து வருகிறது; இது மதம் சார்ந்த நம்பிக்கையின் அடிப்படையிலான உரிமை; இந்த உரிமை அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று பழைமைவாதிகள் வாதிடுகின்றனர். இதுகுறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு 13.10.2017 அன்று அரசமைப்பு அமர்வு இதை விசாரிக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

கேரளத்தில் இப்போது அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகியுள்ளனர். ஆனால் இந்த நோக்கத்திற்கான முதல் நடவடிக்கை தமிழகத்தில்தான் மேற்கொள்ளப்பட்டது. பெரியார் 1970 சனவரி 26 அன்று அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்க வேண்டும் என்பதற்கான போராட்டத்தை அறிவித்தார். அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி அளித்த வாக்குறுதியை ஏற்று, பெரியார் போராட்டத்தை ஒத்தி வைத்தார், 1970 திசம்பர் 2 அன்று பயிற்சி பெற்ற பார்ப்பனர் அல்லாதாரும் அர்ச்சகராவதற்கான சட்டம் தி.மு.க. ஆட்சியில் இயற்றப்பட்டது.

இச்சட்டத்தை எதிர்த்து பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். 1972இல் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில், கோயில்களின் அர்ச்சகர் பணி பரம்பரை வாரிசு உரிமை கொண்டது அல்ல என்று கூறியது. இதன்மூலம் தமிழக இந்து அறநிலையத்துறை 1959இல் அர்ச்சகர் பணி வாரிசு உரிமை உடையது என்று இயற்றிய சட்டம் செல்லாததாகி விட்டது. அதேசமயம் ஆகம விதிகள், பழக்கவழக்கம், காலங்காலமாகப் பின்பற்றப்பட்டுவரும் நடைமுறை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அர்ச்சகர்கள் அமர்த்தப்பட வேண்டும் என்று கூறி, தி.மு.க. ஆட்சியில் இயற்றப்பட்ட சட்டத்தைச் செயல்படுத்த முடியாதவாறு முடக்கியது. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்களாவதற்குத் தடையாக உள்ள அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று தி.மு.க. ஆட்சியில் 15.4.1974 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்பின் எம்.ஜி.ஆர். ஆட்சியில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவது குறித்த சிக்கலை ஆராய 1979இல் நீதிபதி மகாராசன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கை 1982இல் அரசிடம் அளிக்கப்பட்டது. ஆகமக் கோயில்களில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று சாத்திர ஆதாரங்களை விரிவாக எடுத்துக்காட்டி நீதிபதி மகாராசன் குழு பரிந்துரைத்தது. 1991இல் செயலலிதா ஆட்சியில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதற்காக திருச்சி அருகே வேதாகமக் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. பெரியார் இயக்கத்தினரும், புரட்சிகர அமைப்பினரும் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திக் கோயில் கருவறை நுழைவுப் போராட்டங்களை நடத்தி வந்தனர்.

அதன்பின், 2002ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் அர்ச்சகர் பணிநியமனம் குறித்து ஒரு முற்போக்கான தீர்ப்பை வழங்கியது. இது கேரளாவில் ஆதித்யன் என்னும் நம்பூதிரிப் பார்ப்பான் தொடர்ந்த வழக்காகும். நம்பூதிரிப் பார்ப்பனர் மட்டுமே வழமையாக அர்ச்சகராக இருந்த ஒரு கோயிலில் ஈழவ சமுதாயத்தைச் சேர்ந்தவர் 1993இல் அர்ச்சகராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் எ. இராசேந்திரபாபு, துரைராஜு ஆகியோர் சிறப்பான ஒரு தீர்ப்பை அளித்தனர்.

“இந்திய அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்பு ஒரு குறிப்பிட்ட சாதியினரே அர்ச்சகராக வரமுடியும் என்ற ஒரு பழக்கம் இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரம் இருந்தாலும், இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு பழைய பழக்க வழக்கம் (Custom and Usage) என்று காட்டி அரசியல் சட்டத்துக்கு எதிரான உரிமையைக் கோர முடியாது. அர்ச்சகர்களாக நியமிக்கப்படுவோர் குறிப்பிட்ட ஒரு சாதியைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்; அந்தச் சாதியின் பெற்றோருக்குப் பிறந்திருக்க வேண்டும் என்று வற்புறுத்துவது முதன்மையான கூறாக இருக்க முடியாது. அப்படிச் செய்வதற்கு வாய்ப்பும் இல்லை” என்று கூறி, ஆதித்யன் தொடுத்த வழக்கை நீதிபதிகள் தள்ளுபடிச் செய்தனர்.

ஆதித்யன் வழக்கு என்று கூறப்படும் இந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தான் கேரள அறநிலையத்துறை 2017 அக்டோபர் மாதம் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமித்துள்ளது.

1972ஆம் ஆண்டின் உச்சநீதிமன்றத் தீர்ப்பு அர்ச்சகர் பணி வாரிசு உரிமை உடையது அல்ல என்று கூறியது. 2002இல் ஆதித்யன் வழக்கில் அர்ச்சகர் பணி ஒரு குறிப்பிட்ட சாதிக்கு மட்டுமே உரிமை உடையது அல்ல

என்று உச்சநீதிமன்றம் கூறியது. இதை அடிப்படையாகக் கொண்டு தி.மு.க. ஆட்சியில் 23.5.2006 அன்று, உரிய கல்விப் பயிற்சி பெற்ற எந்த 'இந்து'வையும் இந்துக் கோயில்களில் அர்ச்சகராக்கலாம் என்ற அரசாணை யைப் பிறப்பித்தது. இதற்கான சட்டம் 29.8.2006 அன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இதை எதிர்த்து ஆதிசைவ சிவாச்சாரிகள் மற்றும் தென்னிந்திய திருக்கோயில் நிருவாக சபை சார்பில் பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றத்தில் மீண்டும் வழக்குத் தொடுத்தனர்.

கேரளத்தில் அண்மையில் அர்ச்சகர்களாக நியமிக் கப்பட்டவர்கள் கேரள இந்து அறநிலையத்துறை நடத்திய தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாவர். ஆனால் தமிழ் நாட்டில் அறநிலையத்துறை நடத்திய ஆறு ஆகமப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்த 206 பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு இன்றுவரை அர்ச்சகர் பணி நிய மனம் வழங்கவில்லை. இம்மாணவர்கள் தங்களை அர்ச்கராகராக நியமிக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

2006ஆம் ஆண்டு தமிழக அரசு பிறப்பித்த அனைத் துச் சாதியினரும் உரிய பயிற்சி பெற்று அர்ச்சகராக லாம் என்ற ஆணையையும். ஆகமப் பயிற்சி பெற்ற மாணவர்களின் கோரிக்கையையும் விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் ரஞ்சன் கோகாய். என்.வி. இரமணா ஆகியோர் 2015 திசம்பரில் ஒரு நயவஞ்சக மான தீர்ப்பை வழங்கினர்.

வழக்கைத் தொடுத்த பார்ப்பன அர்ச்சகர்கள் கோரி யிருந்தபடி, 2006ஆம் ஆண்டு தமிழக அரசு பிறப் பித்த ஆணையை இரத்து செய்வதாக இத்தீர்ப்பு கூற வில்லை. அதேபோல் ஆகமப் பயிற்சி பெற்ற 206 பேரை அர்ச்சகராகப் பணியில் அமர்த்தக் கூடாது என்றும் சொல்லவில்லை. ஏதோ முற்போக்காகக் கூறுவதுபோல், ஆகம முறைப்படி அர்ச்சகரை அமர்த்துவதில் சாதியோ, பிறப்போ பார்க்கக் கூடாது என்று கூறிவிட்டு, ஒரு குறிப்பிட்ட கேயிலின் ஆகம விதிப்படி எந்தப் பிரிவினர் - கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் (denominations) காலங்காலமாக அர்ச்சகர்களாக இருந்து வருகின்றனரோ அவர்களே அர்ச்சகர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று இத்தீர்ப்பு கூறுகிறது. ஆகமங்களின்படி அர்ச்சகராக அமர்த்துவதற்கு நீண்டகாலமாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் இத்தகைய கட்டுப்பாடுகளைச் சமத்துவத்துக் கான உரிமையை மீறியதாகக் கருதமுடியாது (The restrictions prescribed by the age old Agamas is not a violation of the right to equality) என்றுகூறி, என்றென்றும் பார்ப்பனர்களே அர்ச்சகர்களாக நீடிப்பதை இத்தீர்ப்பு உறுதி செய்கிறது. மேலும் ஒரு குறிப்பிட்ட கோயிலின் அர்ச்சகர் நியமனம் அக்கோயிலின் ஆகம முறைப்படி அமைந்துள்ளதா என்பதை ஆராய்ந்த

*ஆகமப் பயிற்சி முடித்தும் அர்ச்சரகாகிட முடியாத இளைஞர்கள்*



*தலித் ஜி. பாலகுரு* *கே.வெங்கடேசன்*

பிறகே நீதிமன்றம் அதன் மீதான தீர்ப்பை வழங்கும் என்று இத்தீர்ப்பில் நீதிபதிகள் கூறியிருப்பதன் மூலம் பார்ப்பனர் அல்லாதார் அர்ச்சகராவதற்கான எல்லா வாயில்களையும் அடைத்துவிட்டனர்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் ரஞ்சன் கோகாய், என்.வி. இரமணா ஆகியோரின் வாதம் என்னவெனில், பிறவி அடிப்படையிலான சாதி-அதாவது 'பிராமணன்' என்பது மட்டுமே அர்ச்சகராக இருப்பதற்கான தகுதி இல்லை சைவக் கோயில்களில் வைணவப் பார்ப்பனர்கள் அர்ச்சகராக முடியாது; அதுபோல் சைவப் பார்ப்பனர் எல்லோரும் சைவக் கோயிலில் அர்ச்சகராக முடியாது; சைவப் பார்ப்பனரில் ஒரு குறிப்பிட்ட கோத்திரத்தில் பிறந்தவர் மட்டுமே அந்தக் குறிப்பிட்ட கோயிலின் ஆகம முறைப்படி அர்ச்சகராக முடியும்; எனவே கோத்திரம் என்பதை ஒரு சாதியாகக் கருத முடியாது என்பதாகும். இதைவிட வஞ்சகமான விளக்கத்தை வேறெங்கும் பார்க்க முடியாது.

தென்னாட்டில்தான் பெரிய கோயில்கள் அதிகம். இதில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள பெரிய கோயில்கள் பல நுற்றாண்டுகளாக இருந்துவருபவை. தொடக்கக் காலங்களில் இவற்றில் அர்ச்சகர்களாக இருந்த பார்ப்பனர்கள் அர்ச்சகர் பதவி யைத் தங்கள் பாரம்பரிய உரிமையாகப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ஆகமங்களை உருவாக்கிக் கொண்டு, அவற்றைக் கடவுள் அருளியவை என்று கூறிக்கொண்டனர். அரசர்களின் துணையுடன் இவற்றைக் கல்வெட்டுகள். செப்பேடுகளில் பதியச் செய்தனர். அர்ச்சகர் நியமனத்தில் குறிப்பிட்ட கோத்திரத்திற்கு முதன்மை தரும் உச்சநீதிமன்றமே, ஒருவர் எந்தக் கோத்தரம் என்பதை உறுதி செய்வதற்கான சமய வல்லுநர்கள் இப்போது இல்லை என்று கூறியுள்ளது. எனவே கோத்திரம் எனும் அளவுகோல் பித்தலாட்ட மானது; அர்ச்சகர்களாக இருக்கும் பார்ப்பனரின் ஆதிக்கம்

தொடர்ந்து நீடிப்பதற்கு இது வழி வகுப்பதாகும்.

1972இல் தமிழக அரசின் சட்டம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில், அர்ச்சகரை வாரிசு உரிமை அடிப்படையில் நியமிக்கக் கூடாது என்று கூறப்பட்டது. ஆனால் தற்போது தமிழ்நாட்டில் இருக்கும் பெருங்கோயில்களில் இருக்கும் 1174 அர்ச்சகர்களில் 574 பேர் வாரிசு உரி மையாகப் பதவி பெற்றவர்கள் தான். மேலும் 411 பேர் அவர்களின் பரிந் துரை மூலம் அர்ச்சகர்களானவர்கள். முறையாக ஆகமப் பயிற்சி பெறாத வர்கள் அதிக அளவில் அர்ச்சகராக உள்ளனர். மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் 116 அர்ச்சகர் களில் 28 பேர், சென்னை கபாலீசுவரர் கோயிலில் 41 பேரில் 4 பேர் மட்டுமே ஆகமப் பயிற்சி பெற்றவர்கள் என்பதை நீதிபதி ஏ.கே. இராசன் குழு அறிக்கையில் ஆதாரத்துடன் கூறப்பட்டுள்ளது. இவர்கள் பார்ப்பனர் என்ற அடிப்படையில் மட்டுமே அர்ச்சகராகியிருக்கின்றனர். ஆனால் ஆகம முறைப்படி பயிற்சி பெற்ற பார்ப்பன ரல்லாத 206 பேருக்கு அர்ச்சகர் உரிமை மறுக்கப்படு கிறது.



*மூடப்பட்டுக் கிடக்கும் மதுரை அர்ச்சகர் பயிற்சி நிலையம்*

தந்தை பெரியாரும் மேதை அம்பேத்கரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் அனைத்துச் சாதியினரும் அர்ச்ச கராக வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தனர். 1927இல் மகத்குளப் போராட்ட மாநாட்டில் இதற்கான தீர்மானம் அம்பேத்கர் தலைமையில் நிறைவேற்றப் பட்டது. பெரியார் 1973இல் தான் தன் 95ஆவது அகவையில் இதற்கான போராட்டத்தை அறிவித்தார். நீண்டகாலமாக இருந்துவரும் பழக்கம், வழக்கம் (Custom and Usage) என்ற பெயரால் இருந்துவரும் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக இந்திய அரசமைப்புச் சட்டஅவையில் இந்துச் சட்டத்திருத்த மசோதாவை அம்பேத்கர் கொண்டு வந்தார். சனாதனவாதிகளின் எதிர்ப்பால் அதை நிறைவேற்ற முடியாதபோது தன் அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தார்.

பெரியார், அம்பேத்கர் கொள்கைகளின் ஒரு பகுதி யாக இப்போது கேரளத்தில் ஆறு தலித்துகள் உட்பட பார்ப்பனர் அல்லாதவர் 36 பேர் அர்ச்சகர்களாக நிய மிக்கப்பட்டுள்ளனர். அனைத்துச் சாதியினரும் அர்ச்சக ராக வேண்டும் என்பது ஒரு சனநாயக உரிமை. சுதந் தரம் பெற்று 70 ஆண்டுகளுக்குப் பிறகும் “கருவறை யில் தீண்டாமையை” நீடிக்கச் செய்வது 97 விழுக் காடு மக்களாக இருக்கும் பார்ப்பனர் அல்லாதவர் களின் சுயமரியாதையை இழிவுபடுத்துவதாகும்.

தேவதாசி முறை, தலித்துக்களுக்குக் கோயில் நுழைவு உரிமை மறுப்பு போன்றவைகளும் ஆகம விதிகளாக இருந்தன. அவற்றை ஒழித்திட சட்டம் செய்தது போல் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகரா வதற்கு எதிராக உள்ள சட்டத்தின் தடைகளை நீக்கிட வேண்டும்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற கொள்கையை முதலில் தூக்கிப் பிடித்த தமிழ் நாட்டில் கேரளத்தைப் போன்று அனைத்துச் சாதி யினரும் அர்ச்சகராகிட தமிழர்கள் ஓரணியில் திரண்டு போராடுவோம்.

## ‘தழல் விழியன்’
### தோற்றம்

“தனித்தமிழ் ஆர்வலரும், சிந்தனையாளன் இதழ் ஆதரவாளரும், தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் மீது அளவிலாப் பற்றுக்கொண்டவரும், தமிழாசிரியர் பணிநிறைவு பெற்றவருமான குடி யாத்தம் மு. சேகர் - வே. சச்சு இணையரின் மூத்த மகள் ச.சே. சந்தனச்சோலை - ஜீ. புருசோத்தமன் இணையருக்கு, 24.9.2017 ஞாயிறு விடியற் காலை ஆண்குழந்தை பிறந்தான். அக்குழந்தை கைக்கு **தழல்விழியன்** எனப் பெயரிடப்பட்டது.”

# தன்னுரிமையா? தனியாட்சியா?

- குட்டுவன்



*2017 அக்டோபர் 10 அன்று பார்சிலோணா நாடாளுமன்றத்தின் முன் திரண்ட சுதந்திர கேட்டலோனா ஆதரவாளர்கள்*

உலகில் 17, 18ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகள், ஆசிய ஆப்பிரிக்க வட தென் அமெரிக்க நாடுகளில் தங்களின் காலனிகளை உருவாக்கிப் பொருளாதாரச் சுரண்டலை மேற்கொண்டன. விதிவிலக் காக இன்றைய மக்கள் சீனா போன்ற சில நாடுகளில் சில நிலப்பகுதிகளை மட்டும் கைப்பற்றித் தங்களுடைய மேலாதிக்கத்தைச் செலுத்தி வந்தன. சான்றாக ஹாங் காங் பகுதியும் ஷாங்காய் நகரும் பிரித்தானிய ஏகாதி பத்தியப் பிடியில் இருந்தன. அதே போன்று சீன வியட் நாம் கடற்பகுதிகளில் உள்ள பராசல் தீவுகள் பிரான்சு ஏகாதிபத்திய நாட்டிடம் அடிமைப்பட்டு இருந்தன. இன்று வியட்நாம், மக்கள் சீனம், தைவான் ஆகிய நாடுகள் இந்த பராசல் தீவுகளின் பகுதிகளைத் தங்கள் நாட்டின் பகுதிகள் என்று உரிமை கொண்டாடுகின்றன. இன்றளவும் இது ஒரு பன்னாட்டு மோதல் பிரச்சினையாக நீடித்து வருகிறது.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய ஏகாதி பத்திய நாடுகளின் பிடியில் இருந்து விடுபட உள்நாட்டு மக்கள் நடத்திய விடுதலைப் போர்கள் ஏராளம். இன் றைக்கு உலகின் ஏகாதிபத்திய நாடாக உள்ள அமெரிக்கா, 18ஆம் நூற்றாண்டில்தான் இங்கிலாந்தின் பிடியில் இருந்து விடுதலை பெற்றது. எனவே மக்களின் உரிமை கள் தான் விடுதலைக்கு அடிப்படையான காரணங் களாகும்.

விடுதலைப் பெற்ற ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் 20ஆம் நூற்றாண்டில் தொடங்கிய தன்னாட்சிக்கான உரிமைப் போர்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

தன்னுரிமை கோருகிற பல நாடுகள் பற்றிக் கூட் டாட்சியியல் ஆய்வாளர்கள் சில ஆழமான கருத்துக் களைப் பதித்துள்ளனர். பேராசிரியர் பெயின், 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தேசியத்தைவிட வர்க்கக் கோட்பாடுகள் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் உணர்வு களாக உருப்பெற்றன என்றார். மற்றொரு கூட்டாட்சியியல் அறிஞரான ஹெட்சர், தேசியமும் அதன் நெருங்கிய உறவான இன அடையாளமும்தான் தற்போது ஆற்றல் பொருந்திய அரசியல் சக்திகளாக முகிழ்த்து வருகின்றன என்கின்றார்.

20ஆம் நூற்றாண்டில் 1947 தொடங்கி 1991 ஆண்டு வரை இன அடையாளத்தின் அடிப்படையில் வங்கதேசப் பிரிவினை ஒன்றுதான் நடந்துள்ளது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். 1991ஆம் ஆண்டிற்குப் பிறகு பல தேசிய இனங்களின் கூட்டமைப்பாக இருந்த பெரிய அளவிலான தேசிய அரசுகள் தங்கள் நாடு களுக்குள் இருந்த மக்களின் மொழி-இன அடையாளங் களை உரிய முறையில் கையாளுவதற்குத் தவறிய தால் சோவியத் ஒன்றியம் உட்பட பல நாடுகள் சிதறுண்டு போயின என்று பல ஆய்வாளர்கள் குறிப் பிடுகின்றனர். 1991ஆம் ஆண்டில் நிகழ்ந்த 37 ஆயுதம் தாங்கிய மோதல்களில், 35 மோதல்கள் இன அடிப் படையிலான உள்நாட்டு மோதல்களே ஆகும். பேரா சிரியர் எரிக்சன்-வட அயர்லாந்தில் நடந்த போராட்டம் இலங்கையில் தமிழ்த் தேசியத்திற்கான போராட்டம் ஆகியவற்றுக்கு இன மோதல்களே காரணம் என்கின் றார். இன்றளவும் இந்தப் போக்கு தொடர்கிறது.

**பர்மாவில் ரோஹிங்கியா இசுலாமியர்கள் தாக்கப் படுகிறார்கள். அவர்களுக்கான உரிமைகள் மியான்மர் அரசால் நசுக்கப்படுகின்றன. அமைதிக்கான நோபல் பரிசைப் [1991] பெற்ற ஆங் சாங் சூகி அம்மையார் பாசிசப் போக்கைக் கடைப்பிடித்து நசுக்குகிறார். இதனால் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அந்த அம்மையாருக்கு வழங்கிய மாண்புறு மதிப்பையும் திரும்பப் பெற்றுக் கொண்டது. அப்பல்கலைக்கழக மாணவர்கள் ஒருமனதாக வாக்களித்து அவரது படத்தையும் பல்கலைக்கழகத்திலிருந்து அகற்றிவிட்டனர். எனவே ஒரு காலத்தில் இராணுவ அடக்குமுறைக்கு எதிராகப் போராடிய வீரமங்கை, இன்று மனித உரிமை களைக் காலில் போட்டு மிதிக்கும் நிலையைக் காணும் போது மானுட உரிமைக்காகப் போராடியவர்கள் அரசு அதிகாரம் கிடைத்தால் தாங்கள் செய்த தியாகத் திற்கே துரோகம் செய்கிறார்கள் என்பதுதான் காலம் நமக்குக் கற்பிக்கும் பாடமாகும்.**

இன்றைய உலகில் நடைபெறும் இன உரிமைக் கான போராட்டக் களத்தில் தொடர்ந்து கனடா நாட்டின் கியூபெக் மாநிலத்தில் பிரெஞ்சு பேசும் மக்களும்,

இங்கிலாந்தைச் சார்ந்த ஸ்காட்லாந்தியர்களும். வேல்ஸ் ஐரிஷ்காரர்களும் பெல்ஜியத்தில் வாஷ்ம்கள் பிளமி' இன மக்களும் ஈழத்தில் தமிழ் மக்களும் ஸ்பெயினைச் சார்ந்த கேட்டலோனியர்களும், ஈராக்கில் குர்திஷ் இன மக்களும், பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மக்களும் தொடர்ந்து உரிமைக்குரல்களை எழுப்பி வருகின்றனர்.

எல்லை காந்தி என இந்தியத் தலைவர்களால் போற்றப்பட்ட கான் அப்துல்கபார்கானின் மகன் வாலிக்கான், தங்களுடைய இன உரிமைப் போராட்டத்தைப் பற்றி ஓர் அருமையான கருத்தைப் பதிந்துள்ளார் **''6000 ஆண்டுகளாக நான் பலுசிஸ்தானி; 1000 ஆண்டுகளாக நான் முஸ்லிம்; 27 ஆண்டுகளாக நான் பாகிஸ்தானி'' என்று 1974ஆம் ஆண்டு குறிப்பிட்டதை, 2017இல் வெளிவந்த பலுசிஸ்தான் பற்றிய ஆய்வு நூலில் ராஜிவ் தோக்ரா குறித்துள்ளார்.**

ஆப்பிரிக்க நாடுகளின் பல பகுதிகள் உட்பட மொழி, இன, சமய அடிப்படையில் மோதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. ஒரு காலத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் பிரிந்த அமெரிக்கா, இன்று குர்தி' இன மக்களை ஏமாற்ற முனைகிறது. குறிப்பாக. சதாம் உசைன் சர்வ வல்லமையுடன் ஆட்சி செய்த காலத்தில் குர்து இனப் போராட்டத்திற்கு ஆயுதம் மற்றும் நிதியுதவிகளைச் செய்த அமெரிக்கா, தற்போது அவர்களின் விடுதலைக்குத் தடையாக உள்ளது. ஈராக்கின் பெட்ரோல் வளமும் புவிசார் அரசியலுமே இத்தடைக்கு முதன்மையான காரணங்களாக அமைகின்றன.

**இன்று ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் கேட்டலோனியா பிரிவினை உலக அரசியல் அரங்கில் தீவிரமாக அலசப்படுகிறது. கேட்டலோனியா பல ஆயிரமாண்டுகளாகத் தனது தனித்தன்மையையும் பண்பாட்டு மொழி உரிமைகளையும் போற்றிப் பாதுகாத்து வருகிறது என்று சுயாட்சி பெற்ற கேட்டலோனிய மாநிலத் தலைவர் பியுஜி டி மோன்ட் குறிப்பிட்டுள்ளார். 18ஆம் நூற்றாண்டில்தான் கேட்டலோனியாவை ஸ்பெயின் நாடு கைப்பற்றியது. 1939க்குப் பிறகு ஜெனரல் பிரான்சிசோ பிரான்கோ என்ற சர்வாதிகாரி கேட்டலோனியா மொழியின் மீதும் மக்களின் மீதும் அடக்குமுறைகளை ஏவிவிட்டார். ஸ்பானிஷ் மொழியில் பெயரிட்டவர்கள் மட்டும் பாதுகாக்கப்பட்டனர். மற்ற மொழியினர் தடை செய்யப்பட்டனர். ஸ்பானிஷ் மொழியைப் பேசும் ஏழை மக்களை கேட்டலோனியாவிற்குள் குடியேற ஊக்குவிக்கப்பட்டது. இந்தத் தடைகளை எல்லாம் கடந்து கேட்டலோனியா மக்கள் தங்களின் தனித்தன்மையை இழக்காமல் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டதனால் ஸ்பெயின் நாட்டின் வளம் கொழிக்கும் மாநிலமாக இன்று இது திகழ்கிறது. ஸ்பெயின் நாட்டில் கேட்டலோனிய மாநிலத்திற்குத்தான் அதிக அளவு சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். 1990க்குப் பிறகு ஸ்பெயின் அரசு கேட்டலோனியா மக்கள் பேசும் மொழியை மற்றொரு நிர்வாக மொழியாக ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அவர்களது உரிமைப் போராட்டம் பயணித்தது. கேட்டலோனியா மாநிலத்திற்குத் தனிக்கொடியும் உள்ளது. பன்முகத்தன்மையைக் குலைக்கும் வகையில் மறைமுகமாகப் பல மக்கள் விரோத நடவடிக்கைகளை ஸ்பெயின் அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்ற அச்சத்தின் காரணமாக மாநில அரசே ஒரு மக்கள் வாக்கெடுப்பை நடத்திப் பிரிவினையை உறுதி செய்தது. தற்போது ஸ்பெயின் அரசு மக்கள் வாக்கெடுப்பை நிராகரித்து மீண்டும் இன மோதல் போக்கை உறுதியாக்கியுள்ளது.**

ஸ்பெயின் அரசு கேட்டலோனியா மாநில அரசு நடத்திய மக்கள் வாக்கெடுப்பைத் துப்பாக்கிச் சூடு, வன்முறைக் கலவரங்கள் வழியாகத் தடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், இவற்றையெல்லாம் மீறி 42 விழுக்காட்டு மக்கள் வாக்களித்தனர். அவற்றில் 92 விழுக்காட்டினர் கேட்டலோனியா தனிநாடாக வேண்டும் என்று வாக்களித்துள்ளனர். ஆனால் உலகின் வல்லரசு நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் தங்களுடைய சுயநலத்திற்காக குர்தி' இன மக்களின் போராட்டத்தையும் கேட்டலோனியா தனிநாடு கோரிக்கையையும் கண்டுகொள்ளாமல் உள்ளன. மேலும் இந்நாடுகள் ஸ்பெயின் அரசின் பாசிசப் போக்கை ஆதரிக்கின்றன.

உலகில் உள்ள பல மனித உரிமை ஆர்வலர்களும் பல அரசியல் இயக்கங்களும் கேட்டலோனியாவின் மக்கள் வாக்கெடுப்பை ஆதரித்து தனிநாடு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். இதன் தொடர்பாகச் செய்திகளும் கட்டுரைகளும் உலக அளவில் வந்தவண்ணமே உள்ளன.

சோயிப் டேனியால் என்கிற ஆய்வாளர் கேட்டலோனியாவின் பிரிவினைக்கு ஆதரவான மக்கள் வாக்கெடுப்பு இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கும் இந்தியாவிற்கு ஓர் எச்சரிக்கை என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். கேட்டலோனியா தனித்தன்மையைப் பாதுகாத்து கேட்டலோனியா மக்கள் பேசும் மொழியைத் தேசிய அளவில் ஆட்சி மொழியாக ஆக்கியும் தங்களின் பண்பாட்டு மொழி உரிமைகளை நிரந்தரமாக நிலைநிறுத்திடவே பிரிவினை கேட்கிறார்கள் என்று இந்த ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

**ஸ்பெயின் நாட்டிற்கு வரி வருவாயை அளிப்பதில் முதன்மையான மாநிலங்களில் ஒன்றாக கேட்டலோனியா உள்ளது. இதே போன்றுதான் தமிழ்நாடு உட்பட சில மாநிலங்கள் இந்திய ஒன்றிய அரசிற்கு**

**அதிக வரிவருவாயை ஈட்டித் தருகின்றன. மேற்கு வங்கம் மராட்டியம் பஞ்சாப் தமிழ்நாடு கர்நாடகம் ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் திரட்டப்படும் வரிவரு வாய் 70 ஆண்டுகளுக்குப் பின்பும் வளராத இந்தி பேசும் வட மாநிலங்களுக்கு இன்றும் பிரித்தளிக்கப் படுகிறது. அதே நேரத்தில் ஒன்றிய அரசு நிதிக்குழு வின் வழியாக அளிக்கும் வரிவருவாய் 5 ஆண்டு களுக்கு ஒரு முறை பகிர்வு செய்யும் போது, அதிக வரிவருவாய் அளிக்கும் ஆறு மாநிலங்களுக்கு ஏறக் குறைய 10 விழுக்காட்டு அளவு நிதியை மிகமிகக் குறைந்த அளவில் பிரித்துக் கொடுக்கிறது. எந்தவித சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை இந்தி வட மாநிலங்கள் நிறைவேற்றாமல் மற்ற மாநிலங்களின் வரிவருவாயைப் பிடுங்கித் தின்னும் நிலையில் உள்ளன.**

சோயிப் டேனியால் இக்கருத்தை உறுதி செய்வதற்கு, இரனஜித் ராய் என்ற ஆய்வாளரின் மேற்கோளைச் சுட்டியுள்ளார். இரனஜித் ராயின் கருத்துப்படி-1961 ஆம் ஆண்டில் மட்டும் மேற்கு வங்கம் அளித்த ஒவ் வொரு நூறு ரூபாய் வரி வருவாயில், 16 ரூபாய் மட்டும் தான் மேற்கு வங்கம் திரும்பப் பெற்றது. ஆனால் இந்தி பேசும் பீகார் மாநிலம் 182 ரூபாய் பெற்றது என்று குறிப்பிடுகிறார். தற்போது வந்துள்ள மாநிலங் களின் வரி வருவாய் ஆய்வுப் புள்ளிவிவரங்களும் இதே நிலைதான் தொடர்கிறது என்று மெய்ப்பித்துக் காட்டியுள்ளன. இது போன்ற மாநில உரிமைக்கான களங்கள் தமிழ்நாட்டில் தொடரும் போது ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டைப் புறக்கணிப்பதாக டேனியால் குறிப்பிட்டுள்ளார். தமிழர்களின் வீர அடையாளமாக இருந்த ஜல்லிக்கட்டு நடத்துவதை உச்ச நீதிமன்றம் தடை செய்தபோது, அதற்கு ஒன்றிய அரசு உறுதுணை புரிந்தபோது தமிழ்நாட்டில் மாபெரும் பேராட்டக்களம் அமைக்கப்பட்டது. தந்தை பெரியார் சுட்டிய தனித் திராவிட நாடு கோரிக்கை மீண்டும் உயிர்த்தெழுகிறது என்பதைச் சமூக வலைதளங்கள் வழி அறிந்து கொள்ளலாம் என்றும் இந்தக் கட்டு ரையாளர் குறிப்பிட்டுள்ளார். இது போன்றே மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி வங்க மொழியை எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயமாக்கி உள்ளார். இந்தித் திணிப் பையும் கண்டித்துள்ளார். கர்நாடக மாநிலத்தில் வேலை யில் அமர்வதற்குக் கன்னட மொழியைப் பயின்றிருக்க வேண்டும் என்ற ஓர் ஆணையைத் தேசியக் கட்சியான காங்கிரசு அரசு வெளியிட்டுள்ளது.

சரக்கு-சேவை வரிச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்துக் கூக்குரலிட்டனர். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 42ஆம் திருத்தத்தின் வழியாக, 1971ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டுதான் ஒவ்வொரு மாநிலத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டது. 2026இல் இந்தச் சட்டத்தின் கால அளவு முடிவுறுகிறது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் மேற்குவங்கம் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 2026க்குப் பிறகு குறையும் வாய்ப்புள்ளது. அதே நேரத்தில் உத்திர பிரதேசம் போன்ற மாநிலங்களில் நாடாளுமன்ற உறுப்பி னர்களின் எண்ணிக்கை உயரும் வாய்ப்புள்ளது. இத்தகைய பிரச்சினைகளுக்கெல்லாம் எல்லா மாநிலங் களும் ஒப்புக் கொள்கிற சரியான ஒரு தீர்வை ஒன்றிய அரசு மேற்கொள்ளவில்லை என்றால் இந்தியாவில் கேட்டலோனியாவின் உணர்வுகள் எதிரொலிக்கும் என சோயிப் டேனியால் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசியலில் இத்தகைய மக்கள்-மாநில உரிமைகளைப் பாதிக்கின்ற கருத்துக்களில் அதிக அக்கறை கொள்ளாமல் மாநிலக் கட்சிகளும் மற்ற அரசியல் கட்சிகளும் இருப்பதால்தான் மீண்டும் மீண்டும் ஒன்றிய அரசியல் அதிகாரங்களைக் குவிப்பதைத் தடுக்க முடியவில்லை. 1) ஒன்றிய அரசு, 2) ஜி.எஸ்.டி. மாநிலங்கள், 3) ஜி.எஸ்.டி. ஒன்றிய அரசின் நேரடி நிர்வாகப் பகுதிகள், 4) ஜி.எஸ்.டி. மாநிலங்களுக்கு இடையேயான ஜி.எஸ்.டி. என நான்கு வகையான வரி முறைகளைத் திணித்து இந்தியப் பொருளாதாரத்தைச் சீரழிவுப் பாதையில் எடுத்துச் செல்வதை ஒன்றிய அரசின் முன்னாள் அமைச்சர்களும் பாஜகவின் முக்கிய தலைவர்களுமான யஷ்வந்த் சின்கா அருண்ஷோரி சுப்பிரமணிய சாமி ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாநிலங்களின் வரி உரிமையைப் பறித்து சரக்கு-சேவை வரிக் குழுவிடம் அளித்துக் குழப்பத்தையே விளைவித்துள்ளனர் என்பதற்கு அண்மையில் மாற்றப் பட்ட வரிவிகிதங்களே எடுத்துக்காட்டுகளாக உள்ளன. இதுவரை 22 முறை இந்தக் குழு கூடியும் ஒரு சரியான முடிவை எடுக்க முடியாமல் தடுமாறுவதில் இருந்து, அதிக அதிகாரக்குவிப்பு ஒன்றிய அரசில் இருப்பது ஆபத்தில் முடியும் என்பதை மெய்ப்பித்துள்ளது. தமிழ்நாட்டில் நீட் தேர்வு, கதிராமங்கலம் போராட்டம், நெடுவாசல் ஓ.என்.ஜி.சி குழாய்ப் பதிப்பிற்கு எதிரான போராட்டம், கீழடியில் நடைபெற்று வரும் தொல் ஆய்வுக்கு இந்திய அரசின் நிதி ஒதுக்காத போக்கு ஆகியன தமிழ்நாடு எவ்வாறு வெளிப்படையாகவே புறக்கணிக் கப்படுகிறது என்பதை எடுத்தியம்புகின்றன. இவற்றுக் கெல்லாம் உரிய நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தினால் ஸ்பெயினில் ஏற்பட்டு வரும் கேட்டலோனியா விளைவுகள் இந்தியாவிலும் எதிரொலிக்காதா? என்பதை ஒன்றிய அரசு ஒதுக்கிவிட முடியாது. **மாநிலங்களின் தன்னுரிமையா? தனியாட்சியா? என்ற முழக்கங்கள் ஒலிப்பதைக் காலம்தான் முடிவு செய்யும்.**

# பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் ஓராண்டு நரேந்திர மோடியின் முகத்திரையைக் கிழிப்போம்

- க. முகிலன்

இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி 2016 நவம்பர் 8 அன்று புழக்கத்திலிருந்த ரூ.1000, ரூ.500 பணத்தாள்கள் செல்லாது என்று அதிரடியாக அறிவித்து ஓராண்டாகிறது. இந்தப் பண மதிப்பு நீக்க நடவடிக்கையின் குறிக்கோள் கருப்புப் பணத்தையும் கள்ளப்பணத்தையும் ஒழிப்பது, தீவிர வாதிகளுக்குப் பணம் கிடைக்காமல் தடுப்பது, ஊழலை ஒழிப்பது என்று தொலைக்காட்சியில் நாட்டு மக்களிடம் உரையாற்றிய போது கூறினார். இந்த நாட்டில் தேச விரோதிகளும், சமூக விரோதிகளும் பதுக்கி வைத்துள்ள பணம் 'பீத்த காகிதமாகி'விடும் என்றார். ஆனால் மோடி அரசின் பணமதிப்பு நீக்க நடவடிக்கை கடந்த ஓராண்டில் படுதோல்வியடைந்திருப்பதுடன், மக்களைச் சொல்லொணா இன்னல்களுக்கு ஆளாக்கி, நாட்டின் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்திருக்கிறது.

எந்தவொரு அரசும் ஒரு புதிய நடவடிக்கையை எடுப்பதற்குமுன் அதனால் ஏற்படக்கூடிய விளைவு களை ஆராய்ந்த பிறகே செயலில் இறங்கும். நரேந்திர மோடி இவ்வாறெல்லாம் ஆராயாமல், தனக்கே உரிய ஆணவப் போக்குடன் பணமதிப்பு நீக்க நடவடிக்கை யைச் செயல்படுத்தினார். 2016 நவம்பர் 4 அன்று இந்தியாவில் புழக்கத்தில் இருந்த மொத்தப் பணத்தின் மதிப்பு ரூ.17.97 இலட்சம் கோடியாகும். இதில் ரூ.1000, ரூ.500 பணத்தாள்களின் மதிப்பு ரூ.15.44 இலட்சம் கோடியாகும். அதாவது இது 86.4 விழுக்காடாகும். ஒரே இரவில் 86 விழுக்காடு பணத்தின் மதிப்பை நீக்கு வது எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து மோடி கவலைப்படவில்லை.

பணமதிப்பு நீக்க அறிவிப்பு வெளியிட்ட நாளில் பண மதிப்பிழந்த ரூ.15.44 இலட்சம் கோடிக்கு ஈடுசெய்யும் பொருட்டு அச்சிடப்பட்ட புதிய ரூ.2000 தாள்கள் ரூ.6.5 இலட்சம் கோடிக்கு மட்டுமே ரிசர்வ் வங்கியிடம் கையிருப் பில் இருந்தது. அப்போது புதிய 500 ரூபாய் தாள் ஒன்றுகூட ரிசர்வ் வங்கியிடம் இல்லை.

ஏடிஎம் (ATM)களைப் புதிய 2000 ரூபாய் தாள்களை அளிக்கும் வகையில் மாற்றியமைக்க மூன்று வாரங் களுக்கு மேலாகியது. அதனால் தங்களிடம் இருந்த - மதிப்பிழந்த பணத்தாள்களை வங்கிகளில் மாற்றிக்கொள்ள மக்கள் கூட்டம் திரண்டது. ஏடிஎம் இயந்திரங்கள் மாற்றி யமைக்கப்பட்ட பின் அவற்றில் பணம் எடுக்க மணிக் கணக்கில் மக்கள் வரிசையில் நின்றனர். இவ்வாறு பல மணிநேரம் வரிசையில் நின்றவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் மயங்கி விழுந்து மாண்டனர். பணமதிப்பு




நீக்க நடவடிக்கை சுனாமியைப் போல் மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது.

மோடி அரசின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையை அரசியல் கட்சிகளும், சமூகச் செயற்பாட்டாளர்களும், பொருளியல் வல்லுநர்களும் கடுமையாக எதிர்த்தனர். 2016 நவம்பர் 13 அன்று கோவாவில் நடந்த நிகழ்ச்சி யில் பேசிய மோடி, "திசம்பர் 30 வரை - அதாவது 50 நாள்கள் பொறுத்துக் கொள்ளுங்கள், என்னுடைய நோக்கத்திலோ, செயற்பாட்டிலோ ஏதேனும் தவறு இருந்தால் என்னைப் பொது இடத்தில் தூக்கிலிடுங்கள்" என்று பேசினார், 30.8.2017 அன்று ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் பணமதிப்பு நீக்க நட வடிக்கை படுதோல்வியடைந்துவிட்டது என்பது அம்பல மாகியுள்ளது. இத்தோல்விக்குப் பொறுப்பேற்று மோடி, தற்கொலை செய்து கொள்வாரா?

பணமதிப்பு நீக்க நடவடிக்கையை எதிர்த்தவர் களை பாரதிய சனதாக் கட்சியினர் 'மோசடிப் பேர்வழி கள்', 'தேச விரோதிகள்' என்று பழிதூற்றினர். மேலும் எல்லையில் நமது படை வீரர்கள் கடுங்குளிரில் நின்று கொண்டு நாட்டைக் காத்து வருகின்றனர். ஏடிஎம்-இல் பணம் எடுக்க ஒருநாள் நிற்கக் கூடாதா என்று 'தேச பக்தி'யுடன் கேள்வி கேட்டார்கள்.

பணமதிப்பு நீக்க நடவடிக்கை நடைமுறைக்கு வந்ததும், மக்களிடம் இருந்த பணம் செல்லாததாகி விட்டதால் அன்றாடச் செலவுக்கே பணம் இல்லாமல் தத் தளித்தனர். வங்கியில் உள்ள தங்கள் பணத்தையும் எடுக்க முடியாத நிலை. பல மணி நேரம் கால்கடுக்க நின்றாலும் ரூ.2000, ரூ.5000க்குமேல் தங்கள் பணத்தை எடுக்க முடியாது. ரூ.2000 தாள்களாகத்

தரப்படும் பணத்துக்குச் சில்லரை கிடைக்காமல் திண்டாடினர்.

நவம்பர் மாதம் இந்தியா முழுவதும் ஒருபுறம் அறுவடையும், மறுபுறம் அடுத்த பயிருக்கான விதைப்பும் உழவர்களால் மேற்கொள்ளப்படும் காலம். விளை பொருள்களை விற்க முடியாமல், அடுத்த பயிருக்கான உழவுப் பணிக்கும், இடுபொருள்கள் வாங்குவதற்கும் ரொக்கப் பணம் இல்லாமல் தவித்தனர். மருந்துக்கடைகள், பெட்ரோல் விற்பனை நிலையங்களில் மதிப்பழிந்த பணத்தாள்களை மாற்றிக்கொள்ள அனுமதித்த நடுவண் அரசு இந்தியாவில் உள்ள 93,000 வேளாண் கூட்டுறவுச் சங்கங்களில் பணத்தை மாற்றுவதற்குத் தடை விதித்தது. அதனால் வேளாண்மைத் தொழிலும், ஊழவர்களின் வாழ்நிலையும் கடுமையாக பாதிக்கப்பட்டதுடன், கிராமப்புறப் பொருளாதாரமே சீர்குலைந்தது.

புதிய ரூ.2000, ரூ.500 தாள்கள் புழக்கத்திற்கு வருவதற்கு ஆறு மாதங்களுக்கு மேலானதால், சிறுகுறு தொழில்களில் 35 விழுக்காடு வேலையிழப்பும் 50 விழுக்காடு வருவாய் இழப்பும் ஏற்பட்டன. சில்லரை வணிகம், உணவு விடுதிகள், தேநீர்க்கடைகள் முதலானவற்றில் விற்பனை சரிந்தது. கட்டுமானத் தொழில் அடியோடு சாய்ந்தது. கட்டுமானத் தொழிலில் கூலிவேலை செய்த பிற மாநிலத்தவர் தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்பினர். இந்தியாவில் உழைப்பாளர்களில் 92 விழுக்காட்டினர் அமைப்புசாரா தொழில்களிலேயே வேலை செய்கின்றனர். இவர்களுக்குக் கூலி பணமாகவே தரப்படுகிறது. கடுமையான பணத்தட்டுப்பாடு ஏற்பட்டதால் அமைப்புசாரா தொழில்கள் அனைத்தும் முடங்கின. இவற்றிலிருந்து மீண்டெழுவதற்கு முன்பாகவே ஜி.எஸ்.டி. என்கிற இரண்டாவது தாக்குதலுக்குள்ளாகி தள்ளாடிக் கொண்டிருக்கின்றன.

பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் கேடுகளைக் கண்கூடாகக் கண்ட பிறகும் நரேந்திர மோடியும் பா.ச.க.வினரும் ரூ.4 இலட்சம் கோடி முதல் 5 இலட்சம் கோடி வரையில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தை மாற்ற முடியாமல், அவை மக்கி மண்ணோடு மண்ணாகி விடும் என்று ஆரூடம் கூறிவந்தனர். ஆயினும் நிதி அமைச்சர் அருண் ஜேட்லி, பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் தோல்வியைத் திசைத்திருப்புவதற்காக, முன்னெச்சரிக்கை உணர்வுடன், பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் நோக்கம், டிஜிட்டல் இந்தியாவை - ரொக்கம் இல்லாத பரிவர்த்தனையை வளர்த்தெடுப்பதேயாகும் என்று கூறிவந்தார்.

ரூ.2000 புதிய பணத்தாள்கள் புழக்கத்துக்கு வந்த அடுத்த மாதமே போலி ரூ.2000 தாள்கள் பல இடங்களில் பிடிப்பட்டன. மொத்தம் உள்ள பணத்தில் கள்ளப் பணம் எனப்படும் போலிப் பணத்தாள் ரூ.400 கோடி அளவிற்கே உள்ளது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. புதிய நவீன தொழில்நுட்ப உத்திகளுடன் அச்சடிக்கப்பட்டதாகக் கூறப்படும் ரூ.2000 தாளைப் போன்ற போலித் தாள்கள் புழக்கத்துக்கு வந்ததால், கள்ளப்பண ஒழிப்பு என்கிற முழக்கம் மூச்சற்றுப் போனது.

2016 திசம்பர் மாதம் சென்னை ஆர்.கே. நகர் தொகுதியில் நடைபெறுவதாகயிருந்த இடைத்தேர்தலின் போது, புதிய ரூ.2000 தாள்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டன. வாக்காளர்களுக்கு அளிப்பதற்கான ரூ.89 கோடியில் எந்தெந்த அமைச்சர்களுக்கு எவ்வளவு பணம் அளிக்கப்பட்டது என்கிற பட்டியல் அமைச்சர் விஜய பாஸ்கர் வீட்டில் வருமான வரித்துறையினரால் கண்டெடுக்கப்பட்டது. இப்பணம் புதிய இரண்டாயிரம் ரூபாய் தாள்கள் தானே!

மணல் கொள்ளையனான - அமைச்சர் பன்னீர் செல்வத்தின் கூட்டாளியான சேகர் ரெட்டி வீட்டில் வருமான வரித்துறையினர் மேற்கொண்ட ஆய்வில் ரூ.170 கோடிக்கு ரொக்கமாகப் பணம் கைப்பற்றப்பட்டது. அதில் புதிய ரூ.2000 தாள்கள் கட்டுக்கட்டாகக் கிடந்தன. இது பானைச் சோற்றுக்குப் பதம் ஒரு சோறு என்பது போன்றதாகும். பணமதிப்பு நீக்கத்தால், மக்கள் தங்களிடம் உள்ள சிறுதொகைக்கு வங்கிகளில் மாற்றிக் கொள்வதற்காகக் கால்கடுக்க நின்று கொண்டிருந்த நேரத்தில், இந்தியா முழுவதும் சேகர் ரெட்டியைப் போல் கருப்புப் பணத்தை வைத்துக் கொண்டிருந்தவர்கள் ரிசர்வ் வங்கி வழியாகவும் மற்ற வங்கிகள் வழியாகவும் தங்கள் கருப்புப் பணத்தை எளிதாக வெள்ளையாக மாற்றிக் கொண்டனர்.

இதை ரிசர்வ் வங்கி 30.8.2017 அன்று வெளியிட்ட அறிக்கை திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துகிறது. பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்குமுன் ரூ.15.44 இலட்சம் கோடி மதிப்புக்கு ரூ.1000, ரூ.500 பணத்தாள்கள் புழக்கத்தில் இருந்தன. 2017 சூன் 30 முடிய இதில் ரூ.15.28 இலட்சம் கோடி வங்கிக்குத் திரும்பிவிட்டது. இவ்வாறு வங்கியில் மாற்றப்படாமல் உள்ள பழைய பணத்தாள் மதிப்பு ரூ.16,000 கோடி மட்டுமே என்று ரிசர்வ் வங்கி அறிக்கை கூறுகிறது. ரூ.4 இலட்சம் கோடி முதல் ரூ.5 இலட்சம் கோடி வரையில் உள்ள கருப்புப் பணம் வங்கிக்கு வராது என்று மோடி அரசு உச்சநீதிமன்றத்தில் கூறியது என்னவாயிற்று? 98.96 விழுக்காடு பணம் வங்கிகளில் மாற்றப்பட்டுவிட்ட நிலையில் கருப்புப் பணத்தை ஒழிப்பதே பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் குறிக்கோள் என்கிற பேச்சும் பொய்யாகிவிட்டது.

ரிசர்வ் வங்கியின் அறிக்கை வெளியான அன்றே நிதி அமைச்சர் அருண் ஜேட்லி ஒரு அறிக்கை வெளி




யிட்டார். அதில் பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் நோக்கம் கருப்புப் பணத்தைக் கைப்பற்றுவதல்ல; மாறாக பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தை வங்கிகளில் மாற்றச் செய்வதன் மூலம் அதை வெள்ளை யாக்கி, நாட்டின் பொருளாதாரத்தில் ஈடுபடுத்தச் செய்வ தேயாகும் என்று கூறியிருக்கிறார். அதாவது கருப்புப் பணம் வங்கியில் செலுத்தப்பட்டதே பெரிய சாதனை என்கிறார். இதைவிட மானங்கெட்ட விளக்கத்தை வேறு எவராலேனும் தரமுடியுமா?

பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் மற்றொரு நோக்கம், டிஜிட்டல் பரிவர்த்தனையை விரிவுபடுத்துவது, அதன்மூலம் ஊழலை ஒழிப்பது என்று அருண் ஜேட்லி கூறிவந்தார். 6.9.2017 நாளிட்ட ‘‘மணிகண்ட்ரோல் நியூஸ்’’ என்கிற செய்தி ஏட்டில் ‘‘2016 நவம் பரில் ரூ.94 இலட்சம் கோடியாக இருந்த டிஜிட்டல் பரிவர்த்தனை 2017 மார்ச்சு மாதம் ரூ.150 இலட்சம் கோடியாக உயர்ந்தது. ரொக்கப் பணத் தட்டுப்பாடு தீர்ந்தவுடன் 2017 ஆகத்து மாதம் இது ரூ.110 இலட்சம் கோடியாகக் குறைந்துவிட்டது’’ என்று கூறப்பட்டுள்ளது. அருண் ஜேட்லி கூறிவருவது உண்மை அல்ல என் பதை இது புலப்படுத்துகிறது. அதேபோல் வரி செலுத்து வோர் எண்ணிக்கை பணமதிப்பு நீக்கத்தால் 25 விழுக் காடு அதிகமாகியிருக்கிறது என்பது அருண்ஜேட்லியின் மற்றொரு வாதம். உண்மையென்னவெனில், 2015-2016ஆம் ஆண்டில் வரிசெலுத்துவோர் எண்ணிக்கை 27 விழுக்காடு உயர்ந்துள்ளது என்பதாகும்.

பணமதிப்பு நீக்கத்தால் தீவிரவாதிகளுக்குப் பணம் கிடைப்பது தடுக்கப்பட்டிருப்பதற்கு எடுத்துக்காட்டாக, காஷ்மீரில் தீவிரவாதிகளுக்குப் பணம் கிடைக்காததால் இராணுவத்தினர்மீது இளைஞர்கள் கல்லெறியும் நிகழ்ச்சிகள் குறைந்திருப்பதைச் சுட்டிக்காட்டும் அருண் ஜேட்லியின் ‘மேதாவித்தனத்துக்கு’ என்ன பரிசு வழங்கலாம்?

பணமதிப்பு நீக்க நடவடிக்கையில் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பு (GDP) 7.7 விழுக்காடு என்பதிலிருந்து 5.7 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது. ‘‘மன்மோகன் சிங் ஆட்சியில்கூட எட்டு முறை ஜி.டி.பி. குறைந் திருக்கிறதே’’ என்று எரிச்சலடைகிறார் மோடி. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசு முதலீட்டு விகிதம் கடந்த எட்டு ஆண்டுகளாக 35 விழுக்காடாக இருந்தது. தற்போது இது 30 விழுக்காடாகக் குறைந்துள்ளது. அதேசமயம் இந்திய கோடீசுவரர்களின் சொத்து மதிப்பு 26 விழுக்காடு உயர்ந்துள்ளது.

15.8.2017 செங்கோட்டையில் சுதந்தர நாள் உரையாற்றிய நரேந்திர மோடி, ‘‘ஏழை மக்களையும் தேசத்தையும் கொள்ளையடித்துப் பணம் சேர்த்தவர் கள் நிம்மதியாகத் தூங்க விடாமல், கருப்புப் பணத் துக்கு எதிராக நடுவண் அரசு நடவடிக்கை எடுத்துவரு கிறது’’ என்று பேசினார். வாய்ச்சவடாலுடன் எப் போதும் பொய்யே பேசும் நரேந்திர மோடியின் முகத்திரையைக் கிழிப்போம்; ஆட்சியிலிருந்து மக்கள் பேராட்டங்கள் மூலம் விரட்டியடிப்போம்.

## திராவிடர் இயக்க ஆய்வாளர் முனைவர் பு.இராஜதுரை மறைந்தார்

திராவிடர் இயக்க ஆய்வாளரும், தமிழக அரசின் வரலாற்று ஆய்வு மையத்தின் முன்னாள் இயக்கு நரும், திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியவரும், பெரியார் அஞ்சல்-வழிக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய வரும் ஆன முனைவர் பு.இராசதுரை அவர்கள், தம் 86-ஆம் அகவையில், 05-10-2017 வியாழன் அன்று, சென்னையில் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர், ‘‘நீதிக்கட்சி அரசின் சாதனைகள்’’, ‘‘நீதிக் கட்சி அரசு பாடுபட்டது யாருக்காக?’’ எனும் ஆய்வு நூல்களையும், நாடார் வகுப்பு வரலாறு பற்றியும் சிறந்த ஆய்வு நூல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரை இழந்து துயருறும் அவருடைய மகன், டாக்டர் அருண் மொழிமாறன், மகள் இசையமுது மற்றும் குடும்ப உறுப்பினர்கள், திராவிடர் கழகத் தோழர்கள் ஆகியோருக்கும் என் சார்பிலும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும் மனங்கசிந்த இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தை யும் உரித்தாக்குகிறேன்.

- **வே.ஆனைமுத்து**

# வேளாண் பெருமக்களே! நீராண்மை நிலைகளைக் காப்பாற்றிட ஒன்றுதிரண்டு போராடுவோம்!

அன்பார்ந்த தமிழகப் பெருமக்களே!

தமிழகம் வெள்ளையர் கால ஆட்சி 250 ஆண்டுகளிலும், 1947 முதல் 1967 காங்கிரசு ஆட்சிக் காலத்திலும், 1967 முதல் இன்று வரையிலும் திராவிடக் கட்சி ஆட்சிகளிலும் வேளாண்மை சார்ந்த நாடாகவே தொடர்ந்து வைக்கப்பட்டுவிட்டது.

இதற்கு விதிவிலக்காக அமைந்தது 1957 முதல் 1963 வரையில் ஆண்ட காமராசர் ஆட்சிக் காலமே ஆகும். காமராசர் ஆட்சிக்குப் பிறகு தமிழகத்தைத் தொழில்வள நாடாக ஆக்கிட திராவிடக் கட்சி ஆட்சிகள் எந்தப் பெரிய முயற்சியையும் செய்யவில்லை.

அதேபோல் வேளாண்மைக்கு இன்றியமையாத மின் உற்பத்தித் துறையிலும், போதிய மின் உற்பத்தி செய்ய எந்தப் பெரிய முயற்சியையும் செய்யவில்லை.

போதாக்குறைக்கு நீர் ஆதாரங்களான 40,000 பெரிய, சிறிய ஏரிகளையும்-அந்தந்த ஏரியின் பரப்பளவையும், கொள்ளளவையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, முடிந்த வரையில், கடந்த 50 ஆண்டுகளில் 30,000 ஏரிகளையாவது அரசு தூர்வாரிக் காப்பாற்றிடவில்லை.

அதேபோல், வனவளம் நிறைந்த தமிழ்நாட்டை வனத்துறை அதிகாரிகளுடனும், மர வணிகர்களுடனும் சேர்ந்து கொண்டும்; அயல்நாட்டுக் கடனைப் பெற்று அந்தப் பணத்தைக் கொண்டு ஏரிகளிலும், பாதுகாக்கப்பட்ட அரசு வனங்களிலும் நிழல் தராத பயனற்ற மரங்களை வளர்ப்பதில் அக்கறை காட்டினர். அந்த அயல்நாட்டுப் பணத்தைத் திராவிட ஆளுங்கட்சியினரும், எதிர்க்கட்சியினரும், வனத்துறை அதிகாரிகளும் பங்குபோட்டுக் கொண்டனர். மேலும் தமிழக ஏரிகளில் கருவேல மரங்களை வளர்த்து ஏரிகளைப் பாழடித்தனர்.

மின்சாரத்தை இலவசமாக வேளாண்மைக்கு கொடுக்கத் தெரிந்த திராவிடக் கட்சி ஆட்சிகளுக்கு - நீர் மின்சாரம், அனல் மின்சாரம், எரிவாயு, காற்றாலை, மத்தியத் தொகுப்பு வகைகளில் மட்டும் ஏறக்குறைய 8000 மெகா வாட் உற்பத்தியை உண்டாக்க முடிந்த தமிழக அரசு, மற்ற வகைகளில் 4000 கிலோ வாட் மின்சாரத்தை மட்டுமே பெறுகிறது. **சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு தி.மு.க. ஆட்சியும் முன்னுரிமை தரவில்லை; அ.தி.மு.க. ஆட்சியும் முன்னுரிமை தரவில்லை.**

2016-2017இல் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்துவிட்டன. அதனால் தமிழகம் எங்கும் கடும் வறட்சி ஏற்பட்டு, புன்செய்ப் பயிர்களும், நன்செய் பயிர்களும் கருகின. குடிநீர் பஞ்சம் எல்லா ஊர் மக்களையும் திண்டாட்டத்தில் விட்டுவிட்டது.

**144 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட இந்தக் கடுமையான வறட்சி மிக மிகக் கொடுமையானது. எப்படி?**

மேட்டூர் அணை முதல் பெரிய பாசன ஏரிகள் உட்பட, எந்த நீர்நிலைக்கும் இன்றுவரை இந்த ஆண்டில் போதிய நீர் வரவில்லை. இந்த 2016-2017 ஆண்டு சராசரியாக தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் தமிழகத்தில் பெய்ய வேண்டிய 32 செ.மீ. மழையை விட, 26 விழுக்காடு மழை அதிகமாகப் பெய்துள்ளது. அப்படியிருந்தும் எந்த ஏரியும் முழுக் கொள்ளளவுக்குத் தூர்வாரப்படாததால், ஒரு ஏரி கூட நிரம்பவில்லை. தமிழகம் முழுவதும் உள்ள பல்லாயிரக்கணக்கான திறந்தவெளிக் கிணறுகளிலும், ஆயிரக்கணக்கான ஆழ்துளைக் கிணறுகளிலும் நீர்மட்டம் உயரவில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் நிலத்தடி நீர் மட்டம் ஓரளவு உயர்ந்துள்ளது. மற்ற மாவட்டங்களில் 3 முதல் 10 அடி வரை நீர்மட்டம் சராசரிக்குக் குறைவாகவே உள்ளது.

2017 அக்டோபரிலும் நல்ல மழை பல பகுதிகளிலும் பெய்தது.

எனவே கட்சி சார்ந்த வேளாண் சங்கங்களும், கட்சி சாராத வேளாண் சங்கங்களும், வேளாண் தொழிலாளர் சங்கங்களும், அரசியல் கட்சிகளும், இளைஞர் அமைப்புகளும், வேளாண் பெருமக்களும் ஒன்றுதிரண்டு,

1. நீர்வரத்து வாய்க்கால்களையும், நீர்ப்போக்கு வாய்க்கால்களையும், சிற்றூர் ஏரிகளையும் நடப்பில் உள்ள புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் தமிழக அரசு தூர்வாரிட வேண்டித் தமிழகம் முழுதும் நாம் போராட வேண்டும்.

உடனே வரப்போகும் வடகிழக்குப் பருவமழை நல்ல அளவில் இருக்கும் என வானியல் ஆய்வு அதிகாரிகள் அறிவிக்கின்றனர். அந்த மழைநீரைச் சேமித்திட அரசு இப்போதே ஆவன செய்யக் கோர வேண்டும்.

2. அத்துடன் வரும் 2018 பிப்ரவரி தொடங்கி சூலைத் திங்களுக்குள் தமிழகம் முழுவதிலுமுள்ள எல்லாப் பெரிய ஏரிகளையும் - மத்திய அரசிடமும், உலக வங்கியிடமும் நிதி வசதி பெற்று, அந்நிதியைக் கொண்டு ஏரிகளைத் தூர்வாருகிற பணியை மட்டும் தமிழக அரசு செய்ய வேண்டும்.

3. பன்னாட்டு நிறுவனங்கள் முதலாளி கோக்கோ கோலா, பெப்சி போன்றவற்றிற்குத் தாமிரபரணி ஆறு தொடங்கி, தென்பெண்ணை ஆறு வரை நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்திட அரசு அளித்துள்ள உரிமங் களை விரைவில் திரும்பப் பெறக் கோரிப் போராட வேண்டும்.

**4. நீரியல் மின்சாரம், அனல் மின்சாரம் இவற்றை மட்டும் நம்பியிராமல், உடனடியாக புதிதாக வீடு கட்டு கிறவர்களுக்கும், ஏற்கெனவே உள்ள கட்டடங்களுக் கும் கதிரியல் மின்சாரம் (Solar Power) பயன்படுத் தப்பட வேண்டும் என்பதைக் கட்டாயமாக ஆக்கி, அதற்குத் தமிழக அரசும், இந்திய அரசும் சேர்ந்து 80 விழுக்காடு மானியம் தரவேண்டும் என்று கோரிப் போராட வேண்டும்.**

இந்தியா முழுவதிலும் எண்ணற்ற தொழிற்சங் கங்கள் இருப்பது போலவே, வேளாண் மக்கள் முன் னேற்றத்துக்குப் பாடுபட எண்ணற்ற சங்கங்கள் தமிழகத் தில் உள்ளன.

எல்லாச் சங்கங்களும் இணைந்து போராடினால் அன்றித் தமிழக அரசும், இந்திய அரசும் செவிகளைச் சாய்க்குமா என்பது ஒரு பெரிய கேள்விக்குறியே!

ஒன்றுபட்டுப் போராடுவோம், வாருங்கள்!
கோரிக்கைகளை வென்றெடுப்போம், வாருங்கள்!

**- வே. ஆனைமுத்து**

# தமிழரில்லாத் தமிழ்நாடு

(எண்சீர் விருத்தம்)

**- பாவலர் வையவன்**

தேன்சிந்தும் அடைபோலக் கிழக்கு வானில்
தெரிகின்ற ஆதவனும் சிரிக்கும் காலை
நான்கொஞ்சம் நறுமலரின் தோட்டந் தன்னில்
நடந்தபடி சுவைத்திருந்தேன் பார்த்துப் பார்த்து
பூண்டினமும் புல்லினமும் மலிந்திருந் தாலும்
பூவினிலே புகழ்கொள்ளும் வாசத் தாலே
மூண்டுவந்த சிந்தனையின் நடுவே எந்தன்
முத்தமிழின் நிலைசற்றே எண்ணிப் பார்த்தேன்

செடிகொடிகள் மரம்விலங்கு பறவை கட்கும்
செல்ஒன்றில் செழித்துவந்த உயிர்க ளுக்கும்
அடிநிலம்நீர் நெருப்போடு வானம் காற்று
அத்தனைக்கும் அடையாளம் தனித்து உண்டு
களிப்புடனே மனங்கலந்து தமிழ ரெல்லாம்
கருத்ததனை யறிந்திடவோர் மொழியைத் தந்தும்
தனித்ததொரு கொடிநாடு கொற்றம் இன்றி
தவிக்கின்றாள் தமிழன்னை தரைமீ திங்கே

ஆனாலும் தமிழ்த்தோட்டம் தன்னில் இன்று
ஆரியமும் ஆங்கிலமும் அன்னியும் நூறும்
தாராள மாய்வந்து முளைத்து விட்டு
தமிழேதான் நானென்று தருக்காய்க் கூறும்
மதமென்னும் பெயரலே மடமை கோடி
மக்களது மனத்தினிலே சேர்தல் போல
பதமென்னும் பசுவேடம் போட்டு இங்கு
பல்வேறு மொழிச்சொற்கள் தமிழை மேயும்!

ஆரியராம் அந்நாளில் இங்கே வந்து
அவமான வடமொழியை வளர்ப்ப தற்கு
சீரியதாம் தமிழ்மொழியை மாற்றி விட்டார்
சிக்கலினை நாக்கினிலே ஏற்றி விட்டார்
ஊரினிலே கொண்டாட்டம் மக்கள் கூட்டம்
உல்லாசக் கலைகளுடன் ஆட்டம் பாட்டம்
தேரினிலே வடமொழியை ஏற்றி விட்டு
தென்தமிழர் தன்மொழிதான் மறந்து விட்டார்!

**நாக்கினிலும் வாக்கினிலும் தூய்மை இல்லை**
**நல்லதமிழ்ப் பேச்சினிலும் தூய்மை இல்லை**
**பாக்களிலும் பாட்டினிலும் தூய்மை இல்லை**
**பழகிவரும் பல்துறையில் தமிழும் இல்லை**
**கூப்பிடவோர் பிள்ளைபெயர் தமிழில் இல்லை**
**கும்பிடுவோர் சிந்தனையும் தமிழாய் இல்லை**
**சாப்பிடவும் சம்பளமும் தமிழில் கேட்கும்**
**தமிழருக்குத் தமிழரென்ற உணர்வே இல்லை!**

# தாஜ்மகால் மதச்சின்னமா? மக்கள் சின்னமா?

உதயை மு. வீரையன்

முகலாய மன்னர்கள் துரோகிகள் என்றும், தாஜ் மகால் துரோகிகளால் கட்டப்பட்டது என்றும், இந்தியக் கலாச்சாரத்திற்கே அவமானம் என்றும் பா.ச.க.வினர் பேசத் தொடங்கியுள்ளனர்.

"இந்தியக் கலாச்சாரத்திற்கு உட்பட்டது இராமா யணமும், கீதையும் தான்; தாஜ்மகால் அல்ல" என்று உத்தரப்பிரதேச முதல்வர் ஆதித்யநாத் வெளிப்படை யாகக் கூறியுள்ளார்.

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் உத்தரப்பிரதேச மாநிலத்தின் சுற்றுலா கையேட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தி சுற்றுலாப் பயணிகளை மட்டுமல்ல, அழகை ஆராதிக்கும் அனை வரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. கடுமையான எதிர்ப்பின் காரணமாக வேறு வழியில்லாமல் ஆக்ரா மேம்பாட்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


எல்லாவற்றையும் மத நோக்கத்தோடு பார்ப்பதன் வெளிப்பாடு இது. கலைகளும், இலக்கியங்களும் சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவை. ஆட்சியாளர்கள் இதனை எப்போது புரிந்துகொள்ளப் போகிறார்கள்?

காவி கட்டிய ஒரு சாமியார் முதலமைச்சராக நியமனம் செய்யப்படும்போதே, இதெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்ததுதான். 'பசுவதை' என்ற பெயரால் இசுலாமியர்களும், தலித்துகளும் அடித்துக் கொல்லப் பட்டனர். அதன்பின் பசுப்பிரியர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று உபதேசம் செய்யப் பட்டது.

அதனால் பயன் என்ன? செத்தவர்கள் உயிரோடு வந்துவிடுவார்களா? செத்தவர்கள் செத்தவர்கள் தானே! நிவாரணங்கள் உயிருக்கு நிகராமோ?

தாஜ்மகால் என்பது உலகமே ஏற்றுக்கொண்ட ஓர் அதிசயம். 1983ஆம் ஆண்டு யுனெஸ்கோவால் அங்கீ கரிக்கப்பட்ட ஓர் அற்புதம். ஆண்டுதோறும் 60 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற அழகின் இருப்பிடம். யாரையோ நினைத்துக் கொண்டு இதனை அவமதிப்பது என்ன நியாயம்?

தாஜ்மகால் இந்தியக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்க வில்லை என்றும், அது துரோகிகளால் கட்டப்பட்டது என்றும், அதை இடிக்க வேண்டும் என்றும் பா.ச.க.



வின் சட்டமன்ற உறுப்பினர் சங்கீத் கோம் அடாவடி யாகப் பேசியுள்ளார்.

'தாஜ்மகால் இந்தியர்களின் இரத்தத்தாலும், வியர் வையாலும் கட்டப்பட்டது என்பதால் அதை இடிக்க வேண்டியது இல்லை' என்று மாநில முதல்வர் ஆதித்ய நாத் பதில் கூறி சமாளித்துள்ளார்.

'ஆக்ராவில் உள்ள தாஜ்மகால் முன்னர் சிவன் கோயிலாக இருந்தது' என்று பா.ச.க.வின் மூத்தத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வினய் கத்தியார் பேசியுள்ளார்.

"ஆக்ராவில் இருப்பது தேஜோ மகால். அதாவது சிவன் கோயில். இந்து மன்னர்களால் கட்டப்பட்டதுதான் தாஜ்மகால். கோயிலின் கட்டமைப்பைப் பார்த்தாலே அது சிவன் கோயிலாக இருந்தது தெரியவரும். சிவன் கோயிலில்தான் மேலிருந்து கீழே நீர் சொட்டும் வகை யில் கட்டப்பட்டிருக்கும். தாஜ்மகாலில் இந்த அமைப்பும் இருக்கிறது" என்று தம் ஆய்வின் முடிவை வெளி யிட்டுள்ளார்.

"எனினும் தாஜ்மகாலை இடிக்க வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் விரும்பும் தாஜ்மகாலை நாம் பாதுகாக்க வேண்டும்" என்றும் இறுதியில் கூறியுள்ளார்.

ஏற்கெனவே அயோத்தியில் பாபர் மசூதி விவகாரத் தில் இந்த உத்தியைத்தான் கையாண்டார்கள். இப்போது இருக்கும் பாபர் மசூதி முன்னர் இருந்த இராமர் கோயிலை இடித்துக் கட்டப்பட்டதுதான் என்று கூறப்பட்டு 1992இல்

தகர்க்கப்பட்டது. அந்த வழக்கில் இந்த வினய் கத்தியாரும் குற்றம் சாட்டப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இந்தக் கலைக் கருவூலத்திற்கு எதிரான கருத்துகள் பலமுறை வந்து அடங்கியதுதான். 2015 ஆம் ஆண்டு ஆக்ரா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் தாக்கல் செய்த மனுவில் இவ்வாறு கூறப்பட்டது :

''ஆக்ராவில் தேஜோ மகாலய'' என்ற சிவன் கோயில் இருந்தது. இந்தக் கோயிலைத்தான் மொகலாய மன்னர் ஷாஜஹான் கல்லறையாக மாற்றித் தாஜ்மகால் கட்டினார். அங்கு சிவன் கோயில் இருந்ததற்கான ஆதாரங்கள், அடையாளங்கள் இப்போதும் உள்ளன.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிமன்றம், இதுதொடர்பாக விளக்கம் கேட்டு மத்திய அரசு, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகம், தொல்பொருள் ஆய்வுத் துறை ஆகியவற்றுக்கு நோட்டீஸ் அனுப்பியது.

இதைத் தொடர்ந்து, 'தாஜ்மகால் பகுதியில் கோயில் இருந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை' என்று 2015 மே மாதம் மத்திய கலாச்சார அமைச்சகம் நாடாளுமன்ற மக்களவையில் தெரிவித்துவிட்டது.

இதெல்லாம் தெரிந்தோ தெரியாமலோ இதே பிரச்சனையை மறுபடியும், மறுபடியும் கிளப்பிக் கலவரத்தைத் தூண்டிவிடுகின்றனர்.

'தாஜ்மகால் தொடர்பாகத் தனக்குக் கூடுதல் ஆவணங்கள் கிடைத்திருப்பதாக பா.ச.க. தலைவர் சுப்பிரமணிய சுவாமியும் கூறியுள்ளார்.'

ஜெய்ப்பூர் ராஜாக்களை மிரட்டியே தாஜ்மகால் இருக்கும் நிலத்தை ஷாஜஹான் பறித்துள்ளார். இதற்கு ஈடாக 40 கிராமங்கள் ஜெய்ப்பூர் மன்னர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இது தாஜ்மகால் நிலத்துக்கு இணையான மதிப்பு அல்ல.

மேலும் ''தாஜ்மகால் நிலத்தில் ஒரு கோயில் இருந்திருக்கிறது. இந்தக் கோயிலை இடித்துவிட்டுத் தான் தாஜ்மகால் கட்டினார்களா எனத் தெரியவில்லை. இதுதொடர்பான ஆவணங்களை விரைவில் வெளியிடப் போகிறேன்'' என்று சுப்பிரமணிய சாமி தெரிவித்துள்ளார்.

கி.பி.1526 மொகலாயப் பேரரசு தோன்றிய காலம். பாபர் (1463-1530) முதல் அவுரங்கசீப் (1659-1680) முடிய முகலாயர் ஆட்சிக் காலம் சுமார் 200 ஆண்டுகள் மட்டுமே!

ஷாஜஹான் (1592-1658) காலத்தில் தாஜ்மகால் மட்டுமின்றி, கோஹினூர் வைரம், மயிலாசனம் ஆகியவையும் அவரது கலை உணர்வை வெளிப்படுத்தின. கட்டடக் கலையில் ஆர்வம் கொண்டமையால், அவர் 'முகலாய அகஸ்டஸ்' எனவும் புகழப் பெற்றார்.

1630இல் அவரது மனைவி மும்தாஜ் இறந்துவிடுகிறார். 1631இல் கட்டடம் கட்டத் தொடங்குகிறது. இதனைக் கட்டுவதற்காக பாரசீகம், அரேபியா, துருக்கி முதலிய நாடுகளில் இருந்து கட்டக் கலைஞர்களை வரவழைத்தார். இந்தியாவின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர்.

உஸ்தாத் இஷா (Ustad Isa) என்னும் சிற்பியின் தலைமையில் கட்டடம் தொடங்கியது. வெனிஸ் நாட்டு வரைபடக்காரர் கொடுத்த மாதிரி வரைபடத்தின் அடிப்படையில் தாஜ்மகால் கட்டப்பட்டது என்று 1641இல் ஆக்ராவுக்கு வந்த ஸ்பெயின் நாட்டுப் பாதிரி மான்ரிக் (Marique) கூறுகிறார்.

இம்மாளிகையைக் கட்டி முடிக்க 22 ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்றும், ரூ.3 கோடி செலவழிந்திருக்கும் என்றும் பன்னாட்டு அறிஞர்கள் மதிப்பிட்டுள்ளனர். இதனைப் பராமரிக்க மன்னர் ஷாஜஹான் 30 கிராமங்களை மானியமாக ஒதுக்கினார் என்று வரலாறு கூறுகிறது.

1666இல் தாஜ்மகாலை நேரில் கண்டு வியந்த தேவநாட் (Thevenot) என்ற பிரெஞ்சுக்காரர், ''இந்தப் புகழ்வாய்ந்த நினைவுச் சின்னம் இந்தியர் சிற்பக் கலை தெரியாதவர் அல்லர் என்பதை எடுத்துக்காட்ட போதுமான சான்றாகும். இதனுடைய புதுப்பாணி ஐரோப்பியருக்கு விந்தைப் பொருளாகக் காணப்படினும் இது ரசிப்பதற்கு ரம்மியமானது; மிகவும் அழகானது'' எனத் தெரிவித்துள்ளார்.

அன்று மட்டுமல்ல, இன்றும்கூட இதைப் பார்ப்பவர்கள் இப்படித்தான் கூறுகின்றனர். இந்த அழகு மாளிகையை அந்நியப்படுத்துவதால் யாருக்கு இழப்பு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏரியின் மேல் கோபப்பட்டுக் குளிக்காமல் போவதால் யாருக்கு நன்மை அல்லது தீமை?

எளிதில் தீப்பற்றக் கூடிய மதப்பிரச்சனையைத் தூண்டிவிட்டு, அரசியல் செய்வது நீண்டகாலம் நிலைக்காது. தேர்தலில் வெற்றி பெற மதநேயத்தைவிட, மனிதநேயமே சிறந்தது என்பதை மக்கள் தலைவர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

முகலாயர்கள் அந்நியர் என்றால் ஆங்கிலேயர்களும் அந்நியர்களே! அவர்கள் விட்டுச் சென்ற அடையாளங்களை அழித்துவிட முடியமா?

''ஆங்கிலேயர் ஆட்சியில் கட்டப்பட்ட தில்லி நாடாளுமன்றக் கட்டடம், குடியரசுத் தலைவர் மாளிகை ஆகிய

வையும் அடிமைச் சின்னங்கள்தாம். அவற்றையும் இடித்துவிடலாமா?'' என்று சமாஜ்வாதி மூத்தத் தலைவர் ஆசம்கான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்வாறு விவாதங்கள் தொடரலாம். கேள்விகளுக்கு கேள்விகளே பதிலாக அமையாது. மக்களாட்சி என்பது மக்களுக்கானது; மதங்களுக்கான ஆட்சியல்ல. எல்லா மதங்களும் அன்பையே போதித்தாலும், வம்பையே வளர்த்துக் கொண்டிருக்கின்றன என்பதே வெளிப்படை.

தாஜ்மகால் பற்றிய விவாதங்கள் முடிவடைவதற்குள் கர்நாடகத்தில் திப்பு சுல்தான் ஜெயந்தி விழாவை முன்வைத்து புதிய விவாதங்கள் தொடங்கியுள்ளன. 'இந்துக்களுக்கு எதிரானவர் என்பதால் திப்புசுல்தானுக்கு அரசு சார்பில் விழா கொண்டாடக் கூடாது' என்று பா.ச.க.வினரும், ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட இந்து அமைப்பினரும் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

மைசூரை ஆண்ட திப்புசுல்தானின் பிறந்த தினம் கர்நாடகத்தில் கடந்த 2015ஆம் ஆண்டு முதல் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. 3ஆவது ஆண்டாக நவம்பர் 10 அன்று இந்த விழாவைக் கொண்டாட காங்கிரசு தலைமையிலான மாநில அரசு முடிவெடுத்துள்ளது.

''ஆங்கிலேயர்களுக்கு எதிராக 4 போர்களில் ஈடுபட்டவர் திப்புசுல்தான். ஆங்கிலேயருக்கு எதிரான போரில்தான் அவர் உயிர்விட்டார். அவரது ஜெயந்தி விழாவை அரசியலாக்க வேண்டாம். கர்நாடகத்தில் ஆட்சியில் இருந்த போது திப்புசுல்தான் பெயரைப் பயன்படுத்திக் கொண்ட பா.ச.க. இப்போது எதிர்ப்பு தெரிவிப்பது ஏன்?'' என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா கேள்வி எழுப்பியுள்ளார்.

''மதம் என்னும் பேய் பிடியாதிருக்க வேண்டும்'' என்றார், வள்ளலார். இப்போது இந்தியாவில் இந்தப் பேய் தலைவிரித்தாடுகிறது. அந்தப் பேயை விரட்ட வேண்டியவர்களே அதைத் தூண்டி விடுகின்றனர். இதனால் அரசியல் ஆதாயம் தேட முயல்கின்றனர்.

''நான் சர்வாதிகாரியாக இருந்தால் மதமும், அரசாங்கமும் தனித்தனியாக இருக்கும். என் மதத்தில் உறுதியுடன் நிற்பேன். அதற்காக நான் உயிரையும் கொடுப்பேன். ஆனால் மதம் என் சொந்த விஷயம். அரசாங்கத்திற்கும், அதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை...'' என்றார், காந்தியார்.

இதனை இந்துத்துவ அரசியல்வாதிகள் எண்ணிப் பார்க்க வேண்டும். பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம். எல்லாரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது. இந்தப் பாடத்தை இவர்கள் எப்போது கற்றுக்கொள்ளப் போகிறார்கள்?

மடல் பகுதி

## கொசு ஒழிப்பு

அய்யா,

தற்போது தமிழ்நாட்டில் பல ஊர்களில் டெங்கு, சிக்கன்குன்னியா, பன்றிக் காய்ச்சல் போன்ற காய்ச்சல்களும் மற்றும் பல தொற்றுநோய்களும் வருகின்றன. ஆனால் கொசு ஒழிப்பு என்ற பெயரில் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவை போதுமானதாக இல்லை. கொசு மருந்து அடிப்பது என்ற பெயரில் தெருக்களில் மட்டும் கொசு மருந்து அடிக்கப்படுகிறது. அவ்வாறு அடிப்பதால் கொசுக்கள் ஒழியாது. 1945-1955 வாக்கில் ஒவ்வொரு வீட்டிலும் தவறாமல் கூரை வீடு, ஓட்டுவில்லை வீடு மற்றும் மெத்தை வீடு போன்ற அனைத்து வீடுகளிலும், சந்து, பொந்து, சுற்றுப்புறம் போன்ற அனைத்து இடங்களிலும் மருந்து அடித்தார்கள். அதில் பாம்பு, பல்லி, அரணை, கரப்பான்பூச்சி போன்ற அனைத்து நச்சு உயிர்களும் இறந்தன. அதேபோல் கீழ்க்கண்ட விபரப்படி கொசு மருந்து அடித்தால் ஒழிய, கொசுக்களை அழிக்க முடியாது.

1. தெருக்களில் புற்கள் மற்றும் நச்சுச் செடிகளை அழிக்க களைக்கொல்லி மருந்து அடித்து அழிக்க வேண்டும்.
2. நகர்ப்புறங்களில் உள்ளதுபோல் கழிவுநீர் வாய்க்கால் அமைத்து, நீர் தேங்காமல் செல்லவும், உடனுக்குடன் சுத்தம் செய்து தெருக்களைச் சுத்தமாக வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
3. தெருவில் மட்டும் கொசு மருந்து அடித்தால் கொசுக்களை அழிக்க முடியாது. எனவே வீடுதோறும் சந்து, பொந்துகள் அனைத்திலும் கொசு மருந்து அடித்தால் தான் கொசுவை ஒழிக்க முடியும்.
4. **ஆடு, மாடுகள், பன்றிகள் அடைக்கும் தொழுவங்களிலும் கொசு மருந்து அடிக்க வேண்டும்.**
5. 100 நாள் வேலைத்திட்டத்தில் ஆட்கள் மூலம் புற்களை வெட்டிச் சுத்தப்பத்துவது என்பது அரசுக்கு வீண்செலவாகும். அவர்கள் முழுமையாகப் புற்களை வெட்டுவதும் இல்லை. அவர்கள் ரூ.25/- (ரூபாய் இருபத்தைந்து)க்குக்கூட வேலை இல்லை.

**எனவே மேலே கூறிய முறையில் மருந்து அடிக்க வேண்டுமாய்த் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மேற்கூறிய முறையைப் பின்பற்றி மருந்து அடிக்கவில்லையென்றால், அரசு செலவு செய்யும் நிதியும், நேரமும் வீண் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**- மா. நாராயணசாமி**

மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர், பெரம்பலூர்

# பெண்களின் உரிமைகளைக் காக்கும் உச்சநீதிமன்றத்தின் அதிரடித் தீர்ப்பு

க. முகிலன்

பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் குறித்த செய்திகள் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. இதில் பெண்கள் பலர் கொல்லப்படுகின்றனர். மூன்று அகவை, அய்ந்து அகவைச் சிறுமியரும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்படும் கொடுமையும் நிகழ்கிறது. இந்தச் சூழலில் இளம்பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்கு எதிராக 11.10.2017 அன்று உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் மதன் பி. லோகுர், தீபக் குப்தா ஆகியோரைக் கொண்ட அமர்வு, "15 அகவையிலிருந்து 18 அகவைக்குள் உள்ள தன் மனைவியுடன் கணவன் உடலுறவு கொள்வது கற்பழிப்பே ஆகும். திருமணமான - 18 அகவைக்குட்பட்ட ஒரு பெண் இவ்வாறு பாதிக்கப்பட்டால் ஓராண்டிற்குள் புகார் அளிக்கலாம். அக்கணவன்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். 18 அகவைக்குட்பட்ட ஒரு பெண்ணைத் தன் உடல் மீது எந்த உரிமையும் இல்லாத ஒரு பண்டமாகவோ அல்லது தன் கணவனுடன் உடலுறவு கொள்ள மறுக்கும் உரிமையற்றவளாகவோ நடத்தக்கூடாது. ஒரு இளம்பெண்ணின் மனித உரிமைகள் - அவள் திருமணமானவராகவோ அல்லது ஆகாதவராகவோ இருந்தாலும் மதிக்கப்பட வேண்டும்; ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்" என்று தன்னுடைய தீர்ப்பில் கூறியிருக்கிறது.

2006ஆம் ஆண்டின் குழந்தைகள் திருமணத் தடுப்புச் சட்டம், 2012ஆம் ஆண்டின் பாலியல் வன்புணர்ச்சியிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், சிறுவர் நீதிக்கான சட்டம் (Juvenile Justice Act) ஆகியவற்றில் சிறுவர் (Child) என்ற சொல்லுக்கு 18 அகவைக்கு உட்பட்டவர் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 375இன் 2ஆம் உட்பிரிவு 15 அகவை நிரம்பிய தன் மனைவியுடன் கணவன் உடலுறவு கொள்வது குற்றம் ஆகாது என்று கூறுகிறது. இந்த விதிவிலக்கு 1940இல் ஏற்படுத்தப்பட்டது. இதே 375ஆவது விதியில் 18 அகவைக்குக் கீழ்உள்ள-திருமணமாகாத ஒரு பெண்ணுடன் அவளுடைய ஒப்புதலுடனோ அல்லது ஒப்புதல் இல்லாமலோ உடல் உறவு கொள்வது கற்பழிப்புக் குற்றமாகும் என்று கூறப்பட்டுள்ளது. ஒரே சட்டத்துக்குள் உள்ள முரண்பாடு இது.

இந்த முரண்பாட்டைக் களையுமாறு "சுதந்தரச் சிந்தனை" (Independent Thought) என்கிற அமைப்பு



உச்சநீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்கைத் தொடுத்தது. அதனுடைய விண்ணப்பத்தில், "இந்திய தண்டனைச் சட்டம் 375ஆவது பிரிவில் அளிக்கப்பட்டுள்ள விதிவிலக்கு திருமணமான 18 அகவைக்குட்பட்ட சிறுமியரின் வாழ்க்கை மற்றும் சமத்துவமான அடிப்படை உரிமைக்கு எதிராக இருக்கிறது. இது குழந்தைகள் திருமணத் தடைச் சட்டத்துக்கு எதிராக இருப்பது மட்டுமின்றி, குழந்தைகள் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. எனவே இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 375இன் 2ஆவது பிரிவில், திருமணமானதைக் காரணம் காட்டி 15 அகவை முதல் 18 அகவைக்கு உட்பட்ட சிறுமியருடன் கணவன்மார்கள் உடலுறவு கொள்ள அனுமதிக்கும் சலுகையை இரத்துச் செய்ய வேண்டும்" என்று கோரியிருந்தது. குழந்தைகள் நலனுக்காக நோபல் பரிசு பெற்ற கயிலாஷ் சத்தியார்த்தியும் அவர் நடத்தும் தொண்டு நிறவனத்தின் சார்பில் இதேபோன்றதோர் பொதுநல வழக்கை உச்சநீதிமன்றத்தில் தொடுத்தார்.

இந்த வழக்கில் 11.10.2017 அன்று தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், "இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 375இன் 2ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள சலுகை இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 14, 15 மற்றும் 21 ஆகியவற்றுக்கு எதிரானது. நடுவண் அரசும், மாநில அரசுகளும் நாட்டில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுவரும் குழந்தைகள் திருமணங்களைத் தடை செய்யும் வகையில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று கூறினர்.

இந்த வழக்கில் மன்மோகன் சிங் தலைமையி லிருந்த நடுவண் அரசு இந்திய தண்டனைச் சட்டம் 375இல் அளிக்கப்பட்டுள்ள விதிவிலக்கை ஆதரித்தது. மோடி தலைமையிலான நடுவண் அரசும் இதே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. உச்சநீதிமன்றத்தில் நடுவண் அரசின் சார்பில் அளிக்கப்பட்ட அறிக்கையில், ‘‘பெண்களின் திருமண அகவை 18 என்பது உண்மை தான். 2006ஆம் ஆண்டின் குழந்தைகள் திருமணத் தடுப்புச் சட்டத்தின்படி இதை மீறுவோர் தண்டிக்கப்படு வார்கள். அதேசமயம் கிராமப்புறங்களில்தான் பெரும் பான்மை மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய மரபுகள், பழக்கவழக்கங்களின்படி குழந்தைத் திருமணங் களைச் செய்கின்றனர். தேசிய குடும்ப நலவாழ்வு அமைப்பு நடத்திய மூன்றாவது ஆய்வில், 18-29 அகவையில் உள்ள பெண்களில் 46 விழுக்காட்டினர் 18 அகவைக்கு முன்பே திருமணம் செய்துகொண்ட வர்கள் என்றும், தற்போது திருமணமாகி 18 வயதுக் குள் உள்ள சிறுமியர் எண்ணிக்கை 230 இலட்சம் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே 15-18 அகவையில் உள்ள இளம் பெண்களைத் திருமணம் செய்து கொண்டி ருக்கும் கணவர்கள் மீது கற்பழிப்புக் குற்ற நடவடிக்கை எடுப்பது நடைமுறையில் இயலாத ஒன்றாகும்’’ என்று கருத்துரைத்தது (The Hindu, 12.10.2017).

நடுவண் அரசு உச்சநீதிமன்றத்தில் அளித்த அறிக்கையில் தெரிவித்துள்ள புள்ளிவிவரத்தின்படி, கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளில் - அதாவது இந்த 21ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் நடைபெற்ற திருமணங்களில் மணப்பெண்களில் பாதிப்பேர் 18 அகவைக்கு உட்பட்டவர்களாக இருந்துள்ளனர்.

பெண்களின் உரிமையைப் பறிக்கும் இக்கொடிய நிலை 21ஆம் நூற்றாண்டிலும் இந்தியாவில் நீடிப்பது ஏன்? இந்துமத சாத்திரங்களிலேயே தலையாயதாகக் கருதப்படும் மனுஸ்மிருதியில், ஒரு பெண் தன் குழந் தைப் பருவத்தில் தந்தைக்கும், திருமணம் ஆனபின் கணவனுக்கும், முதுமையில் மகனுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று கூறப்பட்டிருப்பது இன்றளவும் ஆண்களின் சிந்தனையில் குடிகொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும். பெண் என்பவள் எந்த அகவையிலும், எந்த நிலையிலும் சுதந்தரமாகச் சிந்திக்கவோ, செயல் படவோ கூடாது; ஆணுக்கு அடிமையாகவே இருக்க வேண்டும் என்று இந்துமத சாத்திரங்களும், இதிகாசங் களும், புராணக் கதைகளும் வலியுறுத்துகின்றன. இந்து மதம் மட்டுமின்றி, கிறித்துவ, இசுலாமிய மதங் களும் பெண்ணுரிமையை மறுப்பதுடன், பெண் என் பவள் ஆண்களை மயக்கித் தன் காமப்பசியைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற தணியாத தீய வேட்கை கொண்டவள்; பெண் நம்பத்தக்கவள் அல்லள் என்று கூறுகின்றன.

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் அடிமைத்தனத்திற்குக் காரணம் அவர்களுக்கு கல்வியும் அதிகாரமும் மறுக்கப் பட்டமையே ஆகும் என்று அம்பேத்கர் சொல்லுவார். பெண்களுக்கு வரலாறு நெடுகிலும் கல்வியும் அதிகாரமும் மறுக்கப்பட்டதுடன் சொத்துரிமை முற்றிலுமாக மறுக்கப் பட்டதே அவர்களின் அடிமைத்தனத்தின் ஆணிவேராகும். இதுகுறித்து பெரியார், ‘‘திருமண முறை வந்தது எப் போது? உடைமை எல்லாம் ஆணுக்குத்தான் என்கிற நிலை ஏற்பட்ட பிறகுதான் இத்திருமண முறை வந் திருக்க வேண்டும். ஆணுக்குத்தான் சுதந்தரம்; ஆணுக் குத்தான் சொத்து; ஆணுக்குத்தான் வீடும் வாழ்க்கையும் என்ற சம்பிரதாயம் ஏற்பட்ட பிறகு இதற்கேற்பத்தான் சமுதாயத்தையும் அமைக்க வேண்டியதாயிற்று’’ என்று சென்னை விக்டோரியா மண்டபத்தில் 30.9.1948இல் நடந்த திருமண நிகழ்ச்சியில் பேசியிருக்கிறார் (விடுதலை 11.10.1948). பொதுவுடைமைத் தத்துவ ஆசான்களில் ஒருவரான பிரெடரிக் எங்கெல்சு எழுதிய ‘‘குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்’’ என்ற நூலில் சொத்துரிமை ஆணுக்குத்தான் என்று ஏற்பட்ட பிறகுதான் திருமண முறையும், பெண்ணடிமைத் தனமும் ஏற்பட்டன என்று விரிவாக விளக்கி இருக்கிறார்.

எனவே பெண்கள் கல்வி அறிவு பெற்று, சுதந்தர மாகச் சிந்திக்கத் தொடங்குவதற்கு முன்பே திருமணம் செய்துவிட்டால்தான் ஆணுக்கு அடங்கியவளாக நடப் பார்கள் என்ற எண்ணத்தால்தான் குழந்தைத் திரு மணங்கள் செய்யப்படுகின்றன.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் 1929 செப்டம்பர் 28 அன்று பெண்களுக்கு 14 அகவை நிரம்பிய பிறகு தான் திருமணம் செய்ய வேண்டும் என்கிற சட்டம் இயற்றப்பட்டது. பார்ப்பனர்கள் இதைக் கடுமையாக எதிர்த்தனர். பெரியார், சாரதாச் சட்டம் எனப்படும் இதை வரவேற்றும், எதிர்க்கின்ற பார்ப்பனர்களைக் கண்டித்தும் 23.9.1929 நாளிட்ட ‘குடிஅரசு’ ஏட்டில் தலையங்கம் எழுதினார்.

அதில் பெரியார், ‘‘இது விஷயமாய் இந்தியச் சட்ட சபையில் நடந்த முழு விவரத்தையும் எழுத நமக்குப் போதிய இடமில்லாவிட்டாலும், அம்மசோதாவிற்கு விரோத மாய்ப் பேசிய தமிழ்நாட்டுப் பிரதிநிதியும், இந்துமத வருணாசிரமப் பிரதிநிதியும் ஆகிய எம்.கே.ஆச்சாரியார் அவர்களின் போக்கைச் சற்றுக் கவனிப்போம். திரு. ஆச்சாரியார் அவர்கள் இச்சட்டத்தை எதிர்த்துப் பேசுகை யில், ‘‘பாலிய விவாகமில்லாவிட்டால் உண்மையான கற்பு என்பது சாத்தியமில்லை’’ என்றும் ‘‘பெண்களின்

வாழ்க்கை நாசமாகிவிடும்'' என்றும் ''குடும்ப வாழ்க்கை துக்கமயமாகிச் சதா ஆபத்திற்குள்ளாகி இருக்கும்'' என்றும் ''புருஷர்களுக்குச் சிறைத் தண்டனை அளித்து விடுவதால் பெண்கள் நடத்தையும் அதிகக் கேவலமாக மாறிவிடும்'' என்றும் ''பாலிய விவாகம் இருந்தாலொழிய உண்மையான ஒழுக்கம் ஏற்படுவது அசாத்தியம்'' என்றும் பேசி இருக்கின்றதாகத் தெரிய வருகிறது. இவைகள் 'சுதேசமித்திரன்', 'தமிழ்நாடு' பத்திரிகை களில் காணப்படுவதுடன், 'சுதேசமித்திரன்' நிருபர் திரு. ஆச்சாரியாரை ஆதரித்தும் புகழ்ந்தும் எழுதி யிருக்கிறார்'' என்று எழுதியுள்ளார்.

பெரியார் குறிப்பிட்டுள்ள எம்.கே. ஆச்சாரியாரின் மனநிலையிலிருந்து மாற முடியாதவர்களே இன்னும் குழந்தைத் திருமணங்களை நடத்துகின்றனர். குழந்தைத் திருமணங்கள் இந்தி மொழி பேசுகின்ற - இந்துத்துவத்தைத் தூக்கிப் பிடிக்கின்ற வடஇந்திய மாநிலங்களிலேயே அதிக அளவில் நடக்கின்றன. இதில் இராஜஸ்தான் மாநிலம் முதலிடம் வகிக்கிறது. எனவே இம்மாநிலங்களில் எழுத்தறிவு பெற்ற பெண்களின் விழுக்காடு இந்திய அளவிலான சராசரி யைவிட மிகவும் குறைவாக இருக்கிறது. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் பெண்களில் 100க்கு 40 பேருக்குக் கையெழுத்துக்கூடப் போடத் தெரியாது என்பது, சுதந்தரம் பெற்று எழுபது ஆண்டு களுக்குப் பிறகும் பெண்களை எந்த அளவுக்கு அடிமை யாக வைத்திருக்கிறோம் என்பதை உணர்த்துகிறது.

ஒரு பெண் தான் விரும்புகின்ற உயர்கல்வியைப் பெறவும் தொழில்களைப் பயிலவும், அதன்மூலம் தனக்கான வருவாய் ஈட்டவும், தான் விரும்புகின்ற ஆணை வாழ்க்கைத் துணையாகப் பெறவும் உரிமை பெற்றவராக இருக்கும் போதுதான் உண்மையான பெண்ணுரிமை மலரும். அத்துடன் ஆணுக்கு நிகராகச் சொத்துரிமை பெறும் போதுதான் பெண்ணுரிமை வலிமையுடன் வளரும். இந்த நிலைகளைப் பெண்கள் அடைவதற்குக் குழந்தைத் திருமணம் என்பது பெருந் தடையாக இருக்கிறது. இந்தப் பின்னணியில்தான் உச்சநீதிமன்றம் 15-18 அகவையில் உள்ள மனைவி யுடன் கணவன் உடலுறவு கொள்வது கற்பழிப்புக் குற்ற மாகும் என்கிற அதிரடியான தீர்ப்பை வழங்கியுள்ளது.

சாரதாச் சட்டம் பிரித்தானிய ஆட்சியில் ஏட்டள விலேயே நின்றுவிட்டது. சுதந்தர இந்தியாவில் எழுபது ஆண்டுகளில் குழந்தைத் திருமணம் தொடர்பாக மிகக் குறைந்த அளவிலேயே வழக்குகள் தொடுக்கப்பட்டன. அவற்றில் தண்டனை விதிக்கப்பட்டவையோ மிக மிகக் குறைவு. ஆனால் குழந்தைத் திருமணங்கள் பெரும் எண்ணிக்கையில் நடந்து வருகின்றன.

15-18 வயதில் திருமணமான பெண்கள் தற்போது 230 இலட்சம் பேர் இருப்பதாக நடுவண் அரசு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி 230 இலட்சம் பெண்களின் கணவன்கள் உடனே கைது செய்யப்படப் போவதில்லை. அப்பெண் களும் வழக்குத் தொடுக்கப் போவதில்லை. 18 அகவைக்கு உட்பட்ட பெண்களுக்குத் திருமணம் செய்வதை இனி வரும் காலங்களில் தடுப்பதற்கான எச்சரிக்கையாக வும் பெண்களின் உரிமையை மீட்டெடுப்பதற்குமான ஒரு ஆயுதமாகவும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு விளங்கும்.


## சிந்தனையாளன் 2018 பொங்கல் மலர்

## வெளியீட்டு விழா

நாள் : **07-01-2018, ஞாயிற்றுக்கிழமை**

இடம் : **சந்திரசேகர் திருமண மண்டபம், மாம்பலம், சென்னை.**

காலை 10 மணி முதல் 1.30 வரை :

**பொங்கல் மலர் வெளியீட்டு நிகழ்ச்சி**

மலரை வெளியிட்டுச் சிறப்புரை :

திருமிகு. **அரிபரந்தாமன்**
ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி

பிற்பகல் 2.30 முதல் மாலை 7 மணிவரை

**கூட்டாட்சி மாநாடு**

தொடக்கவுரை :
முனைவர் **மு. நாகநாதன்**

சிறப்புரை :
**திருமுருகன் காந்தி**
மே 17 இயக்கம் ஒருங்கிணைப்பாளர்

நிறைவுரை :
**வே. ஆனைமுத்து**
பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

# மோடி அரசின் மூடத்தனமான திட்டம்! 20 பல்கலைக்கழகங்களை உலகத் தரத்துக்கு உயர்த்தி 5 ஆண்டுகளில் ரூ.10,000 கோடி செலவிடப்படும்!

பீகார் மாநிலம், பாட்னாவில், பாட்னா பல்கலைக் கழக நூற்றாண்டு விழா 14.10.2017 அன்று நடந்தது.

அவ்விழாவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமாரும் பங்கேற்றனர்.

விழாவில் பேசிய பீகார் முதல்வர் நிதிஷ்குமார், “பாட்னா பல்கலைக்கழகத்தை மத்தியப் பல்கலை அந்தஸ்துக்கு உயர்த்துமாறு” பிரதமரைக் கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பிரதமர் மோடி என்ன விடை சொன்னார்?

“பல்கலைக்கழகங்களுக்கு மத்திய அந்தஸ்து அளிக்கும் வழக்கம் ஒழிந்துவிட்டது. நாம் அதைத் தாண்டி மேலும் ஓர் அடியை எடுத்து வைத்துள்ளோம். அதாவது 10 தனியார் பல்கலைக்கழகங்களையும், 10 அரசுப் பல்கலைக்கழகங் களையும் தேர்வு செய்து, அவற்றுக்கு 5 ஆண்டுகளில் ரூபா 10,000 கோடியை வழங்க உள்ளது. **அந்தப் பல்கலைக் கழகங்கள் உலகத் தரம் வாய்ந்தவையாக மாறுவதற்கான திறனை வெளிப்படுத்த வேண்டும். இதற்காக, அந்த 20 பல்கலைக்கழகங்களின் திறனை ஒரு நிபுணரும் மூன்றாம் தரப்பு அமைப்பு ஒன்றுமே தேர்வு செய்ய வழிவகுக்கும். பிரதமரோ, முதல்வரோ, வேறு எந்த அரசியல் தலைவரோ அவற்றைத் தேர்வு செய்யப் போவதில்லை” என்ற மூடத் தனமான திட்டத்தை அறிவித் துள்ளார், பிரதமர் மோடி.**

இது மூடத்தனமான திட்டம் என்பதற்கான காரணங் கள் என்னென்ன?

1. முதலில் இந்தியப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களோ, பேராசிரியர்களோ, கல்வியாளர் களோ அப்படிப்பட்ட 20 பல்கலைக்கழகங்களைத் தேர்வு செய்யத் தகுதியற்றவர்கள் என்று கூறுவது மூடத்தனம்.

யாரோ ஒரு நிபுணரும், மூன்றாம் தரப்பு அமைப்பும் கல்விக்கும், இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் எப்படித் தொடர்புடையவர்கள் என்பதை யார் முடிவு செய்வது?

2. உலகத்தரம் வாய்ந்த 500 பல்கலைக்கழகங்களுக் குச் சமமான தகுதி வாய்ந்ததாக இந்தியாவில் ஒரு பல் கலைக்கழகம்கூட இல்லாதது தனக்குக் கவலை அளிப்ப தாகப் பிரதமர் தம் அன்றைய பேச்சில் குறிப்பிட் டுள்ளார்.

அ) அந்தத் தரத்தை முடிவு செய்தவர்கள் அந்தந்த நாட்டுக் கல்வி நிபுணர்களா? மூன்றாம் தரப்பு அமைப்பும் ஒரு நிபுணரும் எந்தத் துறைகளைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள்? இவற்றைத் தீர்மானிப்பது யார்?

ஆ) **இன்று உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங் களை, தரம் கண்டு தேர்ந்தெடுத்தவர்கள் யார்?**

3. **உலகத்தரத்தை அடைந்த அந்த 500 பல்கலைக் கழகங்கள் எந்தெந்த நாடுகளில் உள்ளன?**

4. **அந்த 500 உலகத்தரம் வாய்ந்த பல்கலைக் கழகங்கள் அமைந்துள்ள நாடுகளில் - தொடக்கப் பள்ளிக்கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி, உயர் அறிவியல் கல்வி, உயர் தொழில்நுட்பக் கல்வி வரையில் எல்லா நிலைக் கல்வியும் அந் தந்த நாட்டினரின் தாய்மொழி வழியில் கற்பிக்கப்படுகிறதா? வேறு எந்த நாட்டு மொழி வழி யிலாவது கற்பிக்கப்படுகிறதா?**

5. **அந்த உலகத்தரம் வாய்ந்த 500 பல்கலைக் கழகங் களில் ஏட்டுக்கல்வி மட்டும்-மனப்பாடம் செய்து எழுதும் கல்வி முறை மட்டும் உள்ளதா? செய்முறைப் பயிற்சி யோடு (Practical) இணைந்த கல்வி முறையும் சேர்ந்து உள்ளதா?**

6. இந்தியாவிலுள்ள ஏறக்குறைய 600 பல்கலைக் கழகங் களில்-எந்தப் பல்கலைக்கழகத்திலாவது அந்தந்த மாநில மக்கள் பேசும் தாய்மொழி வழியில் எல்லா நிலைக் கல்வியும் அளிக்கப்படுகிறதா? ஏன், கடந்த 70 ஆண்டு களாக அப்படித் தாய்மொழி வழியில் கல்வி அளிக்கப்பட வில்லை?

வேறு எந்த சுதந்தர நாட்டில் - தாய்மொழி அல்லாத மாற்றார் மொழி வழியில் கல்வி தரப்படுகிறது?

15.8.1947இல் வெள்ளையன் வெளியேறிய பிறகு, அவன் கொடுத்த கல்வித் திட்டம் நம் இந்திய மாநிலங் களுக்கு-இந்திய மக்களுக்கு எதற்கு? வெள்ளையனு டைய தாய் மொழியான ஆங்கில மொழி வழியில் - எல்லா இந்திய மொழிகளைப் பேசுபவரும் உயர் கல்வி கற்பது ஏன்? இது “சுதந்தரம்” என்பதன் அருமையையும் பெருமையையும் அறியாத-மானங்கெட்டத் தனமல்லவா?

உலகத்தரம் வாய்ந்த அந்த 500 பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள நாடுகளில் - எந்த ஒரு நாட்டிலாவது தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கல்வி வரையில்-தம் தம் தாய்மொழி வழியில் அல்லாமல் பிற மொழியிலோ, ஆங்கில வழியிலோ கற்பிக்கப்படுகிறதா என்ற கேள்விக்கு என்ன விடை?

**2017இல் உயர்நிலைக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி, அறிவியல் கல்வி, தொழில்நுட்பக் கல்வியை-எந்த மொழி பேசும் இந்தியனும் அவனவன் தாய்மொழி வழியில் தரப்படாததால்தான் - உலகத் தரம் வாய்ந்த 500 பல்கலைக் கழகங்களில் ஒன்றுகூட இந்தியாவில் இல்லை. 100க்கு 100 மடங்கும் - இதுவே 2017லும் இவ்விழிநிலை நீடிக்கக் காரணம்.**

**- வே. ஆனைமுத்து**

# சிலருக்கான வளர்ச்சி, வெகுமக்களுக்கோ பெருந்துயரம்

**ஆனந்த் டெல்டும்ப்டெ**

தமிழாக்கம் : **க. முகிலன்**

**உ**த்தரப்பிரதேசத்தில் கோரக்பூரில் உள்ள பாபா இராகவதாசு அரசு மருத்துவமனையில் உயிர்வளி (ஆக்சிஜன்) உருளைகள் போதிய அளவில் இல்லாததால், 71 குழந்தைகள் இறந்து கொண்டிருந்த வேளையில், தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இந்தியாவின் 71ஆவது சுதந்தர நாளைக் கொண்டாடும் வகையில், தில்லி செங்கோட்டையின் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிய பின், தன்னைத்தானே வியந்து பாராட்டிக் கொள்ளும் தன்மையில் உரையாற்றிக் கொண்டிருந்தார். திரைப்பட கதாநாயகன் போல் தனக்கே உரித்தான முறையில் அரை உண்மைகளையும் முழுப் பொய்களையும் 125 கோடி மக்களை நோக்கி தன் உரையில் கட்டவிழ்த்துக் கொண்டிருந்தார்.

வளர்ச்சி குறித்த இத்தகைய ஏமாற்றுப் பேச்சுகளைச் சுதந்தரம் பெற்று 70 ஆண்டுகளுக்குப் பிறகும் வெகுமக்கள் அமைதியாகக் கேட்கும் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். ஆனால், ஆட்சியாளர்கள் கூறும் வளர்ச்சி என்பது, வெகுமக்களுக்குப் பெருந்துயரத்தை உண்டாக்குவதன் மூலமாகப் பெருஞ்செல்வர்களுக்கு நன்மையைத் தருவதாக இருக்கிறது. சுயராச்சியம் (Swaraj) இல்லாத வளர்ச்சி பொருளற்றதாகும். சுயராச்சியம் பெறுவதற்காக எண்ணற்றோர் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராகப் போராடினார்கள்; இதில் பலர் தம் இன்னுயிரை ஈந்தனர்.

**சுயராச்சியம் என்பது சுதந்தரம், சுய-ஆட்சி என்பதாகும். சுய-ஆட்சி என்பது மக்கள் அனைவர்க்கும் கல்வி, நலவாழ்வு, உறுதி செய்யப்பட்ட வாழ்வாதாரம் மற்றும் சனநாயக, பண்பாட்டு உரிமைகள் ஆகியன எளிதில் கிடைக்கும்படிச் செய்வதை உள்ளடக்கியதாகும். ஆனால் வளர்ச்சி என்கிற பெயரால் கடந்த எழுபது ஆண்டுகளாக இவை வெகுமக்களுக்குக் கிடைக்காதவாறு ஆளும் வர்க்கங்கள் தடுத்துவருவது மாபெரும் அநீதியாகும்.**

அதிதீவிர தேசியவாதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்வோர் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்துள்ளனர். இவர்கள், இந்தியத் தேசியம் பல இலட்சம் ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது என்று பீற்றிக்கொள்கின்றனர். இதன்மூலம் இந்தியா என்பது ஒரு நாடாகப் பிரித்தானிய ஆட்சியால் உருவாக்கப்பட்டது என்கிற உண்மையை மறைக்கின்றனர். சுதந்தரப் போராட்டக் காலத்தில்தான் இந்தியா ஒரு தேசம் என்கிற கருத்தியல் உருவானது. இப்போது ஆட்சியில் இருப்பவர்களோ, இவர்களின் முன்னோர்களோ, சுதந்தரப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

தொடக்கக்கால இந்தியத் தேசியம் என்பதுகூட, பிரித்தானிய ஆட்சி இந்தியத் துணைக் கண்டத்தில் நிலைகொள்வதற்காக மேற்கொண்ட அரசியல் மற்றும் நிருவாக ஒருங்கிணைப்பால் உருவானதாகும். இது நவீன போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் வாயிலாக மேலும் வளர்ந்தது. இம்மாற்றங்கள், இந்தியாவில் கிராமப்புற சமுதாய வாழ்வில் நீண்டகாலமாகத் தேக்கமடைந்திருந்த சமூக-பொருளாதார நிலைமைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இது தேசத்தைக் கட்டமைக்கும் நடவடிக்கையை ஊக்குவித்தது. இந்தியாவை உருவாக்குவதில் முன்னோடியாக இருந்த தலைவர்கள், "சுதந்தர இந்தியா சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்பவற்றின் அடித்தளத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால் இவர்கள், இந்து இராச்சியத்தை அமைக்க வேண்டும் என்கிற தங்களின் அரசியல் குறிக்கோளுக்காக, சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்கிற கோட்பாட்டை இடையிலேயே கைவிட்டனர். இது வரலாற்று முரணாகும்.

உண்மையைக் கூறவேண்டுமாயின், இந்திய வரலாறு நெடுகிலும் ஆளும்வர்க்கத்தின் சிறப்பு என்று கூறுவதற்கு ஏதும் இல்லை. ஆளும் வர்க்கத்தினரின் செயல்பாடுகள் எப்போது அளவிறந்த தன்னலமும், வெட்க உணர்ச்சியின்றி தங்கள் சொந்த நலன்களை மட்டும் பேணிடும் போக்கும் கொண்டவையாக இருந்துள்ளன. மக்களை வஞ்சிப்பதே அவர்களின் வர்க்க - சாதி குணமாக இருக்கிறது. அதனால்தான், பிரித்தானிய ஆட்சி அதிகாரம் இந்திய ஆளும் வர்க்கத்தினரின் கைக்கு மாற்றப்படும் நிலையில், ஆளும் வர்க்கத்தின் போக்கு எத்தகையதாக இருக்குமோ என்று பலர் அய்யுற்றனர்.

வின்சன்ட் சர்ச்சில் தீவிரமான காலனிய ஆதிக்க ஆதரவாளர், ஆனால் இந்தியாவில் அவரைப் பற்றிப் பரப்புரை செய்யப்பட்டிருப்பதுபோல் அவர் இந்தியாவை வெறுப்பவர் அல்லர். 1947ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நாடாளுமன்றத்தில் இந்தியாவுக்குச் சுதந்தரம் அளிக்கும் சட்ட வரைவு மீது நடந்த விவாதத்தின் போது வின்சன்ட் சர்ச்சில் கீழ்க்கண்டுள்ளவாறு பேசினார் என்று சொல்லப்படுகிறது.

"இந்தியாவுக்குச் சுதந்தரம் வழங்கப்படும் நிலையில், ஆட்சியதிகாரம் போக்கிரிகள், பொறுக்கிகள் கைக்குச் செல்லும். இந்தியத் தலைவர்கள் அனைவரும் துணிவும் திறமையும் இல்லாதவர்கள். அவர்கள் இனிக்க இனிக்கப்

பேசுவார்கள்; ஆனால் அவர்கள் சிறுமதியினர். அதிகாரத்திற்காகத் தங்களுக்கிடையே சண்டையிட்டுக் கொள்வார்கள்; அந்த அரசியல் கூச்சலில் இந்தியாவே தொலைந்துபோகும். ஒரு காலம் வரும் - அப்போது இந்தியாவில் தண்ணீருக்கும் காற்றுக்கும்கூட விரிவிதிக்கப்படும்.''

சர்ச்சில் இவ்வாறு சொன்னாரா என்பது ஒரு விவாதப் பொருளாக இருந்து வருகிறது. இவ்வாறு சொன்னது எவராக இருப்பினும், இந்தியா சுதந்தரம் பெற்ற பின், கடந்த எழுபது ஆண்டுகளாக நடைபெற்று வருபவை, அக்கூற்றில் சொல்லப்பட்டுள்ளவை உண்மையே என்பதை உணர்த்துகின்றன.

சுதந்தர இந்தியாவை உருவாக்கிய தலைவர்களில் ஒருவராகப் போற்றப்படும் சி. இராசகோபாலாச்சாரி கூறியிருப்பதைப் படியுங்கள் :

''சுயராச்சியத்தால் உடனடியாகவோ அல்லது நீண்ட காலத்திற்குள்ளாகவோ மக்களுக்கு நல்ல ஆட்சியையோ அல்லது பெருமகிழ்ச்சியையோ வழங்கிட முடியாது என்பதை நாம் எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். நமக்குச் சுதந்தரம் வழங்கப்பட்டவுடன், தேர்தல்கள், அவற்றின் ஊழல்கள், அநியாயங்கள், செல்வத்தின் அடிப்படையிலான அதிகாரமும், கொடுமையும், நிருவாகத்தின் திறமையின்மை ஆகியவற்றால் பெருந்துன்பமான வாழ்நிலை மக்களுக்கு ஏற்படும், அந்நிலையில் மக்கள் முன்பு இருந்த பிரித்தானிய ஆட்சியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள்; பழைய ஆட்சியில் இதைவிட நீதியும், அமைதியும், திறமையான - நேர்மையான ஆட்சியும் இருந்ததே என்று மக்கள் வருத்தமுடன் எண்ணிப்பார்ப்பார்கள்... அனைவருக்கும் பொதுக்கல்வி அளிப்பதன் மூலம் எதிர்கால குடிமக்களான மாணவர்களிடம் நன்னடத்தை, கடவுளுக்குப் பயந்து நடத்தல், அன்பு செய்தல் ஆகிய நற்பண்புகளை வளர்க்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதில் நாம் வெற்றியடைந்தால்தான், சுயராச்சியம் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். அவ்வாறு அமையாவிடில் பணம் படைத்தவர்களின் அட்டூழியங்களும் ஒடுக்குமுறைகளும் கொண்டதாகவே சுயராச்சியம் இருக்கும்.''

சுயராச்சியம் என்கிற கருத்தியலின் கர்த்தாவான காந்தியே சுயராச்சியம் என்பது மக்களின் ஆட்சியாக இல்லாமல், சிறுகும்பலின் ஆட்சியாக மாறிவிடுமோ என்கிற அய்யம் கொண்டிருந்தார்.

## மாற்றம் எதுவும் ஏற்படவில்லை

''சுதந்தரம் கெட்ட சகுனத்துடனேயே வந்தது. நாட்டுப் பிரிவினையால் குருதி பெருக்கெடுத்து ஓடியது''. மூலஉத்திகளை வகுப்பதில் வல்லவரான காந்தியாரால் காங்கிரசுக் கட்சி மக்கள் இயக்கமாக உருவெடுத்திருந்த போதிலும், அது முதலாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாகவே இருந்தது. காங்கிரசுக் கட்சி, மக்கள் நலன் சார்ந்த சோசலிச முழக்கங்களை முழங்கிக் கொண்டே, முதலாளிகளின் நலன்களை மேலும் பேணிப் பாதுகாக்கும் வகையில் அரசின் கொள்கைகளை வகுத்ததுடன், அதற்கு இயைந்த வகையில் அரசின் கட்டுமானத்தையும் உருவாக்கியது. இந்தியர்களின் கைக்கு ஆட்சியதிகாரம் மாற்றப்படுவதற்கு முன்பே இந்தச் சூழ்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

1946 மார்ச்சு மாதம் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சட்டமன்ற உறுப்பினர்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு அரசமைப்புச் சட்ட அவை உருவாக்கப்பட்டது. 1946இல் வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தவர்கள் 28 விழுக்காட்டினர் மட்டுமே! ஆயினும் இது மக்களால் பிரதிநிதித்துவப்படும் அரசமைப்புச் சட்ட அவை என்று நேர்மையற்ற முறையில் காட்ட முயன்றனர்.

1935ஆம் ஆண்டைய இந்தியச் சட்டம் (Government of India Act, 1935) அரசமைப்புச் சட்டத்தில் முழுமையாகச் சேர்க்கப்பட்டது. அதன்மூலம் ஏகாதிபத்திய பிரித்தானிய ஆட்சியின் முதன்மையான கூறுகள் தொடருவது உறுதிசெய்யப்பட்டது. முன்பு இருந்த ஆட்சியில் இருந்தது போன்ற அரசின் கட்டமைப்புகள், அதே சட்டங்கள், அதே மாளிகைகள், அதே நடைமுறைகள், அதே காவல்துறை அடக்குமுறைச் சட்டங்கள் சுதந்தர இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்திலும் நீடித்தன. ஒரே ஒரு வேறுபாடுதான்-வெள்ளை இன ஆளும் வர்க்கத்திற்குப் பதிலாக இந்திய ஆளும் வர்க்கம் இப்போது இடம்பெற்றுள்ளது. மேற்கத்திய சுதந்தரக் கோட்பாடுகளைப் பார்ப்பனியம் தனக்கே உரிய நரித்தனத்துடன் மாற்றியமைத்து, பழைய ஒடுக்குமுறையான ஆட்சி முறையே தொடருமாறு செய்தது. அதன்மூலம் தன்னுடைய கரவான ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டது.

1947க்குப்பின் சோவியத் நாட்டில் இருந்தது போன்ற அய்ந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவற்றின் மூலம் சோசலிசக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதாகப் புதிய ஆட்சியாளர்கள் தம்பட்டம் அடித்தனர். ஆனால் இந்த அய்ந்தாண்டுத் திட்டங்களுக்கு அடிப்படையாக விளங்கியது-முதலாளிகளின் விருப்பப்படி உருவாக்கப்பட்ட பம்பாய் திட்டம் என்பதே ஆகும். பம்பாய் திட்டத்தை ஏற்கவில்லை என்று அரசு அறிவித்த போதிலும் கரவான முறையில் அது அரசால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இலட்சக்கணக்கான நிலமற்ற விவசாயிகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக என்று கூறி கொண்டுவரப்பட்ட நிலச்சீர்திருத்தச்சட்டம் பெயரளவில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. நிலச்சீர்திருத்த நடவடிக்கை

சூத்திரர்களில் மேல் படிநிலையில் இருந்த சாதியினர் பணக்கார உழவர்களாக உயர்வதற்கு வழிவகுத்தது. இவர்கள் காங்கிரசை ஆதரிப்பவர்களாக விளங்கினர். மக்களின் பசியைப் போக்குவதற்காக என்று கொண்டு வரப்பட்ட பசுமைப் புரட்சி உண்மையில் வேளாண் மையை முதலாளிய உற்பத்திமயமாக்குவதை நோக்க மாகக் கொண்டதாகும். வேளாண்மை இயந்திரமய மாக்கப்பட்டதால் மேல்சாதி நிலப் பண்ணையார்கள் நகரங்களில் வணிகத்திலும், தொழில்களிலும் ஈடுபட லாயினர். பின்னாளில் இவர்கள் மாநிலக் கட்சிகளின் தலைவர்களாக உருவாயினர்.

சூத்திரர்களில் மேல் படிநிலையில் இருந்த சாதிகளில் இவ்வாறு பணக்காரர்களானவர்கள், முதலாளிய உற் பத்தியில் ஈடுபட்டதன் மூலம், இருபிறப்பாளர்கள் எனப் படும் மேல் மூன்று வருணத்தினர் போல் உயர்ந்த சமூக மதிப்பைப் பெற்றனர். அதேசமயம் தலித்துகள், ‘‘ஜஜ்மானி’’ முறை மூலம் நெடுங்காலமாகப் பெற்றிருந்த குறைந்த அளவிலான நில உரிமையையும் இழந்த னர்; கூலி வேளாண் தொழிலாளர் நிலைக்குத் தள்ளப் பட்டனர். இதனால் சமூகத்தில் முரண்பாடுகள் மேலும் கூர்மையடைந்தன. எனவே புதிய வடிவிலான ஒடுக்கு முறைகள் தலித்துகள் மீது ஏவப்பட்டன. கீழ் வெண் மணி முதல் கயர்லாஞ்சு வரை, கார்தா முதல் உனா வரை சுதந்தர இந்தியாவில் தலித்துகள் மீது நடத்தப் பட்ட தாக்குதல்கள் இந்த வகைமையைச் சேர்ந்தவை.

அரசியலில் அதிகாரப் போட்டியும், மக்களின் வாழ் வாதார நெருக்கடிகளும் அதிகமாக, அதிகமாக அரசு தன் கொடிய நச்சுப் பற்கள் மூலம் மக்களை ஒடுக்கு வதும் அதிகமாகி வருகிறது. மேலும் ‘‘வல்லவை வாழும்’’ என்னும் டார்வினின் கோட்பாட்டை சமுதாய நிலையில் செயல்படுத்துவதற்காக, அரசு புதிய தாராள மயக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகிறது. இவற்றால் மக்கள் மேலும் மேலும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர். புதிய ஆட்சியாளர்கள் குடிஅரசு என்ற முகமூடியை அணிந்து கொண்டு தாம் தண்டிக்கப்படுவோம் என்ற அச்ச உணர்வே இல்லாமல் தொடர்ந்து அட்டூழியங்களைச் செய்து வருகின்றனர். பிரித்தானிய ஆட்சியாளர்கள்கூட இந்த அளவுக்கு அட்டூழியம் செய்யத் துணிந்ததில்லை.

**தேசியவாதிகள், நல்ல காலம் பிறக்கப் போகிறது என்று சொல்லிக் கொண்டிருந்த வேளையில், அதற்கு நேர்எதிரான வகையில் பி.ஆர். அம்பேத்கர் 1949 நவம்பர் 26 அன்று ஓர் எச்சரிக்கை விடுத்தார். அரசமைப்புச் சட்ட அவையின் இறுதிநாளின் விவாதத் தின் போது, அம்பேத்கர், ‘‘அரசமைப்புச் சட்டம் மூலம் அரசியல் சமத்துவத்தை உருவாக்கி உள்ளோம். மிக விரைவில் சமூக நிலையிலும் பொருளாதார நிலை யிலும் சமத்துவத்தை உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அதனால் பாதிக்கப்படும் மக்கள் இந்த அரசியல் சனநாயகக் கட்டமைப்பையே தூக்கி எறிவார்கள்’’ என்று கூறினார்.**

கடந்த 70 ஆண்டுகளில் இந்திய சனநாயகம் அழிந்துவிடவுமில்லை; செழித்தும் வளரவுமில்லை; ஆனால் நொண்டிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு இந்திய சனநாயகம் உயிர் பிழைத்திருப்பது குறித்து நாம் பெருமைப்பட முடியுமா? அம்பேத்கர் விடுத்த எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டால் நாம் பெருமை அடைய ஏதுமில்லை. இந்தியாவில் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் பொருளாதார வளர்ச்சி, மற்ற முன்னேற் றங்கள் குறித்து மேட்டுக்குடியினரும் நடுத்தர வர்க் கத்தினரும் போற்றிப் புகழ்கின்றனர். ஆனால் இவர்கள் சொல்லுகின்ற வளர்ச்சி என்பது கோடிக்கணக்கான மக்களைத் துன்பக் கேணியில் தள்ளியதால் ஏற்பட்டது என்கிற உண்மையைக் காண மறுக்கின்றனர்.

இப்போது ஆட்சியில் இருப்பவர்கள், உலக அளவில் தம்மைத் தலைவராகக் காட்டிக் கொள்வதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக இராணுவ ஏவுகணைகளையும் புல்லட் இரயில்களையும் தயாரிக்கின்றனர். அதே சமயம் மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்விக் கும், மருத்துவத்திற்குமான அரசின் செலவைக் குறைக் கின்றனர். மக்களின் வாழ்க்கைத் தரம் குறித்த உலக நாடுகளின் பட்டியலில் இந்தியா எல்லா அளவீடுகளிலும் அவலமான நிலையில் மிகவும் பின்தங்கியுள்ளது. திறந்தவெளியில் மலம் கழிப்போர், தூய்மையற்ற சுற்றுப்புறம் கொண்ட குடிசைப் பகுதிகளில் வாழ்வோர், ஊட்டச்சத்து குறைபாடு உடைய குழந்தைகள், இரத்தச் சோகை உள்ள தாய்மார்கள், பள்ளிக் கல்வியில் இடைநிற்றல், மாணவர்கள், எழுத்தறிவற்ற மக்கள் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் இந்தியாவில் இருக்கின்றனர் என்கிற உண்மை, இந்தியா எந்த அளவிற்கு மனிதவள மேம்பாட்டில் இழிந்த நிலையில் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

**மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டுப் பட்டியலில் (Human Development Index-HDI) கல்வியில் இந்தியா 92ஆவது இடத்தில் உள்ளது. மற்ற வளரும் நாடுகள் இந்தியாவைவிட முன்னிலையில் உள்ளன.** பிலிப்பைன்சு 76ஆவது இடம், மலேசியா 51ஆவது இடம், சிறி இலங்கா 59ஆவது இடம் பெற்றுள்ளன. 2016ஆம் ஆண்டில் மக்கள் நல வாழ்வில் (Health) 188 நாடு களில், 143ஆவது இடத்தில் இந்தியா இருக்கிறது. மற்ற நாடுகள் பெற்றுள்ள இடங்கள் - சிறிஇலங்கா 79, சீனா 92, போரினால் சிதைந்துள்ள சிரியா 117, ஈராக் 128. உலகில் நான்காவது மிகப்பெரிய பொருளாதார நாடு இந்தியா வாங்கும் சக்தி அளவீட்டில் மூன்றாவது இடத்தில் இந்தியா இருக்கிறது; மிகப்பெரும் கோடீசுவரர்களைப்

பெற்றிருப்பதில் நான்காவது நாடு; வேகமாக வளரும் பொருளாதார நிலையைக் கொண்ட நாடு என்றெல்லாம் இந்தியாவைப் பற்றிப் பெருமித மாகப் பேசப்படுகிறது. ஆனால் மக்களின் நலவாழ்வுக் கான வசதிகளை வழங்குவதில், ஏழை நாடுகளான வங்கதேசம், நேபாளம், கானா, மிகவும் வறிய நாடான லிப்ரியா முதலான நாடுகளைவிட இந்தியா பின்தங்கி யிருக்கிறது.

**இந்தியா ஒரு வல்லரசாகத் திகழ்ந்து கொண்டி ருப்பதாக நரேந்திர மோடி பகல் கனவில் திளைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், பொருளாதாரம், தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள், திறமையான நிருவாகம், கல்வி, மக்கள் நலவாழ்வு, பாதுகாப்பான சூழல், தனிமனிதச் சுதந்தரம், சமூக மூலதனம் ஆகியவற்றில் உலக அளவில் முதல் பத்து இடத் துக்குப் பக்கத்தில் கூட இந்தியா இடம்பெறவில்லை.** 2015ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்டுள்ள துறைகளில் உலக நாடுகளின் நிலைமையை ஆய்வு செய்த ஓர் அமைப்பு (Legatum Prosperity Index) வெளியிட்ட அறிக்கையில் இந்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

(குறிப்பு : ஆனந்த் டெல்டும்ப்டெ "Development of a few, Misery for the Mass" என்ற தலைப்பில் எழுதிய இந்த கட்டுரை 2017 செப்டம்பர் 9 நாளிட்ட எக்கனாமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லீயில் (Economic and Political Weekly) வெளிவந்தது. ஆனந்த்டெல்டும்ப்டே சிறந்த மார்க்சிய - அம்பேத்கரிய அறிஞர். தமிழாக்கம் : க. முகிலன்).

## கொண்டம்மாள் மறைவு



மா.பெ.பொ.க. மற்றும் பெரியார் ஈ.வெ.ரா.-நாகம்மை அறக் கட்டளையின் முன்னாள் அலுவலக நிர்வாகி தோழர் க.நாகராசன் அவர்களின் துணைவியார் தோழியர் சாந்தியின் தாயாரும் முனியசாமி அவர்களின் துணை வியாருமான கொண்டம்மாள் (வயது 72) கடந்த சில மாதங்களாக நுரையீரல் பாதிப்பால் அவதி யுற்று மருத்துவ உதவிப் பலனின்றி 29.10.2017, ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு தன் இன்னுயிர் நீத்தார். 30.10.2017ல் இறுதி நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதி நிகழ்ச்சியில் மா.பெ.பொ.க. துணை பொதுச் செயலாளர் சி.பெரியசாமி சிந்தனையாளன் மேலாளர் ப.வடிவேலு, தாம்பரம் மா.சுப்பிரமணி கலந்து கொண்ட னர். மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து தொலைபேசியில் தோழியர் சாந்திக் கும் தோழர் நாகராசனுக்கும் ஆறுதல் கூறினார்.

## பெரியவர் இ.முனுசாமி படத்திறப்பு



காஞ்சிபுரம் வட்டம் கோளிவாக்கம் பெரியவர் இ. முனுசாமி அவர்கள் 29 9 2017 அன்று தனது 93 ஆம் வயதில் காலமானார். 14 10 2017 ல் படத் திறப்பு நினைவேந்தல் கூட்டம் அவர் இல்லத்தில் நடைபெற்றது காஞ்சி அமுதன் தலைமையேற்க, அவரின் மூத்த மகன் கோ மு சுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றார். திமுக வின் காஞ்சி தெற்கு மாவட்டச் செயலாளரும்,உத்திரமேரூர் சட்ட மன்ற உறுப்பினருமான திரு க.சுந்தர் அவர்கள் படத்தைத் திறந்துவைத்தார். உடன் பி.எம் குமார், க.குமணன்,இராதாகிருஷ்ணன்,சன் தேவராசன், குப்புசாமி உள்ளிட்ட திமுக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் க.கோதண்டன், சி.நடராசன் (மா.பெ.பொ.க) ஜெ.அரிகிருட்டிணன், கோ மணி மேகலை, ஆ.வெங்கடேசன், ஆ.முனிரத்தினம், அமாவாசை, நா.எட்டியப்பன், மகள் மு.தனலட்சுமி மற்றும்

வி.சி.க-வைச் சார்ந்த பாசறை அ.செல்வராஜ், கோ.திருமாதாசன், மதி ஆதவன், வெற்றித்தமிழன், சந்தோஷ், க.இராஜேஷ் ஆகியோர் உரையாற்றினர்

இரங்கற்பா காஞ்சி உலக ஒளி இசைக்க, இளைய மகன் மு. வரதராசன் நன்றி கூறினார். நிகழ்வில் கலந்து கொண்ட தோழர் சி.நடராசன் அவர்களிடம் சிந்தனையாளன் சந்தாவாக ரூபாய் 500 கோ.மு. சுப்பிரமணியன் வழங்கினார்.

# காட்சி விலகும்

ஓபிஎஸ்சும் ஈபிஎஸ்சும் ஒண்ணா சேர்ந்தாங்க – மோடி
உத்தரவுக்குத் தலையாட்டும் மாடாய் ஆனாங்க
ஆபிஸ்பையன் போலஎதக்கும் ஆமாம் போட்டாங்க – கோவணம்
அவிழ்ந்தாலும் அதுக்கும் கூச்சப் படவேமாட்டாங்க

புரட்சித்தலைவி அம்மாகாலம் முடிஞ்சு போச்சுங்க – பன்னீர்
புன்னகைமறந்து கண்ணீர்விட்ட காலம் இல்லீங்க
மிரட்சி, அச்சம் அப்பல்லோவில் அழிஞ்சு போச்சுங்க – ஜெயா
மேடம்மீது இருந்தமதிப்பு கிழிஞ்சு போச்சுங்க

எலிகாப்டர் வானில் உயர்ந்து பறந்து போனாக்கா – தம்
எட்டுச்சாணு உடம்பைச் சுருக்கி அடிமை ஆகுங்க
தலைகனத்த அம்மா காரில் ஏறி போனாக்கா – இதுங்க
தரையில் உருண்டு தொண்டனிட்டு கல்லாய் நிக்குங்க

அதுவும் ஒரு காலமுங்க எல்லாம் அம்மாங்க – தாங்கள்
அச்சடிச்ச காசைப் பங்குவைக்க வரிசை வைப்பாங்க
இதுவும் ஒரு காலமுங்க எல்லாம் மாற்றமுங்க – புது
எசமானர்கள் இங்கு வந்து ஆட்டம் போட்டாங்க

ராஜேந்திர பாலாஜிஒரு ராப்பிச்சை அடிமை – அந்த
ராணிக்கு மிஞ்சி ராஜாவுக்கே நல்லா வாலாட்டும்
கூஜாத் தூக்கி பழக்கப்பட்ட கொத்தடிமைக் கூட்டம் – மோடி
கோவணத்தைத் துவைச்சுப் போட பலே கொண்டாட்டம்

நெடுவாசல் கதிராமங்கலம் நீட் தேர்வென்று – இங்கு
நித்தம்நித்தம் அலைஅலையாய் மக்கள் போராட்டம்
கொடுமை அய்யா அனிதாவைக் கொன்று போட்டாரே – தில்லி
கும்பலோடெம் குலக்கொழுந்தைச் சாகடித்தாரே

டாஸ்மாக்கு தமிழகத்தை நாறடிக்குது–டெங்கு
தமிழ்நாட்டின் தலையெழுத்தை மாத்தி எழுதுது
ஓசையின்றிப் பெருகுதிங்கே கந்து வட்டிக்கொடுமை – அய்யகோ
ஒரேகுடும்பத்தில் நாலு பேரு ரெண்டுஅதில் மழலை

எத்தனை நாள் கூத்துஇது இன்னும் கொஞ்சநாள்தான் – அந்த
எடப்பாடி பன்னீரெல்லாம் மோடியோட ஆள்தான்
மொத்தமாக வீழும்இந்த முட்டாள்களின் ஆட்சி – அப்போ
முக்காடும் விலகும் தெரியும் மோடியோட காட்சி

**- தமிழேந்தி**

# மக்கள் பாதையின் மக்கள் மருந்தகம்

- இராமியா

"திரு. சகாயம் அவர்களின் வழிகாட்டுதலின் படி இயங்கும் "மக்கள் பாதை" நண்பர்கள் இணைந்து தமிழக மக்களுக்கு உன்னத நேக்கத்துடன் தரமான மருந்துகள் மிகக் குறைந்த விலையில் மத்திய அரசு அனுமதியுடன் சிவகங்கையில் முதல் JAN AUSHADHI MEDICAL STORE (மக்கள் மருந்தகம்) Generic Medical Shop துவங்கி உள்ளோம், இதைத் தமிழக மக்கள் பயன்படுத்திக் கெள்ளுங்கள். நீங்கள் மருத்துவரின் ஆலோசனை யுடன் தங்களின் மருந்துப் பெயருடன் வாட்ஸ்அப் (9788052839) அல்லது svgjanaushadhi@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும். தங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கிறோம். அனைத்து வகையான ஆங்கில மருந்துகளும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்." என்று தொடங்கி ஒரு நீண்ட செய்தி புலனத்திலும் (whatsapp) முகநூலிலும் (facebook) பலருக்கு அனுப்பப் பட்டு உள்ளது; அனுப்பப்பட்டுக் கெண்டும் இருக்கிறது. இச்செய்தியில், மருத்துவர்கள் எழுதிக் கெடுக்கும் மருந்துச் சீட்டில் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் சூட்டி உள்ள பெயரை எழுதுவதாகவும், அப்படி இல்லாமல் மருந்துகளின் பெயரை எழுதிக் கொடுக்கும் படி கேட்டுக் கெள்ள வேண்டும் என்றும் குறிப்பு உள்ளது. மேலும் உச்ச நீதிமன்றம் இதில் மிகுந்த அக்கறை கெண்டு உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது. மக்களுக்கு மலிவு விலையில் மருந்துகள் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்படும் "மக்கள் பாதை" நண்பர்கள் குழுவினர் அவர்களுடைய உயர்ந்த எண்ணத் திற்காகப் பாராட்டப்பட வேண்டியவர்கள். அதே சமயம் அவர்கள் கள்ளம் கபடம் சிறிதளவும் இல்லாமல், சூழ்ச்சியே உருவான உலக மகா அயேக்கியர்களுக்கு எதிராகப் பேராட முனைந்து இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட வேண்டி உள்ளது.

முதலில் இவர்கள் தமிழ் நாட்டில் ஒரு மருந்துக் கடையைத் திறந்து இருக்கிறார்கள். இதனால் இலாப வேட்டைக்காரர்களான முதலாளிகளுக்குப் பொருட் படுத்தும் அளவிற்கான பாதிப்பு ஏற்படாது. முதலாளிகள் பொருட்படுத்த வேண்டிய அளவு பாதிப்பு ஏற்படும் வகையில் இக்கடைகளின் எண்ணிக்கை அதிகரித்தால், அதை அவர்களால் எளிதில் தடுத்து நிறுத்த முடியும். இக்கடைகளுக்கு மருந்துகள் அளிக்கும் (சப்ளை செய்யும்) மருந்து நிறுவனங்கள் முதலாளியக் குழுமங்களின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன. அவற்றால் இக்கடைகளுக்கு வேண்டிய மருந்துகள் கிடைக்காதபடி செய்ய முடியும்; இத்திட்டம் முழு வளர்ச்சி அடையும் முன்பே-முழு வளர்ச்சி என்ன, குறைந்தபட்சத் தேவையில் ஆயிரத்தில் ஒரு பங்கு வளர்ச்சி அடைவதற்கு முன்பே-உருத்தெரியாமல் அழிக்க முடியும். அடுத்து, மருத்துவர்கள் மருந்து நிறுவனங்கள் சூட்டி உள்ள பெயரை எழுதாமல் மருந்து களின் மருத்துவப் பெயர்களையே எழுத வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை அனைத்து மருத்து வர்களும் ஏற்றுக் கொள்வார்களா? மருத்துவமனைகள் கட்டிக் கொள்ளாமலும், மருந்துக் கடைகளை வைத்துக் கொள்ளாமலும், சிறு அறைகளில் (Consulting room) மருத்துவ ஆலேசனையை மட்டும் அளிக்கும் மருத்துவர்கள் மட்டும் இதை ஒப்புக் கொள்ள முடியும். அவர்களிலும் மருந்து நிறுவனங்கள் தங்கள் வியாபாரத்தைப் பெருக்க அளிக்கும் "ஊக்கத் தொகையில்" ஆசை கெண்ட மருத்துவர்களை விலக்கி விட்டுப் பார்த்தால், மீதி உள்ள வர்கள் மிகக் குறைவாகவே இருப்பார்கள். இவ்வெண் ணிக்கை பொருட்படுத்தும் அளவில் இருக்க வாய்ப்பு இல்லை.


அதாவது மருந்து உற்பத்தி நிறுவனங்கள் சூட்டும் பெயரை எழுதாமல் மருந்தின் பெயரையே மருத்துவர்கள் எழுதித் தர வேண்டும் என்பது நடைமுறையில் வெற்றி பெற வாய்ப்பு இல்லை. அடுத்து, இத்திட்டத்தற்கு மத்திய அரசு அனுமதி அளித்து இருப்பதாகவும், உச்சநீதி மன்றம் மக்கள் மருந்தகங்களை வளர்த்து எடுப்பதில் ஆர்வத்துடன் இருப்பதாகவும், மக்கள் பாதை நண் பர்கள் ஆர்வத்துடன் குறிப்பிட்டு உள்ளனர்.

ஆகவே மக்கள் அனைவரும் மக்கள் மருந்தகங் களைப் பயன்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டும் உள்ளனர். அவ்வாறு செய்தால் மருந்து வணிகத்தில் முதலாளிகள் அடிக்கும் கொள்ளையைத் தடுத்து நிறுத்தி விட முடியும் என்று நம்பிக்கையையும் அவர்கள் தெரிவித்து உள்ளனர். மக்கள் பாதை நண்பர் களின் நம்பிக்கைக்கு வாழ்த்தும், மரியாதையும்

அளிக்கும் அதே சமயத்தில், அதன் நடைமுறை வாய்ப்பைப் பற்றிய ஐயத்தையும் வெளிப்படுத்த வேண்டி உள்ளது. மக்கள் பாதை நண்பர்கள் நினைப்பது / விரும்புவது போல மக்கள் மருந்தகங்களை மிகப் பெரும்பான்மை யான மக்கள் பயன்படுத்தத் தொடங்கினால், மருந்து உற்பத்தித் தொழிலில் ஈடுபடுத்தப்படும் மூலதனத்திற்குக் கிடைக்கும் இலாபம் குறைந்து விடும். அப்படி இலாபம் குறைந்தால், இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு உள்ள மூலதனம், இதை விட அதிக இலாபம் தரும் தொழில் களை நோக்கி நகர்ந்து விடும். ஆகவே மக்களுக்குத் தேவையான மருந்துகள் உற்பத்தி ஆவதில் தடை ஏற் படும். அதாவது மக்கள் பாதை நண்பர்கள் நினைப்பது/ விரும்புவது போல முடிவு இராது. இன்றைய பெருளா தாரச் சூழ்நிலை மேலே கூறியது போல் அதிக இலாபம் தரும் தொழில்களை நோபக்கி மூலதனம் நகர்வதற்கு வசதியாக இல்லை. அதாவது ஒரு தொழிலில் இலாபம் குறைகிறது என்றால் அதைவிட அதிக இலாபம் தரும் வேறு தொழில் இருப்பது இல்லை. இத்தொழிலில் உள்ள பிரச்சினை எல்லாத் தொழில்களிலும் இருக்கிறது. ஆகவே முதலாளிகள் தங்கள் தொழில்களிலேயே இலாபம் குறையாமல் பார்த்துக் கொள்ள முனைகிறார் கள். அதனால்தான் உழைக்கும் மக்கள் மீதான அடக்குமுறைகளும், வன்முறைகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. முதலாளித்துவப் பாதையில் இவ்வாறு அடக்கு முறைகள் அதிகரிக்குமே ஒழிய, மக்கள் பாதை நண்பர்கள் நினைப்பது / விரும்புவது போல முதலாளிகள் தங்கள் இலாபத்தைக் குறைத்துக் கொள்ள முன்வரவே மாட்டார்கள்.

அப்படியானால் மக்கள் மருந்தகங்கள் வெற்றி பெற வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்? மூலதனத்தின் ஆட்சி இருக்கும் வரையில் மக்கள் மருந்தகங்கள் மட்டும் அல்ல; மக்கள் நலன்களுக் கான எந்தத் திட்டமும் வெற்றி பெறாது. மூலதனத்தின் ஆட்சியின் கீழ் சீர்திருத்தங்கள் செய்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்று நம்பும் மக்கள் பாதை நண்பர் களும், அவர்களைப் போன்ற பிறரும் இதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் அந்தப் பிரச்சினை இந்தப் பிரச்சினை என்று தனித் தனியாகக் கையில் எடுத்துக் கொண்டு போராடுவதை விட்டு விட்டு, அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூல காரணமான மூலதன ஆட்சியை எதிர்த்து, அதாவது முதலாளித்துவப் பொரு ளாதார முறையை எதிர்த்துப் போராடுவது தான் மக்களின் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வாகும்.

## நூல் மதிப்புரை




### 25 ஆண்டுகளில் த.ஒ.வி.இ.

தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் (த.ஒ.வி.இ.) 1992இல் தொடங்கப்பட்டது. அமைப்பு தொடங்கி இருபத்து அய்ந்து ஆண்டுகள் நிறை வடைந்ததையொட்டி 25 ஆண்டு களில் த.ஒ.வி.இ. செயல்பாடு களை காலவரிசைப்படி தொகுத்து அளித்திருக்கிறார்கள். த.ஒ.வி.இ. கொள்கைகளை தாங்கி வந்த ‘‘உழைக்கும் மக்கள் தமிழகம்’’ இதழ்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகள், பேட்டிகள் ஆகியவற்றையும் தொகுத்து வழங்கியுள்ளனர். த.ஒ.வி.இ.யின் கடந்த காலச் செயல்பாடுகளை இந்த ஆவணத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். தமிழக விடுதலையில் ஆர்வம் உள்ள அனைவரும் படிக்க வேண்டிய கொள்கை ஆவணம் இது.

பக்கங்கள் **272** ★ விலை ரூ.**200/-**

கிடைக்குமிடம் : தோழர் **நிலவழகன்**
பொதுச் செயலாளர் த.ஒ.வி.இ.
180, சமத்துவ நகர், கருமண்டபம், திருச்சி-620 001.
கைப்பேசி : 9942546468

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## திருக்குறள்
### மக்கள் இயக்கமாக ஏன் மாற வேண்டும்?




திருக்குறளைப் பரப்பும் நோக்கோடு செயல்பட்டுவரும் செயங்கொண்ட சோழபுரம் பன் னீர்செல்வம் அவர்கள், திருக் குறளை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்குப் பல்வேறு முயற்சி களை எடுத்து வருகிறார். செல்லு மிடமெல்லாம் திருக்குறளின் தேவையை எடுத்துச் சொல்வதே தலையாயப் பணியாகக் கொண்டு செயல் பட்டு வருகிறார். திருக்குறளின் சிறப்புகளையும் அதை வாழ்வியல் நூலாகக் கொள்ள வேண்டியதன் அவசியத் தையும் இந்நூலில் சிறப்பாக விளக்கியுள்ளார்.

பக்கங்கள் **86** ★ விலை ரூ.**90/-**

கிடைக்குமிடம் : **திருவள்ளுவர் ஞானமன்றம்**
செல்வபுரம், செந்துறை சாலை,
செயங்கொண்ட சோழபுரம், அரியலூர் மாவட்டம்.
கைப்பேசி : 9976843131

**- வாலாசா வல்லவன்**

கட்டுரைத் தொடர்-54

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

1938இல் நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக, தமிழக அரசியல் தளத்தில் மாபெரும் திருப்புமுனை ஏற்பட்டது. இனி இந்தியாவுடன் தொடர்ந்து இருக்கக்கூடாது என்பதே அது. அதை வலியுறுத்தி ''தமிழ்நாடு தமிழருக்கே'' என்று விடுதலை ஏட்டில் அய்ந்து தொடர் கட்டுரைகள் எழுதப்பட்டன.

**தமிழ்நாடு தமிழருக்கே! - V**

'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் தலைப்பில் இதற்கு முன் 4 தலையங்கம் எழுதியிருக்கிறோம். இது 5வது தலையங்கமாகும். இதில் 'ஆரியர் சமயம்' என்பது பற்றி எழுதுவதாக முன் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தபடி அதைப்பற்றிச் சிறிது எழுதுவோம்.

ஏன் எனில் ஆரியர்கள் இன்று 'இந்திய' நாட்டை எடுத்துக் கொண்டாலும் அல்லது திராவிட நாட்டை எடுத்துக் கொண்டாலும் 100க்கு மூன்று பேர்களாக ஜனத்தொகையில் இருக்கும் ஒரு வெகு சிறுபான்மைக் கூட்டத்தாராகிய அவர்கள் (ஆரியர்) எப்படி மற்ற உண்மையான 100க்கு 97 பேரான பெரும்பான்மை சமூகத்தாரையும் பெரும்பழம் வீரம் பொருந்திய அவர்களது நாட்டையும் சிறுபான்மையாக்கி அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று யோசித்துப் பார்த்தால், ஆரியர்களது சமயமும் சமயத்தின் மூலம் ஒற்றுமையும் தான் அவர்களுக்கு அதற்கு வேண்டிய சௌகரியத்தைக் கொடுக்க ஆதாரமாய் இருந்து வந்திருக்கிறது என்பதுடன் இன்றும் இருந்து வருகிறது. ஆதலால் அதை விளக்க ஆசைப்படுகிறோம்.

**ஆரியருடைய சமயம் என்ன?**

ஆரியருக்கு சமயம் என்பதாக ஒரு குறிப்பிட்ட கொள்கை கொண்ட சாதனம் ஒன்றுமில்லை யென்பது யாவரும் அறிந்ததேயாகும் என்பது புறமிருக்க, ''ஆரிய சமயம் இந்துமதம்'' என்று சொல்லப்படுமானாலும், இந்து மதம் என்பதற்கும் ஒரு குறிப்பிட்ட கிளிப்த்தமான கொள்கையோ ஆதாரமோ கிடையாது என்பதும் ஆராய்ச்சியாளர் கண்ட முடிவாகும். ஆரியத் தந்திரசாலிகளும் ஆரியரல்லாதார் மீது துவேஷம் கொண்டவர்களும் அநாரியர்களை இழிவுபடுத்தியும், அடக்கியும் ஏமாற்றியும் கீழ்மைப்படுத்துவதற்கு ஆதாரமாக அவ்வப்போது சொல்லி வந்ததையும், எழுதி வந்ததையும், தொகுத்து கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடி திருத்தியும், சில விஷயங்களை எடுத்தும், சில விசயங்களைப் புகுத்தியும் அமைத்துக் கொண்டிருக்கும்



ஆதாரங்கள் தான் இன்று ஆரியர்களின் சமய ஆதாரங்களாய் இருக்கின்றன. அவை பெரிதும் வேதம், சாஸ்திரம், சுருதி, ஸ்மிருதி, புராணம் இதிகாசம் முதலிய பெயர்களோடு இருந்தாலும், அவைகளில் பல ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலும், ஒன்றுக்கொன்று முரண்பட்டதாயும் ஆபாசங்களும் அசம்பாவிதங்களும் அசாத்தியங்களும் நிறைந்ததாயும், புத்திக்கும் ஆராய்ச்சிக்கும் பகுத்தறிவுக்கும் பொருந்தாததாயுமே பெரிதும் இருந்து வருவதைக் காணலாம்.

இந்தக் காரணத்தாலேயேதான் ஆரியர்கள் தவிர மற்றவர்கள் அவைகளைப் படிக்கக்கூடாது என்றும், படித்தால் கொடிய தண்டனைகள் விதிக்க வேண்டும் என்றும், அவ்வாதாரங்களை எவனாவது படித்துவிட்டோ, கேட்டுவிட்டோ விவகாரம் தர்க்கம் செய்வானானாலும், நம்பாவிட்டாலும் அவனை 'நாஸ்திகன்' என்று சொல்லி அரசன் தண்டித்து சமுதாயத்தை விட்டும், நாட்டை விட்டும் விரட்டி அடிக்கவேண்டும் என்றும் எழுதி வைத்துக்கொண்டார்கள். இப்படிப்பட்ட நிபந்தனைகளும், தண்டனைகளும் அதை நிறைவேற்றத்தக்க அரசர்களும் வெகு காலம்வரை இருந்து வந்ததாலேயே அப்படிப்பட்ட ஆபாச அக்கிரம அதி விவேகமான அவர்களது சமய ஆதாரங்கள் திராவிட மக்களுக்குள் பரப்பப்படவும், அதனால் ஆரியர்களுக்கு மேன்மையும், செல்வாக்கும் பெருகி நிலைத்து வரவும் இடமேற்பட்டதுடன், ஆரியரல்லாத மக்கள் எவ்வளவு பண்டிதர்களானாலும் அந்த ஆரியர் சமய ஆதாரங்களைப் பிரசாரம் செய்வதனால் மாத்திரமே வாழ முடியும் படியாகவும் இருந்து வந்திருக்கிறது.

**ஆரிய சமய ஆதாரம்**

உண்மையில் ஆரியர்களின் சமய ஆதாரங்களில் பெரும்பாலும் எதைப்பார்த்தாலும் ஒரு மனிதனால் சொல்லப்பட்டதாகவோ, உற்பத்தி செய்யப்பட்டதாகவோ காண்பது முடியாததாயிருந்தும், ஒவ்வொரு ஆதாரத்துக்கும் அதன் கர்த்தா தெய்வத் தன்மை பொருந்தியவனாகவும், அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமில்லாத அற்புத சக்தி பெற்றவனாகவும் கற்பிக்கப்பட்டு இருப்பான்.

ஏனெனில் அப்படிக் கற்பிக்கப்பட்டதால்தான் அந்த ஆபாசப் புளுகுக் களஞ்சியங்கள் நிலை நிற்க முடியும். அப்படிக்கில்லாமல் சாதாரண மனிதனால் செய்யப்பட்ட தென்றால் "அது அவனுக்கு எப்படித் தெரியும், அது எப்படி முடியும்?" "அத்தனை நாட்களாய் அவன் எப்படி இருந்திருக்க முடியும்?" என்பன போன்ற கேள்விகள் பிறக்குமே என்கின்ற எண்ணத்தினால், "எழுதியவனும் சொன்னவனும் தெய்வத்தன்மை பொருந்தியவனானதால் அவனால் எழுதமுடிந்தது. ஆதலால் அதைப்பற்றி யாரும் தர்க்கிக்கப்படாது" என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளச் சொல்லலாம். அதிலும் திருப்திப்படுவதற்கு முடியாத கஷ்டம் ஏற்படு கிற விஷயங்களாய் இருந்தால் "கடவுளே சொன்னார், அசரீரியாய்ப் பேசினார்" என்று தப்பித்துக் கொள்ள வசதியாயிருக்கும். ஆதலால்தான் ஆரிய சமய ஆதாரங் கள் முழுவதும் மனித சக்திக்கு மேம்பட்டவர்களால் சொல்லப்பட்டதாகவே அவற்றில் சொல்லப்பட்டு இருக்கும்.

**புத்த மதமோ, கிறிஸ்துவ மதமோ, இஸ்லாம் மதமோ சம்பந்தப்பட்ட ஆதாரங்கள் அந்தப்படி இருக் காது என்பதோடு, கூடுமானவரை மானுஷீகத்திற்கு உட்பட்டதாகவே இருக்கும். ஒன்று இரண்டு விஷயங் களுக்கு தெய்வீகம் கற்பிக்கப்பட்டிருந்தாலும் அவை விவரிக்கக்கூடாது என்கின்ற நிர்ப்பந்தமிருக்காது.**

குறிப்பாக இஸ்லாத்தில் முகமது நபி அவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர் சொன்னவற்றிலோ, அவரது செய்கையிலோ மனிதத் தன்மைக்கு மீறிய காரியம் ஒன்றும் இருந்ததாகக் காணமுடியாது. குரான் வாக்கை கடவுள் உத்திரவால் தான் வெளியிடுவதாகச் சொல்லி இருக்கிறார். அது ஒரு சாதாரண விசயம். ஏனெனில், ஒரு மனிதன்தான் செய்கிற, பேசுகிற, நினைக்கிற காரியம் எல்லாம் கடவுள் செயலால்தான் என்று கருதுவது ஆஸ்திகர்களுக்கு சர்வ சாதாரண மான காரியமேயாகும். **ஆதலால் நபி பெருமான் தான் சொல்லும் விஷயங்களைக் கடவுள் அருளால் சொல்லுகிறேன் என்று சொன்னதில் அற்புதம் ஒன்றும் இருப்பதாக நாம் நினைக்கவில்லை. மற்றபடியும் அவர் எப்போதும் தன்னை மனுஷத்தன்மைக்கு மேம்பட்டவர் என்று சொல்லிக் கொண்டதாகவும் தெரியவில்லை. ஆரிய சமய ஆதாரம் பூராவுமே மனுஷத்தன்மைக்கு மேம்பட்டதாகவே காணப்படும்.**

**புராண இதிகாசங்கள்**

இவை தவிர ஆரியர்களுக்கு அவர்களது வாழ்வுக்கு வேத சாஸ்திர, ஸ்மிருதி சமய ஆதாரமென்று சொல்லிக் கொண்டாலும் அவர்களது புராணங்கள் இதிகாசங்கள் ஆகியவைகளும் இருந்து வருகின்றன. இப்புராணங் களைத் தான் தங்களது சமய ஆதாரங்களாகக் கருதி ஆரியர்கள் நடந்து வருகிறார்கள்.

**ஆரியப் புராண இதிகாசங்கள் ஒரு பெரும் சமூகத் தாரை சிறு சமூகத்தார் எப்படி ஏமாற்றிப் பிரித்து, சிறுபான்மையோராக்கித் தாங்கள் ஆதிக்கம் செலுத்துவது என்பதற்கு ஏற்ற வழிகளேயாகும். அதைப் பின்பற்றி நடந்தே தான் இன்று ஆரியர்கள் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.**

எப்படி எனில் அப்புராண இதிகாசங்களில் ஒழுக்கம் இருக்காது. மானாபிமானம் இருக்காது. நாணயம் இருக்காது. எவ்வளவு இழிவான காரியத்தையும் செய்து காரியத்தை சாதித்துக் கொள்ளும் மார்க்கங்கள் இருக் கும், "பத்தியமே" கிடையாது. ஆனால் அவைகள் மகா நீதியாகவும் நேர்மையாகவும் உத்தமோத்தம ஒழுக்கமாகவும் பாசாங்கு செய்துகொள்ளும்.

உதாரணமாக ஆரியர்களின் காப்புக் கடவுளான அல்லது தலைவரான இந்திரனை எடுத்துக் கொள்வோம். அவனிடத்தில் எங்காவது, எப்பொழுதாவது, ஏதாவது ஒரு ஒழுக்கமோ, நாணயமோ இருந்ததாகச் சொல்ல முடியுமா? மற்றும் அந்தப் பதவிக்கு வர முயற்சித்தவர் களை எவ்வளவு அக்கிரமமான இழிவான காரியங்கள் செய்து தோற்கடிக்கப்பட்டு இருக்கிறது! வெளிப்படை யாய்ச் சொல்லவேண்டுமானால் பெண்டுகளைவிட்டுக் காமமூட்டி ஏமாற்றச் செய்யப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி எல்லாம் எந்த ஆரியராவது வெட்கப்படுகிறார் களா? அதற்குப் பதிலாகப் பண்டிகை அல்லவா கொண்டாடுகிறார்கள்.

ஆகவே, ஆரியர்கள் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ள இப்பேர்ப்பட்ட மற்றும் எப்படிப் பட்டவுமான காரியங்களைக் கையாடலாம் என்பதற்கு அவர்களது கடவுள்களும், அக்கடவுள்களின் கீழ்ப்பட்ட கீழ்த்தர வேலை உத்தியோகம் 49995-ல் ஆரியர் களுக்கு 1513 போக, பாக்கி, 48482 அடிமை சேவக உத்தியோகங்களுக்கு திராவிடர்கள் ஆளாக இருக்கவும், மேல்தர உத்தியோகம் அதாவது மாதம் 1000, 5000 சம்பளம் பெறும் அதிகார நிர்வாக உத்தியோகம் 1000-ல் 600 உத்தியோகம் ஆரியருக்குக் கிடைத்திருக்கவும் முடியுமா? இவ்வுத்தியோகங்களைக் கொண்டு ஆரியர் வகுப்புக்கு ஆதரவு காட்டி ஆரியர்கள் அத்தனை பேரும் கீழ் நிலையிலும் ஆரியருக்கு அடிமையாகவும் இருந்திருக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கும் படி வேண்டிக் கொண்டு முடிக்கிறோம்.

**விடுதலை : 25-11-1939**

**(தொடரும்)**

# பெரம்பலூர், பெரியார் அன்பர் இளைய பெருமாள் செயபால் அவர்களுடன் நேர்காணல்

**இடம் : பெரம்பலூர், நாள் : 17.09.2017 ★ நேர்காணல் : பூலாம்பாடி கு. வரதராசன்**



கு. வரதராசன் : அய்யா வணக்கம்!

இளைய பெருமாள் செயபால் : வணக்கம், வாங்க!

கு.வ. : அய்யா, தங்கள் வயது என்ன?

இ.பெ.செ. : என் வயது 96. என் பிறந்த தேதி 17.10.1921. என் பெற்றோர் இராமசாமி - காளியம்மை இணையர். ஆதித்திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

கு.வ. : தங்கள் பணியைப் பற்றிக் கூறுங்கள்.

இ.பெ.செ. : நான் பி.ஏ., பி.டி., ஆசிரியர்; என் துணைவியார் திருமதி. சுகிர்தமணியும் ஆசிரியை. எங்களுக்கு 3 மைந்தர்கள். முதலாமவர் அறிவுடைநம்பி, எம்.ஏ., எம்.ஃபில்., சமூக வளர்ச்சி அலுவலர்; இரண்டாவமர் வள்ளுவன் நம்பி, பி.எஸ்ஸி., பி.எல்., வழக்குரைஞர்; மூன்றாமவர் அருள்நம்பி, பி.எஸ்ஸி. வேளாண்மை, கரும்பு ஆய்வாளர்.

கு.வ. : தங்களுக்கு எந்த ஆண்டிலிருந்து தந்தை பெரியார் தொடர்பு?

இ.பெ.செ. : சுமார் 70 ஆண்டுகளாக என் மாணவப் பருவத்திலிருந்தே சுயமரியாதை இயக்க ஈடுபாடு. அக்காலத்தில் பெரம்பலூரில் உயர்நிலைப்பள்ளி இல்லை. பூவாளூர் சாமிக்கண்ணு ஆசிரியர் வீட்டில் தங்கி இலால்குடி உயர்நிலைப்பள்ளியில் பயின்றேன்.

பூவாளூர் சாமிக்கண்ணு ஆசிரியர் பெரியார் தொண்டு பற்றிக் கூறினார். ஒரு நாள் மாலை பூவாளூர் அ. பொன்னம்பலனார் தலைமையில் அக்கிரகார மைதானத்தில் தந்தை பெரியார் கூட்டம் நடைபெறும் என்ற விளம்பரம் கண்டு, கூட்டத்துக்குச் சென்று பெரியார் சொற்பொழிவைக் கேட்டேன். பெரியார் பேச்சு என்னைக் கவர்ந்தது. அன்று முதல் நான் பெரியார் பற்றாளன் ஆனேன். பூவாளூர் பெரியார் பற்றாளர்கள் பலர் என் நண்பராயினர். ‘‘குடிஅரசு’’, ‘‘பகுத்தறிவு’’ படிக்க ஆரம்பித்தேன். அப்பொழுதுதான் ‘‘விடுதலை’’ நாளிதழ் உதயமாயிற்று.

கு.வ. : தங்கள் பள்ளித் தோழர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யார்?

இ.பெ.செ. : இலால்குடி பள்ளியில் என் வகுப்புத் தோழர்கள் கனகசபை, சேவியர், அன்பில் பெ. தர்மலிங்கம் ஆவர். பூவாளூரில் பெரியார் படிப்பகம் ஒன்றை, பூவாளூர் நண்பர்களுடன் நிறுவினோம். இதனைப் பெரியாரைக் கொண்டே திறப்பு விழா நடத்தினோம். பெரியாரும் மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டு எங்களைப் பாராட்டினார்; நன்கு படித்து நல்ல பொறியாளராகவும், மருத்துவர்களாகவும் ஆக வேண்டும். சமூகச் சீரழிவு நீங்கி, சமத்துவம் உண்டாகப் பாடுபடுங்கள் என வாழ்த்தினார்.

கு.வ. : தங்கள் ஆசிரியப் பணியாற்றிய அனுபவங்களைக் கூறுங்கள்.

இ.பெ.செ. : பொன்பரப்பியில் 6 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினேன். அப்பொழுதுதான் என் திருமணம் நடைபெற்றது. அங்கிருந்து அரும்பாவூர் உயர்நிலைப் பள்ளிக்கு மாறுதல் பெற்றேன். அங்கு சிறுகனூர் ரெங்கசாமி ஆசிரியர் பணியாற்றினார். இவர் பெரியார் பற்றாளர். இங்குப் பணியாற்றிய போது அரும்பாவூர், அ. மேட்டூர் தோழர்கள் மே.இரா. சின்னசாமி, இவரது இளவல் மே.இரா. வெங்கடாசலம், கி.அரி இராமசாமி, முத்துசாமி, கிருஷ்ணசாமி, ந.உலகநாதன் இவர்கள் ஆதரவுடன், அரும்பாவூர் மேட்டூருக்கு தந்தை பெரியாரை அழைத்துப் பெரிய மாநாடு நடத்தினோம். திருச்சி வே.ஆனைமுத்து, அந்தூர் கி.இராமசாமி, கூடலூர் தி.க. சுப்பையா ஆகியோர் இம்மாநாட்டிற்குப் பெரும் பங்காற்றினார்கள்.

இதன் பின்னர் பெரம்பலூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு மாறுதல் பெற்றேன். இது வட்டத் தலைநகர், சுற்றுவட்டார கிராம மாணவர்கள் பலரும் சேர்ந்து நல்ல முறையில் கல்வி கற்றனர். இப்பள்ளியின் முன்னேற்றத்திற்குப் பெரும் பங்கு ஆற்றினேன். பெண்கள் சுயதொழில் கற்று முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற ஆர்வத்தில் என் உறவினர் பாராளுமன்ற உறுப்பினர் இலாடபுரம் அய்யாக்கண்ணுவின் முயற்சியுடன் அரசு உதவி பெற்று பெண்களுக்கான இலவசத் தையல் பயிற்சிப் பள்ளியைத் துவங்கிப் பல பெண்களுக்குத் தையல் பயிற்சி, அரசு சான்றிதழ் வழங்கப்பட்டது. தூரத்து ஊர்ப் பிள்ளைகளுக்கு அரசு உதவியுடன் மாணவியர் விடுதியும் பெற்று, என் துணைவியார் சுகிர்தமணி ஊதியமில்லா விடுதிக் காப்பாளினியாக - சமூக சேவை செய்தார். பெரியார் கொள்கைப்படி விடுதியில் சாதி, மத வித்தியாசம் இன்றிச் செயல்பட்டதைப் பலரும் பாராட்டினர். ஒரு சமயம் அமைச்சர் பி.கக்கன் அவர்களைப் பார்வையிட அழைத்து வந்தேன். ‘‘உங்கள் விடுதிப்பிள்ளைகள் நெய்யில் பொரித்த பணியாரம் போல் இருக்கிறார்கள்’’ என்றார். ‘‘அப்படியென்றால் என்ன?’’ என அமைச்சரை வினவினேன். ‘‘பிள்ளைகளுக்கு சரிவிகித உணவு, சத்தான உணவு வழங்குகிறீர்கள் எனத் தெரிகிறது’’ என்றார். இது எங்கள் பணிக்குக் கிடைத்த சான்றாகும். இதில் பயின்ற பலரும் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளிலும், புதுச்சேரியிலும் அரசு ஆசிரியர் பணி கிடைக்கப் பெற்று நல்ல ஊதியம் பெற்றுப் பயனடைந்தனர்.

கு.வ. : உங்கள் பிற சமுதாயப் பணிகளைக் கூறுங்கள்.

இ.பெ.செ. : பெரம்பலூர் வட்டம் வானம் பார்த்த பூமி ஆனமையால் கிணறு ஆழப்படுத்த நிதி வேண்டும் என வட்டாட்சியரிடம் உதவி கேட்டோம். பம்பாயில் உள்ள ஒரு நிறுவனம் அமெரிக்கா உதவியுடன் கிணறு ஆழப்படுத்த கோதுமை வழங்குகிறது என்றார். நாங்கள் ஒரு குழுவாக அந்நிறுவனத்துக்கு விண்ணப்பித்தோம். அந்நிறுவனம் அரியலூர் வழியாக கோதுமை மூட்டைகளை அனுப்பியது. இதனைப் பெற்று குரும்பலூர், பூலாம்பாடி, வாலிகண்டபுரம், பெரம்பலூர் பள்ளிகளுக்கு உதவினோம். இது என்வழி பள்ளிகளுக்குக் கிடைத்த இலவச உதவியாகும்.

கு.வ. : தாங்கள் ஆசிரியப் பணியில் சாதித்தவைகளைப் பட்டியலிடுங்கள்.

இ.பெ.செ. : பட்டதாரி ஆசிரியர் கழகத் தலைவராகப் பணியாற்றினேன். செல்லமுத்து-செயலர், இ. பெரியசாமி - பொருளாளர். ஒரு நாடகம் நடத்திப், பணம் சேர்த்து, சுற்று வட்டாரப் பள்ளி மாணவர்கள், தேர்ச்சிக்கு உதவிய ஆசிரியர்களுக்குப் பரிசும், பள்ளிகளுக்குக் கேடயமும் வழங்கிக் கல்வி கற்றிட ஊக்கப்படுத்தினோம். ஆண்டுதோறும் கல்வி அதிகாரிகளைக் கொண்டு பெரும் விழாவாக எடுத்தோம். பெரியார் கொள்கை உடைய ஆசிரியர்களான சிறுகனூர் ரெங்கசாமி, ச. செவ்வண்ணன், கு. பாலகிருஷ்ணன், நடன சிகாமணி, அத்தியூர் நித்தியானந்தம், மு. அழகப்பிள்ளை ஆகியோருடன் திருச்சி பெரியார் மாளிகைக்கு அடிக்கடி செல்வோம். அய்யாவின் கூட்டத்திற்கும் செல்வோம்.

கு.வ. : தங்கள் செயல்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க செய்திகளைக் கூறுங்களேன்.

இ.பெ.செ. : பொன்பரப்பியில் உயர்நிலைப் பள்ளி கொண்டு வந்த பெருமைக்கு உரியவர் இலட்சுமண படையாட்சி என்பவராவர். இப்பகுதி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளுக்கு வழிகாட்டியாய் இருந்தார். பள்ளியில் ஆசிரியர் கழகச் செயலாளராக நான் இருந்தமையால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை அழைத்து வந்து பெருமைப்படுத்தினேன். புரட்சிக்கவிஞரை செயங்கொண்டம், செந்துறை, அரியலூர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு அழைத்துச் சென்று சொற்பெருக்காற்றச் செய்தேன். புரட்சிக் கவிஞருடன் நெருங்கிப் பழகினேன். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று பேராசிரியர் க. அன்பழகனையும் அழைத்து வந்து இலக்கிய மன்றத்தில் சொற்பொழிவாற்றச் செய்தேன். சேலம் சென்று தேவநேயப் பாவாணரை அழைத்தேன். அவர் உடல்நலமின்மையால் கீழமாளிகை தமிழ்மறவர் புலவர் வை. பொன்னம்பலனாரை அனுப்பி வைத்தார்.

பொன்பரப்பி உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களிடம் எனக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. பள்ளி இலக்கிய மன்றத்திற்கு ஆசிரியர் தான் பொறுப்பு வகிப்பார்கள். நான் அந்தப் பள்ளியை விட்டுப் போகும் வரை நான் தான் செயலாளர். மேற்கண்ட முறையில் புலவர் வை. பொன்னம்பலனாரைப் பள்ளிக்கு அழைத்து வந்தபோது வரவேற்புப் பலகையில் ‘‘சத்தியமேவ ஜெயதே!’’ என்ற சமஸ்கிருத வாசகத்தைக் கண்டார். ‘‘இந்தப் பள்ளிக்குப் பார்ப்பான் தலைமை ஆசிரியனா?’’ என்று

என்னைக் கேட்டார். ‘‘ஆம்’’ என்றேன். தலைமை ஆசிரியர் ஆதிசேஷன் வந்தார். (இவர் திருச்சி வே. ஆனைமுத்துவிற்கும் இலப்பைக்குடிகாட்டில் தலைமை ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது). ‘‘இந்த ஊரில் எத்தனை பேருக்கு சமஸ்கிருதம் தெரியும்? வரவேற்பு வளைவில் சமஸ்கிருதம் அழைப்பா? பார்ப்பான் புத்தியைக் காட்டியிருக்கிறீரே!’’ எனக் கண்டித்துப் பேசிக்கொண்டு நுழைந்தார்.

‘‘இந்நாட்டிற்குப் பிழைக்க வந்த பார்ப்பான் கோட்சே இனவெறி காரணமாக காந்தியைக் கொன்று விட்டான். சாதிவெறி கொண்ட நீங்களெல்லாம் இந்நாட்டுக்குப் பிழைக்க வந்த அந்நியரே!’’ இன்னும் எத்தனை காந்திகளை சாதிவெறி காரணமாய் கொல்லப் போகிறீர்கள்? அவர்களில் நானும் ஒருவன் பலியாகப் போகிறவனாக வந்திருக்கிறேன். நீங்கள் எல்லாம் சாதியை நிலைநாட்ட உள்ள கொலைகாரர்கள் எனக் கடிந்துரைத்துவிட்டு, இலக்கியமன்றக் கூட்டத்தில் விரிவாக உரை யாற்றினார். (என்னால் புலவர் வை. பொன்னம்பலனார் அழைக்கப்பட்டமையாலும், தலைமை ஆசிரியரை புலவர் கண்டித்தமையைத் தாங்கிக் கொள்ள இயலாத ஊர் மக்கள் சிலர், என் தலைக்கு ரூ.1000/- விலை வைத்ததாகப் பின்னாளில் அவ்வூரில் உள்ள ஒருவர் நேரில் வந்து என்னிடம் பச்சாதாபம் காட்டிப் பேசினார்).

ஆனால், இந்த நிகழ்வுக்குப் பின்னர் மூன்று மாதங்களில், கிறித்துவ ஆசிரியர் ஆரோக்கியசாமி மலேசியாவிற்கு ஆசிரியப் பணியாற்றச் சென்றபோது, ஊரே அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்திப் பரிசு அளித்துச் சிறப்பித்து அனுப்பி வைத்தனர். மாலை வேளைகளில் புதுப்புது விளையாட்டு களில் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தேன். ஊர்ப் பொதுமக்கள் கண்டுகளித்து என்னைப் பாராட்டினர். ஊர்மக்களில் ஒருவனாக, என்னை, மாறுதல் பெற்றுவரும் வரை சிறப்பித்தனர்.

கு.வ. : தாங்கள் பணியாற்றிய பள்ளியில் எந்தப் பள்ளி தங்களுக்கு ஊக்கம் அளித்தது.

இ.பெ.செ. : நான் முழுநேரப் பணியாகவும், கடுமையாகவும் உழைத்து மாணவர்கள் மற்றும் சமுதாயத்திற்கு பெரியார் வழியில் பாடுபட்டமையால் என்னை பொன்பரப்பி மக்கள் மிகவும் நேசித்தனர். சாதி பார்க்காமல் நல்ல வீடு அளித்தார்கள். ஊர்த்தலைவரும், பெரியதனக்காரர் தங்கவேல் முதலி யாரும் உதவினார்கள். வேறு பள்ளிக்கு என்னை மாவட்டக் கழகம் மாற்றிய போது, ஊர்மக்களே முயற்சித்து இந்த மாறுதல் ஆணையை இரத்துச் செய்து, திரும்பவும் பொன்பரப்பியிலேயே என்னை நிலைநிறுத்தினார்கள். ஊர் மக்கள் காட்டிய அன்பு அளவிடற்கரியது ஆகும். வயதான இந்தக் காலத்திலும் அக்காலம் பொற்காலம் என எண்ணி, எண்ணி மகிழ்வடைகிறேன்.

கு.வ. : தோழர் திருச்சி வே. ஆனைமுத்து அவர்களைப் பற்றிக் குறிப்பிடுங்கள்.

இ.பெ.செ. : தோழர் வே. ஆனைமுத்து அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ‘‘குறள்மலர்’’, ‘‘குறள் முரசு’’ இதழ்கள், தற்பொழுது மாதந்தோறும் வெளியிடப்படும் ‘‘சிந்தனையாளன்’’ மாத இதழைத், இதழ் துவக்க நாளி லிருந்து பெற்றுப் படிக்கிறேன். சிந்தனையாளன் இதழ் ஒரு சிந்தனைக் கருவூலம். பெரம்பலூருக்கு வரும்பொழுதெல்லாம் என்னையும், என் துணைவியாரையும் என் மக்களையும் கண்டு நீண்ட நேரம் உரையாடுவார். அவரது பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைக்குக் கணிசமான தொகை அளித்துள்ளேன். அவர் நமது வட்டத்தைச் சேர்ந்தவர். நீண்டகால நண்பர். நாங்கள் இருவரும் ஒத்த வயதினர். பெரும் சாதனையாக ‘‘பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்’’ - என்று அய்யாவின் சொற்பொழிவு மற்றும் கட்டுரைகளைத் தொகுத்துள்ளார், இது அளப்பரிய சாதனையாகும்.

கு.வ. : அய்யா, தாங்கள் பெரியார் பணி பற்றி முடிவாக என்ன கூறுகிறீர்கள்?

இ.பெ.செ. : பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகளைத் தொகுத்து உலகுக்கு வழங்கியுள்ள தோழர் வே. ஆனைமுத்து அவர்கள், பெரியார் ஈ.வெ.ரா. வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிகிறேன். இதனை முழுமையாக என் தோழர் ஆனைமுத்து அவர்களால் தான் திறம்படச் செய்ய இயலும் எனப் பெரிதும் நம்புகிறேன். இதனை அவர் விரைந்து எழுதி முடித்து வெளியிடப் பணிவுடன் அன்புக் கட்டளையாகக் கேட்டுக் கொள்கிறேன்.


கு. வரதராசன் : அய்யா! தாங்கள் இந்த முதிர்ந்த அகவையிலும் தங்கள் அனுபவங்களை என்னிடம் பகிர்ந்து கொண்டதற்கு மிக்க நன்றி! வணக்கம்!

இளைய பெருமாள் செயபால் : வணக்கம்! நன்றி!

- தொகுப்பு : கு. வரதராசன், பூலாம்பாடி, பெரம்பலூர் மாவட்டம்

# சூலூரில் ந.மு.நடராசன் - அங்கம்மாள் முத்துவிழா

**சூ**லூர் பாவேந்தர் பேரவையின் நீண்ட நாள் உறுப்பினரும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பொறி யாளராகப் பணியாற்றி வரும் தோழர் சூ.ந. பன்னீர் செல்வம் அவர்களின் பெற்றோர் ந.மு. நடராசன்-சூ.மு.அங்கம்மாள் இணையரின் "முத்து விழா" நிகழ்வு கள், 17-09-2017 ஞாயிறு காலை சூலூர் எசு.ஆர்.எசு. திருமண மண்டபத்தில் இனிதே நடைபெற்றது. 2009 ஆண்டில், சூலூரில் தொடங்கப்பட்ட தோழர் வே. ஆனைமுத்து அவைக்கூடம்" ந.மு. நடராசன் அவர்களின் மகிழ்வான ஒத்துழைப் புடன் உருவாக்கப்பட்டு, தற்போதும் தொடர்ந்து சமூகப் பயனில் இருந்து வருகிறது.



65 ஆண்டுகளுக்கு முன்பே எளிமையான பிற்படுத்தப்பட்ட குடும்பப் பின்னணியிலிருந்து உருவாகி வந்த அய்யா ந.மு. நடராசன் அவர்கள், கல்வி கற்று ஆசிரியர் பணி வாய்ப்புப் பெற்றவர். தாங்கள் பெற்ற அய்ந்து பிள்ளை களையும் சமூகத்தில் நல்ல நிலையில் இருத்திப் பார்க்கும் பேறு பெற்றவர்கள் ந.மு. நடராசன் - சூ.மு. அங்கம்மாள் இணையர். 1936 - ல் பிறந்த அய்யா ந.மு. நடராசன் அவர்களின் 80ஆம் ஆண்டு நிறை வையொட்டி அவர்களின் அன்பு மக்கள் போற்றிய அழகு நிகழ்வுதான் சூலூரில் முத்து விழா. சூலூர் பாவேந்தர் பேரவையின் முழுமையான மேலாண்மையிலும் புலவர் செந்தலை ந. கவுதமன் அவர்களின் சீரிய நெறியாள் கையிலும் முத்து விழா சிறப்புடன் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.

செப்தம்பர் 17 ஆம் நாள் காலை தொடர்ந்து பெய்து வந்த மழையின் வாழ்த்துகளுடன் தமிழர் கலை மரபான பெருவங்கியம் (நாதசுவரம்) இசை நிகழ்ச்சியுடன் முத்து விழா தொடங்கியது. குழந்தைகளின் தமிழிசைப் பாடல் நடனத்தையடுத்து, சூலூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவர் அய்யா சூ.ர. தங்கவேலு அவர்கள் தலைமை தாங்க, விழா நிகழ்வுகள் தொடர்ந்தன.

அய்யா ந.மு. நடராசன்-சூ.மு. அங்கம்மாள் இரு வரின் உடன் பிறந்தோர் குடும்பங்கள் மற்றும் அவர் தம் பிள்ளைகளின் குடும்பங்கள் தன் அறிமுகம் செய்யப்பட்டன. அய்யா ந. கவுதமன் அவர்களின் தலை மையில் முத்துவிழா நிகழ்வின் முத்தாய்ப்பு நிகழ்வான மாலை மாற்றி மங்கல நாண் அணிவித்தல் நடை பெற்றது.

விழாவின் அன்பு நினைவாக எங்கள் அப்பா எண்பது என்னும் சிறு மலரை அய்யா சூ.ர. தங்கவேலு அவர்கள் வெளியிட, தலைமையாசிரியர் அய்யா சூ.மீ.காளிமுத்து அவர்கள் பெற்றுக்கொண்டார்.

முன்னாள் கூடுதல் கல்வி இயக்குநர் அய்யா சூ.அ.சுப்பிரமணியம் அவர்களும் அய்யா சூ.மீ. காளிமுத்து அவர்களும் அய்யா ரா.கணபதியப்பன் அவர்களும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர். புலவர் செந்தலை ந. கவுதமன் அவர்கள் வாழ் வியல் நோக்கில் பொருள் பொதிந்த உரையாற்றினார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட அன்பர்கள் சூழ, பாச மழையாலும் வான் மழையாலும் வாழ்த்தப்பட்ட இந்த இனிய நிகழ்வு சுவையான மதிய உணவுடன் நிறைவு பெற்றது. விழுதுகளால் போற்றப்பட்ட வேர்களின் விழா வில் பங்கு பெற்றோர் தங்கள் பெற்றோர்களையும் பாங்குற கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற மன உறுதியுடன் விடை பெற்றது மகிழ்ச்சிக்கும் போற்று தலுக்கும் உரியதாகும்.

திராவிடர் இயக்கத்தின் பேருழைப்பினால் கிடைத்த பெரும் வாய்ப்பினால் பயன் பெற்றது ந.மு.நடராசன்-சூ.மு. அங்கம்மாள் அவர்களின் குடும்பம். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் முயற்சியி னாலும், தமிழ் நாட்டரசால் அறிவிக்கப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 விழுக்காடு தனி இட ஒதுக்கீட்டு வாய்ப்பு 1990 ஆண்டிலிருந்து 2002 வரை இக்குடும்பத்தின் பிள்ளைகள் அனைவரையும் கல்வி வாய்ப்பிலும் அரசுப் பணி வாய்ப்பிலும் முன்னேற்றுவதற் கான படிக்கட்டுகளாக அமைந்தன. இச்செய்தி இவ்விழா மலரில் நன்றியுடன் நினைவு கூரப்பட்டுள்ளது. இன்றைய உயர்வு நிலைக்குக் காரணமான திராவிடர் இயக்கத்தின் செயல்களை என்றென்றும் நெஞ்சில் நிறுத்தியிருப் போம் என்றும் விழா மலரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விழா மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதி உரூபா 2000 வழங்கப்பட்டது.

# காஷ்மீருக்கு சுயாட்சி அதிகாரம்

## தேசிய மாநாட்டுக் கட்சி தீர்மானம் நிறைவேற்றம்

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு சுயாட்சி அதிகாரம் கிடைப்பதற்காகத் தொடர்ந்து போராடுவோம் என்று, தேசிய மாநாட்டுக் கட்சி தீர்மானம் நிறைவேற்றி யுள்ளது. காஷ்மீர் விவாகரத்துக்கு இந்தியாவும், பாகிஸ் தானும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்றும், அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் தேசிய மாநாட்டுக் கட்சியின் பிரதிநிதிகள் கூட்டம் ஸ்ரீநகரில் 29.10.2017 ஞாயிற்றுக் கிழமை நடை பெற்றது. ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்குப் பிறகு நடை பெற்ற இக்கூட்டத்தில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட முக்கியப் பிரநிதிகள் கலந்து கொண்டனர்.

தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் ஃபரூக் அப்துல்லா, செயல் தலைவர் ஒமர் அப்துல்லா உள்ளிட் டோர் அதற்குத் தலைமை வகித்தனர்.

அதில் பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப் பட்டதாகத் தெரிகிறது. இறுதியில் சில தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

ஜம்மு-காஷ்மீரை பிளவுப்படுத்த முயலும் சக்தி களுக்குக் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாநிலத்தில் உள்ள மக்களுக்கு இருக்கும் அரசியல் சாசன உரிமைகளையும், இறையாண்மையையும் தடுக்கும் அவர்களது நடவடிக்கைகள் ஏற்புடையது அல்ல.

தற்போது காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருக்கும் சலு கைகளை சிறப்பு அந்தஸ்தாகக் கருத இயலாது. முதன் முதலில் வகுக்கப்பட்ட உண்மையான 370-ஆவது பிரிவின் அடிப்படையில் அந்த அந்தஸ்து கிடைக்கப் பெறவேண்டும்.

அதேபோன்று மாநிலத்துக் சுயாட்சி அதிகாரமும் வழங்கவேண்டும். அந்த இலக்குகளை வென்றெடுக்க தேசிய மாநாட்டுக் கட்சி அயராது தொடர்ந்து பாடுபடும்.

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும். அனைத் துத் தரப்பினருடனும் பேசி இப்பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மீண்டும் தலைவரானார் ஃபரூக்**

தேசிய மாநாடுக் கட்சியின் தலைவராக ஃபரூக் அப்துல்லா மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். இது தொடர் பாக கூட்டத்தில் தீர்மானம் முன்மொழியப்பட்ட போது, அதை அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டனர்.



இதைத் தொடர்ந்து பேசிய ஃபரூக் அப்துல்லா, ‘வயோதிகம் காரணமாக தலைவர் பதவியை என்னால் வகிக்க முடியாது என்றும் ஒமர் அப்பொறுப்புகளை ஏற்க வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தேன்; ஆனால் அதை ஒமர் ஒப்புக்கொள்ளவில்லை; என்றாவது ஒருநாள் அப்பொறுப்புகளை அவர் ஏற்றுக் கொள்வார்’ என்றார்.

- நன்றி : தினமணி, 30.10.2017

## தாம்பரம் க.விஜயன்பிள்ளை மறைவு



பெரியார் ஈ.வெ.ராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையின் புரவலர், மா.பெ.பொ.க. ஆதரவாளர் தாம் பரம் வி.இராசகோபால் மற்றும் வி.மோகன் ஆகியோரின் தந்தை க.விஜயன்பிள்ளை (வயது 90) அவர்கள் 30.9.2017 சனிக்கிழமை அன்று மறைந்தார் உடல் தகனம் மறுநாள் 1.11.2017 ஞாயிறு நடைபெற்றது. இறுதி நிகழ்ச்சியில் தாம்பரம் மா.பெ. பொ.க. சார்பில் தாம் பரம் சுப்பிரமணி, ப.வடிவேலு, கஸ்தூரி சுப்பிரமணியன், கு.கிருட்டிணமூர்த்தி ONGS ஆர்.ரவி, சூரியன் கோகுலன், ஆல்மைட்டி அரிபாபு, நவ்லின் ஜெயபால், கி.கரிபால்டி, பதுவை நடராசன், இராம கிருஷ்ணன் உள்ளிட்ட தோழர்களும், தாம் பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா மேநாள் ச.ம.உ. மீ.ஆ. வைத்தியலிங்கம் மேநாள் தாம்பரம் நகராட்சி உறுப்பினர் ஜோதிகுமார் உள்ளிட்ட ஏராள மானோர் இறுதி அஞ்சலில் கலந்து கொண்டனர்.



# தூத்துக்குடி சுயமரியாதைச் செம்மல் தமிழகச் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் தோழர் ந.தனசேகரன் மறைந்தார்

தூத்துக்குடி சுயமரி யாதைச் செம்மல், தமி ழகச் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், மா.பெ.பொ.க. மற்றும் பெரியார்-நாகம் மை அறக்கட்டளைப் புரவலர் மதிப்புக்குரிய தோழர் ந.தனசேகரன் அவர்கள், தம் 80ஆம் அகவையில், 26-10-2017 வியாழன் அன்று தூத்துக்குடியில் மறைவுற்றார் என்பதை, பொன். தினகரன் மூலம் அறிந்து திடுக்கிட்டேன்; மனம் நொந்தேன்.

மிக இளமையில், மறைந்த மாவீரர் தூத்துக்குடி கே.வி.கே.சாமியிடம் பயிற்சி பெற்றவர், தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையில் ஊறித் திளைத்தவர்.

தோழர் சங்கமித்ரா அவர்கள் வழியாக எனக்கு 2002இல் அறிமுகமானவர்; 2003 முதல் 2012 வரை ஆண்டுதோறும் என்னைத் தூத்துக்குடிக்கு அழைத்துப் பேச செய்தவர்; சிந்தனையாளன் வளர்ச்சிக்கும், பெரியார்-நாகம்மை அறக்கட்டளைக் கும் நிதி அளித்த புரவலர். அயல் நாடுகளிலிருந்து பருப்பு வகைகளை இறக்குமதி செய்து வாணிபம் செய்தவர்.

2008இல் திருமழபாடி ஆ.ஆறுமுகம் அவர் களுடன் இணைந்து, கட்சித் தோழர்கள் துணையுடன், என்னைப் பற்றிய வரலாற்று நூலான, "பெரியார் கண்ட பேரறிஞர் வே.ஆனைமுத்து" என்ற ஆய்வு நூலைத் தொகுப்பதில், ஒருவராகச் செயல்பட்டவர்; அந்நூல் வெளிவரப் பொருளுதவி செய்தவர். வெளி யீட்டு விழாவுக்குத் தலைமை ஏற்றவர். என்னிடமும் கட்சித் தோழர்களிடமும் இனிமையாகப் பழகியவர்.

அன்னாரின் துணைவியார் த.தியானேஸ்வரி இரண் டான்டுகளுக்கு முன் மறைந்த செய்தி அறிந்த வுடன், நான் நேரில் தூத்துக்குடியில் அவரைச் சந்தித்து துயரத்தைப் பகிர்ந்து கொண்டேன். அப்போதே அவர் மனம் தளர்ந்து விட்டதை அறிந்தேன்.

அவர் 6 அடி உயரமானவர்; இராச நடை நடப்பவர்; ஆணழகர்; எடுப்பான தோற்றம் கொண்டவர்; தூய வெள்ளைக் கதரில் அவரைப் பார்க்க மிகக் கவர்ச்சி யாக இருக்கும். அன்னாரின் உடல் 27-10-2017 அன்று எரிக்கப்பட்டது.

தம் தந்தையை இழந்து வருந்தும், அவருடைய மூன்று மகன்கள், த. கோகுல், த.கண்ணன், த.ரவி, ஒரு மகள் வைரமணி, மருமக்கள், உறவினர்கள் மற்றும் தோழர் பொன்.தனசேகரன் ஆகியோர்க்கு என் சார் பிலும், மா.பெ.பொ.க. சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை யும் வருத்தத்தையும் உரித்தாக்குகிறேன்.

**- வே.ஆனைமுத்து**

## மறைமலையடிகள் நூலகக் காப்பாளர் இரா.முத்துக்குமாரசாமி மறைந்தார்

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக முன்னாள் நிர்வாகப் பொறுப்பாளரும், சென்னை மறைமலையடிகள் நூலக மேலாளராக விளங்கிய வரும், ஆன இரா.முத்துக்குமாரசாமி அவர்கள், 15-8-2017 அன்று, தம் 80-ஆம் அகவையில் மறை வுற்றார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இவர், 1957 முதல் 1984 வரையில் சென்னை மறைமலையடிகள் நூலக மேலாளராக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. அதுசமயம், 1975 திசம் பரில் வே.ஆனைமுத்து ஆகிய நான், "குடிஅரசு" இதழின் முதலாவது தொகுதியை அங்கு படிக்கவும், குறிப்புகள் எடுக்கவும் எனக்கு உதவினார் என்பதை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.**

அன்னாரை இழந்து வருந்தும் அவரது குடும் பத்தாருக்கும், தமிழக நூல் பதிப்பாளர்களுக்கும், தமிழக நூலகத்துறையினருக்கும் என் சார்பிலும், மா.பெ.பொ.க. சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- வே.ஆனைமுத்து**

## வாழ்க்கை ஒப்பந்த விழா




**சு.முருகவேல் - ஏ.அமுதா**



விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தேவனந்தல் கிராமம், மு.சுப்பராயன் - இராணி இணையரின் இளைய மகன் **சு.முருகவேல்**; சென்னை மாவட்டம், பெரம்பூர் வட்டம், புளியந்தோப்பு, வ.உ.சி நகர், இரா.ஏழுமலை - தேவகி இணையரின் இளைய மகள் **ஏ.அமுதா** ஆகியோரின் இல்லற இணை ஏற்புவிழா திருவள்ளு வராண்டு 2048 துலை (ஐப்பசி) 10-ம் நாள் (27-10-2017) வெள்ளிக்கிழமை அன்று திண்டிவனம் - மரக் காணம் சாலை, சிறுவாடி, தனபாக்கியம் திருமண மண்டபத்தில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி பொதுச்செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

காலை 9.00 மணிக்குத் தொடங்கிய இவ்விழாவில் மருத்துவர் வீ.எட்டியப்பன் வரவேற்புரையைத் தொடர்ந்து தோழர்கள் கருஞ்சட்டை தி.ச. குணசேகரன், புதுச்சேரி மாநில மா.பெ.பொ.க செயலாளர் இரா. திருநாவுக்கரசு, மா.பெ.பொ.க துணைச் செயலாளர் சி.பெரியசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாணவர் இளை ஞரணிச் செயலாளர் தோழர் முனைவர் ஆ.முத்தமிழ்ச் செல்வன் நிகழ்ச்சியை நெறிப்படுத்தி வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக தோழர் வே.ஆனைமுத்து வாழ்த்துரை வழங்கி மணவிழவை நடத்திவைத்தார். மணமக்கள் வாழ்க்கைத்துணை ஏற்பு ஒப்பந்த உறுதி யேற்றுப் பத்திரத்தில் கையொப்பமிட்டனர். மா.பெ.பொ.க விழுப்புரம் மாவட்டச் செயலாளர் ஆ.கு.ஆறுமுகம், பா.வடிவேலு, இரா.பகுத்தறிவாளன் ஆகியோரும் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர். 11.00 மணிக்கு இனிதே நிறைவுற்ற இவ்விழாவிற்கு வந்திருந்து வாழ்த்திய அனைவருக்கும் மணமகனின் சகோதரர் சு.குமார் நன்றி தெரிவித்தார். பெரியார் தொண்டர் ஒருவர்கூட இல்லாத அந்தச் சிற்றூரில் நடைபெற்ற முதல் பார்ப்பனப் புரோகித மறுப்புத் திருமணம் என்பதால் சுற்றத்தினர் வியந்து மணக்களை வாழ்த்தி மகிழ்ந்தனர்.

## முனைவர் து.மூர்த்தி முதலாண்டு நினைவேந்தல் - படத்திறப்பு நிகழ்ச்சி



அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகத்தில் நவீன இந்திய மொழிகள் துறைத் தலைவ ராகப் பணியாற்றிக் கொண்டி ருந்த முனைவர் து.மூர்த்தி 24.10.2016 அன்று எதிர்பா ராத வகையில் மறைந்தார்.

து.மூர்த்தி மிகச் சிறந்த மார்க்சிய-பெரியாரிய அறிஞர். 1980களில் மா.பெ. பொ.க.வில் சென்னை மாவட்டச் செயலாளராகப் பணியாற்றியவர். தில்லியிலும் உத்திரப்பிரதேசத் திலும் மா.பெ.பொ.க. மேற்கொண்ட வகுப்புவாரி உரிமைச் சார்ந்த செயல்பாடுகளுக்கு உருதுணை யாக விளங்கியவர்.

முனைவர் து.மூர்த்தியின் முதலாண்டு நினை வேந்தல் நிகழ்ச்சி அவருடைய சொந்த ஊரான வேலூரில் டார்லிங் ரெசிடென்சி கூட்ட அரங்கில் 29.10.2017 ஞாயிற்றுக்கிழமை மேனாள் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் பொற்கோ தலைமையில் நடைபெற்றது.

பொ.காளியப்பன் வரவேற்புரையாற்றினார். க.முகிலன் து.மூர்த்தியின் படத்தைத் திறந்து வைத் தார். து.மூர்த்தியின் நினைவு மலரை மூர்த்தியின் கல்லூரித் தோழர் என்.கே.ரகுபதி வெளியிட மூர்த்தியின் அண்ணி சாந்தி பெற்றுக் கொண்டார்.

மூர்த்தியுடன் கல்லூரியில் பயின்றி தோழர்கள் பா.குமரகுரு, பி.எஸ்.ரகுநாதன், மு.சுவாமிநாதன், செம்பை சேவியர் மற்றும் மூர்த்தியின் தமக்கை மணிமேகலை கணேசன், வாலாசா வல்லவன், முனைவர் ஜெயசீலி, சீ.த.செந்தாமரைக்கண்ணன் மூர்த்தியின் மாணவர் முனைவர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர். மூர்த்தியின் அண்ணன் து.அரங்கநாதன் நன்றி யுரையாற்றினார். மூர்த்தியின் ஆசிரியர் தி.வ.மெய் கண்டார் நடத்தும் இளந்தமிழன் இதழுக்கு ரூ.5000/- சிந்தனையாளன் இதழுக்கு ரூ.5000/- து.அரங்கநாதன் வழங்கினார்.

# பேரறிஞர் பெரியார் தொண்டரின் பெருந்தன்மை

*2009, செப்டம்பர் 10இல் திருவல்லிக்கேணி, சேப்பாக்கம், 19 முருகப்பா தெரு, சிந்தனை யாளன் அலுவலகத்தில் பெரியார் சிந்தனைகள் தொகுப்பு அச்சுக்கோப்பு வேலைகள் நடந்து கொண்டிருந்தது. நானும் அலுவலகத்தில் பெரியார் சிந்தனைகள் முன்பதிவு மற்றும் அலுவலக வேலை களை செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது, வே.ஆனைமுத்து அய்யா கையில் பெரியார் சிந்தனைகள் தொகுப்பிலிருந்து கள்ளத்தனமாக 2 தொகுதிகளின் நகலை கணினியிலிருந்து எடுத்து தஞ்சாவூரில் வெளியிடப்பட்ட புத்தகம் இருந்தது. நானும் உண்மையில் மனவருத்தப் பட்டு, இப்படிப்பட்ட கயவர்கள் உள்ள நிலையில், இனி நம்முடைய பெரியார் சிந்தனைகள் முன் பதிவில் பாதிப்பு ஏற்படும் என்று எண்ணி வே. ஆனைமுத்து அய்யாவிடம் “இப்படி நம் வெளி யீட்டுத் தொகுப்பிலிருந்து இரண்டு தொகுதிகளை கணினியில் கள்ளத்தனமாக நகல் எடுத்து வெளி யிட்டுள்ளனர்; இனி நம் முன் பதிவில் பாதிப்பு ஏற்பட்டுவிடும்” என்று கவலையுடன் கேட்டேன். உடனே அய்யாவும், “உனக்கு வக்கில்லை; நீ அவர்கள் வெளியிடும் முன்பே வேலையை முடித்து வெளியிட்டிருக்க வேண்டும்” என்று கோபமாகக் கூறினார். சிறிது நேரத்தில் அய்யா, “அவர்கள் வெளியிட்டால் உனக்கென்ன கசக்கிறது; நீ ஏன் வருத்தப்படுகின்றாய்; அவர்கள் மூலம் பெரியாரின் சிந்தனைகள் பலருக்கும் போய் சேருகின்றது; கவலைப்படாதே!” என்று சிரித்துக் கொண்டு பெருந் தன்மையுடன் கூறினார். அய்யா கூறியதைக் கேட்டதும் நான் கவலையிலிருந்து விடுபட்டு, நமக்குப் பாதிப்பிலும் பெரியார் சிந்தனைகள் பரவு வதை பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்ட வே.ஆனைமுத்து அய்யாவின் பெருந்தன்மையை நினைத்து மனநிறைவு அடைந்தேன். அன்று.*

- உழவர் மகன் **ப. வடிவேலு**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி நவம்பர்-2017

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **சீனி தமிழ்மணி** | காஞ்சிபுரம் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **சம்பந்த சிவகுமார்** | காஞ்சிபுரம் | 500/- |
| **முருகவேல்-அமுதா** | விழுப்புரம் | 500/- |
| **ச.கோ.இராசன்** | சென்னை | 500/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **கே.அப்துல் சத்தார்** | மேடவாக்கம் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. சகுந்தலா குப்புசாமி | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - நவம்பர்-2017

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Community Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.2B/85, K.S.R.Nagar, M.W.P. 2nd Cross Street, Ambattur, Chennai-53. Editor : **V. ANAIMUTHU**